

1128
1128
3-55
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 SEP 1955
MADRAS
N211, N53UA
N55.3-5
197213

use Germex for all SKIN DISEASES
இருமிநாசமளிக்கும்
ஆற்றும் தன்மையுள்ள
ஜெர்மெக்ஸ்
சிராய்ப்புகள், வெட்டுகள், படை, சொரி, கரப்பான், கட்டிகள், கடி விஷக்கடி சதைத் தடிப்பு, முகப்பரு போன்ற இதர சரும உபாதைகளுக்கு
Skin Disorders Quickly relieved with GERMEX
எல்லா சரும உபாதைகளுக்கும் ஹிதமளிக்கும் பிரத்யேக மருந்து மூலிகைகளும் இருமி நாசத்துவ மருந்துகளும் விஞ்ஞான முறைப்படி கலந்து தயாரிக்கப்படும் சிறந்த சரக்கு இது. மிருதுவான சருமத்துவாரங்களுக்குள் ஊடுருவச் சென்று, புது ஆரோக்கியமான சருமம் வளர ஜெர்மெக்ஸ் உதவி செய்கிறது. ஜெர்மெக்ஸ் மிருகக்கொழுப்பற்றது என்பதற்கு உண்மையான உத்தரவாதம் அளிக்கிறோம்.
படை வியாதி
வலிக்கும் கட்டிகள்
அரிக்கும் தடிப்புகள்
விஷத் தன்மையான வெட்டுகள்
முகப் பருக்கள்
★ இருமியை கொல்லுகிறது
காயத்தை ஆற்றுகிறது
லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பார்மசூடிகல்ஸ் லி-ட்.,
சென்னை-2.

TVS

எமது

சேவை

இருபத்தைந்து வருடங்களுக்கு மேல், ஜெனரல் மோட்டார்ஸ் (G. M. I.) கார், பஸ், லாரிகள் விநியோகித்து, தேவையான வசதிகளையும், **உறுப்புகளையும்** வழங்குகிறோம்.

எமது

உறுதி

ஜெனரல் மோட்டார்ஸ் (G. M. I.) நம் நாட்டிலிருந்து விலகியதால், அவர்கள் மேற்கொண்டிருந்த **உறுப்பு விநியோகத்தை** நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளோம். செவர்லே, வாக்ஸால், ப்யூக், பாண்டியாக், காடிலாக், ஓல்ட்ஸ்மொபைல், ஒபெல், பெட்போர்டு, ஜி. எம். ஸி. கார், பஸ், லாரிகளுக்கு வேண்டிய உறுப்புகளை நாங்கள் உடனடியாக வழங்குவோம்.

தென்னிந்திய விநியோகஸ்தர்கள்:

டி.வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ் லிமிடெட்

தலைமை ஆபீஸ்: மதுரை.

திருச்சிராப்பள்ளி — திருநெல்வேலி — புதுக்கோட்டை — சேலம் — கோயமுத்தூர்.

சுந்தரம் மோட்டார்ஸ் லிமிடெட்

சென்னை-6.

மதராஸ் ஆட்டோ ஸர்விஸ் லிமிடெட்

சென்னை — பெங்களூர்.

TVS2 61 ATM

ஒரு தோலா, ஒரு பலம் டின்களில்
எங்கும் கிடைக்கும்
காரியாலயம்: 201, தங்கசாலை, சென்னை—1

உன்னத நடிப்பு
உணர்ச்சி செறிந்த கட்டங்கள்
உயர்தர ஹாஸ்யம்
எல்லாம் நிறைந்த
இணையற்ற சித்திரம்
A.C. பிள்ளை அளிக்கும்
வைத்தியா பிலிம்ஸ்
மங்கையர் திலகம்
டைரக்ஷன்·பிரசாத்
தயாரிப்பு·ஸ்ரீபாத சங்கர்
RKF
WORLD RIGHTS CONTROLLED BY.......
ராதாகிருஷ்ண பிலிம்ஸ் லிட்,
சேர்மேன்·S.குமாரஸ்வாமி ரெட்டியார் (H.O. ஆலப்புழை)
34-தியாகராயா ரோடு,.... மதராஸ்-17.
சென்னை.......
சித்ரா
பிரபாத்
ஸரஸ்வதி
மற்றும் தமிழ்நாடெங்கும்
E.P.
BAKTHA.

பிரஸிடென்ட்

வெஜிடபிள் ஹேர் ஆயில், ஸ்னோ, டால்கம் பவுடர் தான், மிகவும் சிறந்தது என, என் அனுபவத்தில் கண்டு கொண்டேன்.

(Sd.) சாவித்திரி.

தயாரிப்பாளர்கள் :

ராதேதோட் டிரேடிங் கம்பெனி,

சென்னை-1.

எனது இனப்பெயர்—தமிழன்
எனது தாய்நாடு—தமிழ் நாடு
எனது கோரிக்கை—தமிழரசு
எனது கொள்கை—சோஷலிஸம்
எனது பண்பு—தெய்விகக் கலாச்சாரம்
எனது குடும்பம்—இந்திய சமுதாயம்
எனது சமரசநெறி—சர்வதேச சகோதரத்துவம்

உமா

ஆசிரியர் :
ஜி. உமாபதி

துணை ஆசிரியர் :
பூவை எஸ். ஆறுமுகம்

செடி 3 மலர் 5	செப்டம்பர் 1955	மன்மத ௵ ஆவணி ௴

பொருளடக்கம்

எல்லைப் போராட்டத்திலே...	தலையங்கம்	 9
கோவாவிற்கு விடுதலை	—	 10
உங்களுடன் ஒரு கணம்	—	... 11
வெற்றிலை பாக்கு	—	 12
ஏன் சேர்ந்தேன்? (தம்பிக்கு)	'பதி'	 13
சருகு (கவிதை)	வி. துரைசாமி	 16
தளிர் (கவிதை)	துறைவன்	 17
எங்கள் இதயங்கள் பேசுகின்றன	—	... 18
ரா. பி. சேதுப் பிள்ளை (பேட்டி)	பூவை எஸ். ஆறுமுகம்	... 19
ரங்கூன் கமலம் (தொடர் கதை)	'எல்லார்வி'	 23
அந்தித் தாமரை	'பூவை'	 32
இதயம் திறந்தது	கே. ஆர். கௌசல்யா	 39
மதிப்புரை	'பிறைசூடி'	 44
புத்தரின் புன்னகை	'ரதி'	 45
கோஹினூர் (சிறுவர் தொடர் கதை)	பாலா	 50
என் முதல் கதை	அகிலன்	 55
கள்ளனுக்குக் கள்ளன்	வேம்பு	... 57
மனப் புயல் (தொடர் கதை)	யோகி சுத்தானந்த பாரதியார்	... 63
பட உலகம்	'பைரவி'	... 71

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம்
கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

உமா

197213

கல்லூரி மாணவர் - மாணவிகள் சிறுகதைப் போட்டி :

முதற் பரிசு ரூ. 250
இரண்டாம் பரிசு ரூ. 150
மூன்றும் பரிசு ரூ. 100

முடிவு தேதி: 31–12–'55

சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களுக்குட்பட்ட கல்லூரி மாணவர்–மாணவிகள் மட்டுமே இப்போட்டியில் கலந்து கொள்ள முடியும். வரும் அக்டோபர் 'உமா'வில் வரிசை எண்ணுடன் வெளியாகும் போட்டிக் கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்பப்பெறும் கதைகள் மாத்திரமே இப்போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும். அறிஞர்கள் முன்னிலையில் பிரத்தியேகமான விழா நடத்திப் போட்டியில் வெற்றி பெறுவோருக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

தமிழ் நாட்டுப் பண்பாட்டுடன் கதைகள் அமைய வேண்டும். கதைகளைக் கல்லூரித் தலைவரின் கையொப்பத்தோடு அந்தந்தக் கல்லூரியின் தமிழ் மன்றத்தின் மூலம் அனுப்புவது அவசியம். ஒருவர் மூன்று கதைகளுக்கு மேல் அனுப்பக் கூடாது.

கதைகள் தமிழாக்கமாகவோ, தழுவலாகவோ இல்லாமல் புதிய சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும். கதைகள் ஆசிரியரின் சொந்தக் கற்பனை என்பதற்குரிய உறுதி மொழியும் இணைக்கப்பட வேண்டும்.

போட்டிக்குக் கதைகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி: "கல்லூரி மாணவர் - மாணவிகள் சிறுகதைப் போட்டி, 'உமா அலுவலகம்'; த. பெ. எண் 1377; சென்னை–1."

போட்டியில் பரிசு பெறும் கதைகள், பிரசுரத்திற்குத் தேர்வு பெறும் கதைகள் ஆகியவற்றின் முதல் பிரசுர உரிமை 'உமா' அலுவலகத்திற்கே உரியது. பரிசுக்கோ, பிரசுரத்திற்கோ தகுதி பெறாதவற்றைத் திரும்பப் பெற விரும்புவர்கள் போதிய தபால் தலைகளை அனுப்ப வேண்டும்.

உமா அலுவலகத்தின் சார்பில் நிறுவப்பட்டு அடுத்த இதழில் அறிவிக்கப்படும் ஐவர் கொண்ட தீர்ப்புக்குழு போட்டியின் முடிவை நிர்ணயிக்கும்.

எல்லைப் போராட்டத்திலே...!

மதிப்பிற்குரிய சென்னை அரசினரைப் பாராட்டுகிறோம். ஆகஸ்ட் 24-ம் நாள் எல்லைப் போராட்டம் சட்டசபை முன் நடக்குமென்று செய்திகள் தூது சொல்லக் கேட்டதும், 'புத்திசாலித்தனமான விழிப்பு' ஏற்பட்டது நம் சென்னை அரசாங்கத்துக்கு.

ஆந்திர சர்க்காருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி, எல்லைப் பிரச்சினைக்கு நல்ல முடிவு காட்டுவதாக திரு சி. சுப்பிரமணியம் கொடுத்த உறுதி மொழியின் பேரில், தலைவர் ம. பொ. சி.யின் ஆணைக்கிணங்க இந்த வடக்கெல்லைப் போராட்டம் ஒத்தி வைக்கப் பட்டிருக்கிறது-ஆம், தற்காலிகமாக. 'தற்காலிகமாக' என்ற ஷரத்துக்கு உயிர்க்காலம் இவ்வாண்டு டிசம்பர் கடைசி வரை!

எல்லைப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க 'எல்லைக் கமிஷன்' அனுப்புவதாக நம் பாரதப் பிரதமர் நேருஜி கடந்த இரண்டாண்டுகளிலும் கொடுத்த வாக்குப் பொய்த்ததன் விளைவுதான் இந்த ஆகஸ்ட் எல்லைப் போராட்டம்.

அன்று தலை நகர் பற்றிய பிரச்சினை மத்திய அரசாங்கத்தில் எழுந்தபோது, 'இப்பிரச்சினை நேர்மையான முறையில் தீர்க்க ஆவன செய்ய வேண்டும்; இல்லையேல் என் ராஜினாமாவைச் சமர்ப்பிக்கின்றேன்' என்று சொன்னார் தலைவர் ராஜாஜி அவர்கள். அது போல, இன்று திரு சுப்பிரமணியம் அவர்கள் எல்லைப் பிரச்சினைக்கு நல்வழி காட்டி, நம் கோரிக்கையை நேருஜிக்கு எடுத்துரைத்து, பிரச்சினை வெற்றி பெற ஆவன செய்வாரென்றால், தமிழ் மக்கள் நிதி அமைச்சரின் பெயரில் பெரு மதிப்பும் நல்லெண்ணமும் கொள்வர் என்பது நிச்சயம்.

திரு சி. சுப்பிரமணியத்திடம் திரு ம. பொ. சி. பேசும் போது சென்னையுடன் சேரவேண்டிய ஏழு தாலுக்காக்களைப் பற்றிக் குறிப்பிட்ட நிபந்தனைகளின்படி தமிழ்நாடு வடக்கெல்லைக் குழுவினரையும் கலந்து, சென்னை அரசாங்கம் ஆந்திர அரசாங்கத்தோடு பேசிச் சமரசம் காணுமென்று நாங்கள் நம்புகிறோம்.

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' தன் எல்லைக் கோட்டிலே தமிழ்க் கொடியினைப் பறக்கவிடும் பொன்னாளை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றோம்.

இப்பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால், தலைவர் ம. பொ. சி. அறிவித்தபடி மீண்டும் நேரடி நடவடிக்கை தொடங்கப் பெறும் என்பதும், தமிழர்கள் அறப்போர் நடத்தித் தம் எல்லையைக் கைப்பற்றிக் கொள்ளத் தவறவே மாட்டார்கள் என்பதும் உறுதி.

கோவாவிற்கு விடுதலை

இந்திய சுதந்தரத் திரு நாளாகிய ஆகஸ்ட் 15-ஆம் தேதி கோவாவில் போர்த்துகீஸியர் நெஞ்சு கொதிக்க வைக்கும் வெறியாட்டம் ஆடிவிட்டார்கள். இருபதாம் நூற்றுண்டில்தான் நாம் வாழுகிறோமா, அல்லது இரத்தப் பசி கொண்ட வெறியர்கள் யுகமொன்று பிறந்து விட்டதா என்று அதிசயப்படும் வண்ணம்— ஆத்திரப்படும் வண்ணம், ஜெனரல் டயரின் வாரிசாய் நின்று டாக்டர் ஸலாஜர் படுகொலை நிகழ்த்தி விட்டார். இருபத்திரண்டு சகோதரர்கள் இன்னுயிர் ஈந்தனர். அவர்கட்கு நம் இதயாஞ்சலிகளைக் காணிக்கை வைக்கிறோம்.

"நல்லுயிரீந்தும் கொடியினைக் காப்பேன்" என்ற உறுதியுடன் ஒரு விராங்கனை— திருமதி சுபத்ராபாய் சாகர்- துப்பாக்கிக் குண்டுகளைத் துச்சமாக மதித்து முன் சென்று, தியாகத்தின் பரிசேற்றுக் குற்றுயிராய்க் கிடக்கிறார். அவர் வரலாறு இந்தியச் சரிதத்தில் ஒரு பொன் ஏடு.

"தனுவுண்டு காண்டிபம் அதன் பேர்" என்ற அர்ஜுனனை, "கட்டுண்டோம்; பொறுத்திருப்போம்; காலம் மாறும்" என்று கூறிச் சமாதானப் படுத்தினர் தருமர். "போலீஸ் நடவடிக்கை எடுப்பது தான் வழி" என்று சினம் பொங்கிக் கூறும் நம்மிடம், "நம் நாட்டுச் சுதந்திர இயக்கத்தின் பொன்னேடுகளைப் புரட்டிப் பாருங்கள். அது போன்று அமைதியான அறப்போர் முறைகளாலேயே இந்தச் சிறு பிரதேசத்தையும் விடுவிப்போம்!" என்று நேருஜி, தர்மர் வழி மிதித்துக் கூறுகின்றார்.

காலாவதியான பழைய ஒப்பந்தங்கள், கம்யூனிசப் பூச்சாண்டியின் பயத்தினால் ஏற்பட்ட சமீபத்திய உடன்படிக்கைகள்—இவற்றின் நிழலிலே போர்ச்சுகல் நாடு ஒண்டிக் கொள்ள முயல்கிறது. நேருஜியின் பொறுமையைச் சோதித்தோ, அன்றி அவரது அன்பு வழியைத் தவருகப் புரிந்து கொண்டோ, மேற்கு வல்லரசுகள் போர்ச்சுகலுக்கு ஆதரவை நல்குமேயானால், ஆசியாவின் அவநம்பிக்கைக்கு—ஏன் ஆத்திரத்திற்குப் பாத்திரமாக நேரிடும்.

கோவா விஷயத்தில் இந்தியாவின் கோரிக்கை நியாயமானது என்பது பற்றியும், நேருஜியின் சமாதான ஆர்வத்தின் சிறப்புப் பற்றியும் யூகோஸ்லேவியா, பர்மா, சைன நாட்டுத் தலைவர்கள் பாராட்டி யிருக்கிறார்கள்.

போர்ச்சுகலுடன் பூண்ட ஸ்தானிக உறவுகளை இந்தியா ரத்து செய்துவிட்டது. இன்னும் நிலைமை சீர்கேடடைவதற்குள் போர்ச்சுகலுக்கு நல்ல புத்தி உதயமாகி, அதன் கொடுங்கோலாட்சிக்கு 'மங்களம்' பாடி, கோவாவுக்கு விடுதலை அளிக்கும் என்று எதிர் பார்க்கிறோம். இல்லையென்றால், நமக்குரிய கோவாவை அடையும் வழியில் அடைந்தே தீருவோம் என்றும் போர்ச்சுக்கீஸியருக்கு எச்சரிக்கை விடுக்கின்றோம்!

பாரதியார் நினைவு நாள்

இன்று தமிழ் வாழ்கிறது; தமிழ்க்குலம் தழைக்கிறது - இந்நிலைக்கு அடித்தளம் பரப்ப அன்று ஒருவன் தேவைப்பட்டான். தமிழ் நாட்டின் நற்பேறு அந்த ஒருவன் தக்க வேளையில் பிறந்தான். அவனிடம் நெஞ்சுரம் இருந்தது; தேச பக்தி கனல் கக்கியது; நாட்டின் விடுதலை வெறி அவனை ஆட்டிப் படைத்தது; சமூகச் சீர்திருத்தம் அவன் லட்சியமாக அமைந்தது. புதுமைப் பெண்ணைப் படைக்கக் கனவு கண்டான். அவனுள் புது உலகம் சுழன்றது. புரட்சிக்கவியா

ஞன்; புதுமைக் கவியானன்; இறுதியில் அமரகவியாகி விட்டான். அக் கவிதான் திரு சுப்பிரமணிய பாரதியார்.

பாரதியார் திருநாள் நாளது செப்டம்பர் 11-ம் தேதி தமிழகமெங்கும்-கடல் கடந்து தமிழ் ஒலிக்கும் பகுதி எங்கணும் கொண்டாடப்படுகிறது. பாரதியின் பாக்கள் ஒவ்வொரு இல்லத்திலும் தமிழ் முழக்கம் செய்ய வேண்டும். தமிழ்ப் பண்பாடு வளர பாரதி காட்டிய சீர்திருத்தப் பாதையை எல்லோரும் பின்பற்ற வேண்டும். 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்று அவர் கண்ட கனவு வெற்றி பெற்ற நனவாக வேண்டும். 'நீலத் திரைக்கடலோரத்திலே நின்று நித்தம் தவம் செய் குமரி எல்லை—வட மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு' என்றிசைத்த அவருடைய எழுச்சிப் பாடலை இச் சந்தர்ப்பத்திலே நாம் அனைவரும் மனப் பாடம் செய்து கொள்ள வேண்டும்! ★

உங்களுடன் ஒரு கணம்...

'உமா'வைப் பிரித்தவுடன் புதிய செய்திகளை அன்பர்கள் எதிர்பார்ப்பது இயற்கை. கல்லூரி மாணவர் - மாணவிகள் சிறு கதைப் போட்டி ஒன்றை ஆரம்பித்திருக்கின்றோம். போட்டி பற்றிய முழு விவரங்களைப் பிறிதொரு பக்கம் சொல்லும்.

அடுத்த இதழில் 'ஐவர் சந்திப்பு' என்ற புதிய சிறு கதைத் தொடர் தொடங்குகிறது. 'ஆலவாய் அழகி' என்ற அந்நீண்ட கதையை உருவாக்குபவர்களின் பெயர்கள்: **வாசவன், கணேயாழி, வ. சா. நாகராஜன், ஜடாதரன், பூவை எஸ். ஆறுமுகம்.** இந்த ஐவரும் கதையை உருவாக்கி, பிறகு ஒவ்வொருவராகக் கதையைப் பின்னிச் சென்று முடிப்பார்கள். வரும் இதழில் 'வாசவன்' கதைக்குப் பிள்ளையார் சுழி இடுவார்.

கீரனூர்ச் சிறப்பு வருணனையுடன் 'ரங்கூன் கமலம்' தொடர் கதை. இவ்விதழில் ஆரம்பமாகிறது. திரு 'எல்லார்வி' அவர்கள் கதையுறுப்பினர்கள் எல்லோரையும் இவ்விரு அத்தியாயங்களில் அறிமுகம் செய்து வைத்திருக்கிறார்.

'கோஹினூர்' சிறுவர் - சிறுமியர்க்கெனத் தனித்து வரும் தொடர் கதை. 'பாலா' யார் என்று நேயர்கள் சிலர் கடிதங்கள் வாயிலாக ஆவல் பொங்கக் கேட்கிறார்கள். கதையைக் கவனமாகப் படித்துக் கொண்டு வாருங்கள் - 'பாலா' யாரென்று ஊகிக்கலாம்!

தமிழ்ப் பேராசிரியர் திரு ரா. பி. சேதுப் பிள்ளை அவர்களின் பேட்டி சுருக்கமான தென்றாலும், ஒரு சில புதிய விஷயங்களையும் அது தெரிவிக்காமல் இல்லை.

திருச்சி அன்பர் திரு பி. வி. அகிலாண்டம் அவர்களின் புனைப் பெயர் அகிலன். 'பெண்'. 'நெஞ்சின் அலைகள்', 'நிலவினிலே', 'வாழ்வு எங்கே?' போன்ற இப் பெயர்களை எழுத்துலகம் ஒருகாலும் மறக்க முடியாது. முதற்கதையில் இரண்டு கிளைகள் பிரிகின்றன. சுவையான இன்ப நினைவு.

'தம்பிக்கு' கட்டுரைத்தொடரின் ஒவ்வொரு பகுதியிலும் கருத்தாழம் நிரம்பிக் கிடக்கும் என்பதை மாத்திரம் சொல்லிக் கொண்டு நிறுத்திக் கொள்கிறேன். 'பூவை' எழுதிய 'அந்தித் தாமரை' இவ்விதழில் நிறைவு பெறுகிறது.

'மனப் புயல்' தொடர்கதை முடிவடைகிறது. யோகி சுத்தானந்த பாரதியார் அவர்களுக்கு எங்கள் நன்றி உரியது. வணக்கம்.

ஆசிரியர்.

கொடி எரிப்புப் போராட்டம் மண்ணைக் கவ்வி முடிந்ததும், பெரியார் அடுத்த ஒரு நாடகத்திற்கு இப்போது ஒத்திகை பார்க்கவும் முனைந்திருக்கிருர். கோவாப் போராட்டத்தில் நேருஜி கடைப்பிடிக்கும் அறவழியைக் கேலி பண்ணுவதற்கென அவர் அடுத்த சவாலை விட்டிருக்கின்ருர். 'நேரு கோவாவுக்குள் புகுந்தால் நானும் புறப்படுவேன்!' என்று ஈ. வே. ரா கூறும் கூற்றில் உண்மை நடப்பு இருந்தால், கட்டாயம் அவர் பெயருக்குப்பின் 'பெரியார்' பட்டத்தைச் சூட்ட எல்லோரும் தயாராயிருப்பார்கள்!

*

அண்மையில் நம் கவர்னர் திரு ஸ்ரீபிரகாசா அவர்கள் தமிழில் கையெழுத்திடப் பழகியிருக்கிருர். தமிழில் பேசத் தெரியவில்லையே என்று குறைவேறு பட்டிருக்கிருர். நம் கவர்னருக்கு தமிழ் 'மோகம்' பிறந்திருக்கும் வேளையும் தக்க சமயமே தான். அப்பொழுதுதானே கல்லூரிகளிலே தமிழில் போதனை முறை நடைபெறவும், தமிழ் ஆட்சி ஆகவும் அவர்பங்கிற்குச்செயலாற்ற முடியும்.

*

பி. ஸி. ஜி. பற்றிய வாதப்பிரதிவாதங்கள் ராஜாஜி அவர்களிடமிருந்தும், நம் அரசாங்கத்திடமிருந்தும் பெருவாரியாகப் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பி. ஸி. ஜி. என்னவோ இப்போது பலருக்கு சிம்ம சொப்பனமாகி விட்டது. டி. பி. என்ற சொல் காரணமோ? அரசாங்கத்தின் விடாப்பிடிக் கொள்கை காரணமோ? இல்லை, இரு தரப்பிலும் வெளிவந்திருக்கும் 'சரி—தப்பு' துண்டுப் பிரசுரங்கள் தாம் காரணமோ? ஆனால் ஒன்று- இந்த பி. ஸி. ஜி. பொது மக்களை எவ்வகையிலும் துன்புறுத்தாமலிருக்க வேண்டும் என்று கவலைப் படுகிருர் திருவாளர் பொதுஜனம்.

*

இந்தியாவிலுள்ள இந்தோனேஷியத் தூதர் திரு போலார் சமீபத்தில் பஞ்சாபி நடனம் ஒன்றை ஆடிக் காட்டினர். இந்தியாவுக்கும் இந்தோனேஷியாவுக்கும் உள்ள நட்புறவைப் பலப்படுத்த இந்த நடன வைபவம் நல்ல அறிகுறியாக அமையட்டுமே! ★

மேலட்டைச் சித்திரம்:

ஊடலுக்கு வாழ்த்து !

தண் புனலாடித் தளர்நடை பழகிக் குடமும் கையுமாக வருகின்ருள் அத் தலைமகள். நெஞ்சில் ஆயிரம் சிந்தைகள்; நினைவில் ஆயிரம் கனவுகள். எல்லாம் எதைப்பற்றித் தெரியுமா?— தலைமகனுக்கும் தலைமகளுக்கும் நடந்த அந்த ஊடல் குறித்துத்தான்! ஊடற் காலத்தே தன் நாயகன் செய்த கருணை குறைவு பட்டாலும், அது அவளுக்குப் பெருமைதானும்!

"ஊடலில் தோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்." (குறள்— காமத்துப்பால்)

ஏன் சேர்ந்தேன்?

அன்புள்ள தம்பி,

பல மாதங்களாகவே நான் உனக்குக் கடிதங்கள் எழுதாமல் இருந்தது உனக்கு மன வருத்தத்தைத் தருமென்பது எனக்குத் தெரியும். அதற்குக் காரணம், நீ என்னைக் கேட்டிருந்த கேள்விகள் தான்.

'என்ன அண்ணா, இத்தனை ஆண்டுகளாக காங்கிரஸில் சேவை செய்து விட்டு, இப்படித் திடீரென்று அதை விட்டு வெளியேறி விட்டீர்களே? உங்களைப் போன்றவர்கள் வெளியேறிய காரணத்தால்தான், சுய நலக்காரர்களும், பஞ்சமா பாதகங்களைத் துணிந்து செய்த திடீர்த் தேசபக்தர்களும் பதவி என்ற ஒரே காரணத்திற்காக அந்தப் புனிதமான காங்கிரஸ் மகாசபையில் நிறைய இடம் பெற்றுவிட்டார்கள்' என்ற உன் குற்றச் சாட்டுக் கடிதத்தைக் கண்டு நான் ஒரு விதத்தில் சந்தோஷமும் மற்றொரு விதத்தில் மன வேதனையும் அடைந்தேன். அந்த மகா சபையை விட்டு வெளியேறியதற்குக் காரணங்கள் சொல்கிறேன், கேள்:

வெளியேறியவர்களில் நான் ஒருவன் மட்டு மல்ல, தமிழகத்திலே எத்தனையோ தேசபக்தர்கள் தன் தாயகமான தமிழகத்தின் சிறப்பை எண்ணியே காங்கிரஸிலிருந்து வெளியேறி யிருக்கிறார்கள்.

அதனால் (சென்னையில் மட்டும்) காங்கிரஸ்காரர்களாக இல்லையே என்ற பொருள் படலாமே தவிர, நாங்கள் தேச பக்தர்கள் இல்லை என்று எவராலும் கூற முடியாது. நான் பின்பற்றும் அந்தத் தலைவரின் குணச் சிறப்புகளைப் பற்றி நீ ஏற்கனவே அறிந்திருப்பாய். அடக்கமே பொருளாகக் கொண்டவர்; அடக்கத்தின் மிக்க செல்வம் இல்லையென்ற உறுதிபூண்ட உத்தமசீலர். தன்னைப் பின்பற்றுபவர்களைப் புன் முறுவல் பூக்க வரவேற்கும் பண்புபடைத்தவர். அவரிடத்திலே பொன், பொருள் கிடையாது. ஆனால் அவரிடம் புகழ் உண்டு; ஆக்க சிந்தனை அதிகம் உண்டு. இத்தகைய மாண்பு படைத்த தலைவர் எங்கள் ம. பொ. சி. இவரைப் பின்பற்றும் எண்ணற்ற தொண்டர்களை பைத்தியக்காரர்களாக எண்ணலாம்.

ஆனால், என்றாவது ஒரு நாள் அவரைப்பூரணமாக அறிந்து வரவேற்றுத்தமிழ்த் தாயின் அரியாசனத்திலே இத் தமிழ் நாடு அமர்த்தாமல் போகாது என்பது மாத்திரம் உறுதி. ஆனால் இத்தகைய ஆடம்பரங்களை அவர் விரும்புகிறாரா? இல்லை.

தலைவர் ம. பொ. சி. அவர்கள் சொல்லுவதெல்லாம் இது தான், தம்பி: விடுதலை அடைந்து எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. மற்ற மற்ற மாகாணங்கள் அனைத்தும் தத்தம் தாய் மொழியிலேயே ஆட்சி செலுத்துகின்றன. அந்நிலை நம் மாகாணத்துக்கும் ஏற்பட வேண்டும்.

நம் நாட்டின் தொழிலாளருக்கு ஊதிய உயர்வு கிடைக்கிறதே தவிர, உத்தியோக உயர்வு கிடைப்பதில்லை. காரணம், அந்நிய மொழியான ஆங்கிலத்தை அறியாததால். பல ஆண்டுகள் ஒரு தொழிலில் வேலை செய்யும் தொழிலாளி, தன் தாய் மொழியில் ஆற்றல் படைத்து தொழில் நுணுக்கங்களை அறிந்திருந்தால், அவனுக்கு உத்தியோக உயர்வு கிடைக்க ஆவன செய்ய

வேண்டும். நம் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளும் தமிழ் மக்கள் தம் தாய் மொழியிலேயே கடிதப் போக்குவரத்தை அமைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது அவர்கள் தங்களுடைய குறைகளை வழக்கறிஞர் மூலமாகவோ, ஆங்கிலம் அறிந்த தரகர் மூலமோ சொல்லாமல், தாங்களாகவே நிவர்த்தித்துக் கொள்ளும் அரிய வாய்ப்பைப் பெறுவார்கள் என்பதும் நிச்சயம். ஆங்கிலம் படித்த அறிஞர்கள் ஆங்கிலம் இருக்கும் இடத்தில் ஹிந்தி கூடாது என்று சொல்கிறார்களே தவிர, அவ்விடத்தில் கட்டாயம் தமிழ் மொழி இருக்க வேண்டுமென்று கூறத்துணியவில்லை. ஆங்கிலம் ஆக்கிரமித்துள்ள இடங்களிலெல்லாம் தமிழ் ஆட்சி புரிய வேண்டும். கல்லூரிகளில் தமிழில் போதனை முறை நடைபெறவும் உத்தியோக உயர்வுப் பரீட்சைகளில் தமிழே முதன்மையாகக் கையாளப் படவும் அவசியம் ஆவன செய்ய வேண்டும்.

அன்புத் தம்பி, உலக அரங்கிலேயே கலாசாரத்தில் தமிழகம் என்றுமே உயர்ந்து வாழ்ந்து வந்தது. அன்பும் அறமும் பண்பும் வளர்ந்த இத் தமிழகத்திலே இன்று அனாசாரக் கூட்டத்தினர் சிலரால் அவை அழிவுறாமல் காப்பாற்றப் படல்வேண்டும். ஆந்திரத்திலும் திருவிதாங்கூரிலும் நம்முடைய எல்லை பறி போகாமல் பாதுகாக்கப்பட வேண்டுவதும் இன்றியமையாதது.

தம்பி, இந்த எல்லைகள் எல்லாம் காப்பாற்றப்பட வேண்டுமென்று கூறும் போது, அந்த எல்லைகளெல்லாம் நம்முடையது தானே என்று நீ சகஜமாக கேட்கலாம். காரணங்கள் கூறுகிறேன்: ஒரு நிலத்தை வாங்குபவன் தமிழன்; விற்பவன் தமிழன். ஆனால் உரிமைச் சாசனங்களையோ தெலுங்கில்தான் எழுதித் தீர வேண்டுமாம். அங்கே தமிழ் மாணவர்களுக்குப் படிக்க இடமில்லை. ரேடியோவில் தமிழ்ப் பாடல்கள் வைத்துக் கேட்கக் கூடாதாம். விந்தையாகத் தோன்றவில்லையா? இப்படி எத்தனையோ கஷ்டங்கள்.

இன்னும் கேள்: மலையாள நாட்டிலே செல்வம் கொழிக்கும் தேவிகுளம், பீர்மேடு போன்ற பல பகுதிகள் நம் தமிழ்ப்பகுதிகள்தாம். அப்படியிருந்தும் மேற்சொன்ன இவ்விடங்களிலெல்லாம் தமிழன் தமிழனாக வாழ முடியவில்லை. தமிழன் உரிமை கேட்டால், தமிழன் தமிழனாக வாழ எண்ணினால், சுட்டுச் சாகடிக்கப் படுகின்றார்கள்.

இத்தகைய அவலநிலைகள் மாற வேண்டும்; புதிய சமுதாயம் உருவாக்கப் படவேண்டும் என்று கூறி, அல்லும் பகலும் ஏழைப் பாட்டாளிகளின் நலனுக்கு உழைத்து வருகிறார் ம. பொ. சி. தேச விடுதலைக்காக பல முறை சிறை சென்றவர் அவர்; எல்லோரையும் விட அதிகமான உரிமைப் பங்கு கேட்கும் தகுதி வாய்ந்த அவர் அனைத்தையும் உதறித் தள்ளிவிட்டு, தமிழ் இனத்தின் உயர்வு ஒன்றையே தன் குறிக்கோளாக்கிக் கொண்டு தன்னையே அழித்துக் கொள்ளவும்கூடத் தயாராகி விட்ட பெருந் தகையாளர் அவர்.

உலக உத்தமர் நேருஜியைக் கொடும்பாவி கட்டிக் கொளுத்தி அவமதித்த பஞ்சமா பாதகர்கள் இப்போது காங்கிரஸ் அபேட்சகர்களாக உருமாறி, தேர்தலுக்கு நிற்கும் தகுதி பெற்றிருக்கிறார்கள். காரணம், அவர்களிடம் பண வசதி இருப்பதாலாம்!

நேற்றுவரை பல ஆண்டுகளாக பல போராட்டங்களிலே கலந்து கொண்டு தன் தொழில், பெண்டு பிள்ளை எல்லோரையும் மறந்து பணியாற்றிய உண்மை ஊழியர்களுக்கோ இந்தத் தேர்தலிலே நிற்கத் தகுதியில்லை. காரணம், இவர்களிடம் பண வசதியில்லை. மாபெரும் தமிழ்த் தேசபக்தர்களெல்லாம் பதவியை விட்டு இறங்கியவுடன், அவர்களை

மறந்து போகிருர்கள். அவர்களது தேச சேவையை மறந்ததுடன், அவர்களைக் குறைத்துப் பேசவும் தலைப்படுகிருர்கள். இத்தகைய நன்றி கொன்ற நிலை மாற வேண்டும்.

இருவேறுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு

என்ற குறளுக்கு வடிவாக அமையப்பெற்ற தலைவர் சிவஞானத்தை நான் பின்பற்றுவதில் பெருமை கொள்கின்றேன்.

'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்'; 'வேங்கடத்தை விடமாட்டோம்'; 'குமரியைக் கொள்ளை கொடோம்' -இம் மூன்று கோஷங்களில் ஒன்ருகிய தலைநகர் பிரச்னை முடிவு பெற்றது. மிகுதியுள்ள இரண்டு கோஷங்களுக்கு நாம் முனைந்து பாடுபட்டால் அது வெற்றி பெறும் காலம் வெகு தூரத்திலில்லை.

இதோ, எங்கள் தலைவரின் இதய கீதங்கள்:

எனது இனப் பெயர் — தமிழன்
எனது தாய் நாடு — தமிழ் நாடு
எனது கோரிக்கை—தமிழரசு
எனது கொள்கை—சோஷலிஸம்
எனது பண்பு—தெய்விகக் கலாச்சாரம்
எனது குடும்பம்—இந்திய சமுதாயம்
எனது சமரசநெறி—சர்வ தேச சகோதரத்துவம்!

சுவையும் பொருளும் பொதிந்த இக்கருத்துக்களை நீ மனப்பாடம் செய்து கொள்; தமிழரசு என்ருல் என்ன என்பதை உன் நண்பர்களுக் கெல்லாம் சொல். உன் ஒரு குரல் ஓராயிரம் குரலாக, ஒரு லட்சம் குரலாக மாறி உலகெங்கும் எதிரொலிக்கட்டும்!

தம்பி, பொது அறிவுக்குப் பயன்தரக் கூடிய பல புதிய கருத்துரைகளை அடுத்த கடிதத்தில் உனக்கு எழுதுகிறேன்.

உன் அன்புள்ள
தமையன்.

உமா

அடுத்த இதழில்:

பேட்டி:
ம. பொ. சிவஞானம்

*

'தம்பிக்கு':
ஜி. உமாபதி

*

என் முதல் கதை:
த. நா. குமாரஸ்வாமி

*

பசுமை நினைவுகள்:
கி. வா. ஜகந்நாதன்

*

கவிஞர் தரும் காட்சி
ந. சஞ்சீவி

*

ஐவர் சந்திப்பு
'ஆலவாய் அழகி'
வாசவன்

*

இலங்கைச் செய்திகள்

*

சிறு கதைகள்:
வியார்ஜி
நா. ஜகந்நாதன்
சொ. சங்கரலிங்கம்
புனர்வசு
பூவை எஸ். ஆறுமுகம்

*

இரு துருவக் கவிதை:
அழ. வள்ளியப்பா
நெற்குப்பை ராமசுப்ரமணியம்

சருகு

உதிர்ந்து விழும் சருகே
உன்னைத்தான் கேட்கிறேன்
அதிர்ந்துவிரைந் தோடாதே;
அஞ்சிமறைந் தொளியாதே!

நேற்றுவரை ஆதரித்த
நீண்டமரம் இன்றுன்னைக்
காற்றில் பறக்கவிட்ட
காரணமும் புரியவில்லை!

பச்சைப் பசும்அழகுப்
பாத்திரமாய் நிற்றலும்போய்
இச்சைத் தவம்புரியும்
இருடியைப்போல் வற்றினையே!

பொன்னுடலம் கண்டதுமே
பூரித்துப் போயினையே!
அன்னமரம் செய்துவிட்ட
அவச்செயலைக் கண்டாயோ?

உள்ளத்துப் பூரிப்பை
உடலம் வெளிக்காட்டத்
துள்ளுகின்ற மானிடத்தை
எச்சரிக்கத் தோன்றினையோ?

முற்றிப் பழுத்த
முதியோர்தம் நெற்றியைப்போல்
வற்றிச் சுருண்டாய்
வகைமோசம் போனாயே!

காய்ந்த சருகே!
கனல்நாயகன் உன்னைப்
பாய்ந்து தழுவப்
பரவசத்தில் மூழ்கிடுவாய்!

காலத்தின் விந்தையினைக்
காட்டும் சருகே, நின்
ஓலத்தை நெஞ்சில்
உணர்வோர் எவரம்மா?

— வி. துரைசாமி

இருதுருவக் கவிதை : 2

தளிர்

தரையிலே பசுந்தளிர்
தருவிலெங்கும் பூந்தளிர்
கரையிலாத் தளிர்க்கடல்
களித்தன, களித்தன !

கிறங்கிநின்ற நாணலும்
கிளைத்துலர்ந்த முல்லையும்,
உறங்கியோய்ந்த புன்னையும்
ஒளிர்ந்தன, ஒளிர்ந்தன !

ஒன்றிரண்டு தளிர்களாய்
ஒன்றுநூறு கோடியாய்ச்
சென்று கண்ணிமைக்குமுன்
செழித்தன, செழித்தன !

மறந்தகாதல் நினைவுகள்
மகிழ்ச்சி பொங்கிவந்தன ;
அறந்தளிர்த் தெழுந்தன ;
அசைந்தன, அசைந்தன !

வஞ்சமற்ற செந்தமிழ்
வாணர் தூயநாவிலே
செஞ்சொல் வந்துசேர்ந்தெனச்
செழித்தன, செழித்தன !

மின்னிழைத்த பூந்தளிர்
மேனிகாண வந்தன ;
பொன்னிறத்த வண்டுகள்
புகழ்ந்தன, புகழ்ந்தன !

முதிர்ந்துலர்ந்து போயிலென் ?
முற்றிமண்ணில் வீழிலென் ?
உதிர்ந்துதிர்ந் துயர்ந்திடல்
உகந்ததே, உகந்ததே !

பிறந்துலர்ந்து பூந்தளிர்ப்
பிறவி எய்தலாகுமேல்
இறந்திறந்து வாழ்தலும்
இசைந்துளோம், இசைந்துளோம் !

— துறைவன்

எங்கள் இதயங்கள் பேசுகின்றன

........தங்கள் தலையங்கங்கள் பிரச்சினையை விளக்குவதில் உதாரணங்களாகத் திகழ்கின்றன. பசுமை நினைவுகள், எனது முதல் கதை, வெற்றிலை பாக்கு, இவையெல்லாம் புத்தம்புது வசந்தம் போல் கருத்தைக் கவர்கின்றன. தமிழ் அறிஞர்களின் அனுபவங்கள், எண்ணப் போக்குகளை வெகு அழகாக சித்திரிக்கும் பேட்டிக் கட்டுரைகள் தமிழ் இலக்கியப் பாட்டையில் ஒரு நல்ல சுவடு. கல்லூரி மாணவர் சிறுகதைப் போட்டி பற்றிய அறிவிப்பு பார்த்தோம். எங்கள் இளம் இலக்கிய ஆர்வத்திற்கு வாழ்த்துத் தரும் 'உமா'விற்கு எங்கள் வாழ்த்துக்கள்.

மீ. ராஜசேகரன்,
பி. ஏ. முதல் வகுப்பு,
விவேகானந்தா கல்லூரி, சென்னை-4.

*

.... தங்கள் 'உமா' வுக்கு இலங்கையில் அமோக வரவேற்பு இருக்கிறது. அழகுத் தமிழில் அரிய பல கதை, கவிதை, கட்டுரைகளுடன் அதிக பக்கங்களுடன் குறைந்த விலையில் திங்கள் தோறும் 'உமா' இலங்கை நேயர்களுக்கு இலக்கிய விருந்து தருகின்றது. தங்கட்கு இதய பூர்வமான நன்றி. ஒரு வேண்டுகோள்: இலங்கைச் செய்திகளுக்கென ஓரிடம் ஒதுக்கித் தந்தால் நல்லது. செய்வீர்களா?

த. துரைசிங்கம்,
சுன்னுகம், (இலங்கை)

*

... 'தெருக்களின் ஆங்கிலப் பெயர்களைத் தமிழில் மாற்றுக' என்ற தங்களுடைய கட்டுரை மிகவும் நன்ருக இருந்தது. 'பூவை' எழுதிய 'அந்தித் தாமரை' யின் முடிவைப் படிக்க ரொம்பவும் ஆவலாக இருக்கிறேன். 'உமா' வுக்கு விரைவில் என் சந்தாத் தொகையை அனுப்பி வைக்கிறேன், என் கணவர் மூலம்.

வத்ஸலா ராமன்,
மைலாப்பூர்.

*

... ஈ. வே. ராவுக்கும் அவர் கூட்டத்தாருக்கும் நல்ல சவுக்கடியுடன் கூடிய புத்தி கற்பிக்கும் தலையங்கமும், 'ஆங்கிலப் பெயர்களை மாற்றுக' என்ற கட்டுரையும் பாராட்டத் தக்க பகுதிகள்.

பி. வேலாயுதம்,
அரியலூர்.

*

... தலைவர், ம. பொ. சியின் 'இளங்கோ சமணரா?' கட்டுரை மிக்க பொருள் உள்ளதாகும்.

சா. சங்கரன்,
கும்பகோணம்.

*

....எழுத்தாளர்கள் எழுதப் புகுந்த கதையைத் தமிழர்களுக்கு அறிமுகப் படுத்த வேண்டுமென்று எனக்கு நெடு நாட்களாக ஆவல். அது தங்கள் மூலம் பூர்த்தி அடைந்தது குறித்து மகிழ்ச்சி.

இளம்பாரதி,
மதுரை.

*

... பேட்டிக் கட்டுரை புதிய அம்சம்; வரவேற்கத் தக்கது.

எஸ். வெங்கடாச்சாரி,
மாதுங்கா, பம்பாய்.

*

... 'மாயாவி' யின் முதல் கதை வரலாற்றை வெளியிட்டது போல, தமிழ் நாட்டின் சிறந்த எழுத்தாளர்களுடைய கதைகள் பிறந்த விவரங்களைத் தொடர்ந்து பிரசுரிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பி. சுப்பராயுலு,
திண்டுக்கல்.

உங்களுக்கு எங்கள் நன்றி

ரா. பி. சேதுப்பிள்ளை

பேட்டிக் கட்டுரை: ★ **பூவை எஸ். ஆறுமுகம்**

அப்பொழுது நான் பி. ஏ இரண்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். எங்கள் 'புனித சூசையப்பர் கல்லூரி'த் தமிழ் மன்றம் தமிழ்ப் பேச்சு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. மலைக்கோட்டையைச் சாடி எதிரொலித்தது மேற்படி பேச்சு. சொல்லின் செல்வரின் பேச்சென்றால் கேட்கவும் வேண்டுமா? மாணவர் சமுதாயத்திற்குத் தமிழ்ப் பேராசிரியர் திரு ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் பெயர் மிகவும் பழக்கப்பட்டது. அன்னாரின் நூல்களை மாணவர்கள் உயர் நிலைப் பள்ளிகளிலும் கல்லூரி வகுப்புகளிலும் படித்தறியும் அரும் பெரும் வாய்ப்புப் பெற்றவர்கள். மாணவர் உலகம் பேறு படைத்தது; சென்னைப் பல்கலைக் கழகமும் பாக்கியம் பெற்றது. ஏனெனில், நீதி மன்றத்திலே எதிரொலிக்க வேண்டிய சேதுப்பிள்ளையின் வாதப் பிரதிவாதப் பேச்சுகள் இன்று சென்னைப் பல்கலைக் கழகத்திலே தமிழ் முழக்கம் செய்கின்றன.

'அருந்தமிழன்னைக்குப் பெரும் பணி புரிந்து விளங்குவோருள்ளே சிறந்தார் ஒருவராய், நெடுங்காலமாய்ப் பாமர ரஞ்சகமும் பண்டித ரஞ்சகமும் ஒருங்கு பொருந்தப் பேசியும் எழுதியும் வருபவர் சேதுப்பிள்ளை அவர்கள்' என்று வெள்ளக்கால் திரு சுப்பிரமணிய முதலியார் அவர்கள் வியந்தேத்தியுள்ளார்.

'செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை' யென்று யோகி சுத்தானந்த பாரதியார் போற்றிப் புகழ்கின்றார்.

பேராசிரியர் அவர்கள் முத்தமிழ் வித்தகர். 'ஊரும் பேரும்' அன்னாரது நுண்ணிய ஆராய்ச்சிக்குச் சிறந்ததொரு எல்லைக் கோடு. அந்நூல் முன்னர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினரின் பரிசைப் பெற்றது.

செந்தமிழ்ச் செல்வர் பேராசிரியர் திரு ரா. பி. சேதுப்பிள்ளை தமிழ் மொழிக்குச் செய்துள்ள சேவைக்காகச் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தாரால் 'வெள்ளிக் கேடயம்' ஒன்று கடந்த 5-2-54ல் அன்பளிப்பாகச் சமர்ப்பிக்கப் பட்டது.

'முத்தமிழ்க் கடலில் முத்துக் குளிக்கும்' திரு ரா. பி. சே. அவர்கள் வடித்த 'தமிழ் இன்பம்' என்ற நூல் பாரத அரசாங்கத்தினரால் நிறுவப்பட்ட இலக்கியக் கழகத்தினரின் ஐயாயிரம் ரூபாய் பரிசை அடைந்தது. தமிழ் பேராசிரியரின் பெயர் அன்றைக்குக் கொடை வள்ளல்கள் பட்டியலிலும் பதிவு பெற்றது. தான் பெற்ற ரூபாய் ஐயாயிரத்தோடு இன்னும் பத்தாயிர ரூபாய் சேர்த்து, பதி

'தமிழ் இன்பம்'

அமரகவி பாரதியின் நினைவுக்கு:

அதர்மம் தர்மத்திற்கு உணவு. ஆதலால் தர்மம் இருக்கும்வரை அதுவும் இருந்தே தீரும். இது நியாயமே. அதர்மம் முற்றிலும் இறந்து சூன்யமாய்ப் போய்விடுமானால், பின்பு தர்மம் உண்ண உணவில்லாமல் தானும் மடிந்துவிடும்.

— பாரதியார்.

னையாயிர ரூபாய்களைச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் வளர்ச்சிக்கு ஈந்து இன்பமடைந்தார்.

'தமக்கென முயலாநோன்தாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே' என்ற புலவர் இளம்பெருவழுதியின் கூற்றில் 'அன்பு போர்த்த இளவல்' சேது அவர்களைத் தரிசிக்கின்றோம். தமிழ் வள்ளல் ராஜா முத்தையா செட்டியார் ஆசிரியருக்குப் பொன்னாடை போர்த்தினர்; சென்னைத் துரைத்தனத்தினரும் தக்க மரியாதைகளை வழங்கினர்.

கடந்த 19-8-55-ஆம் நாள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினருக்கு ஒரு பொன் நாள்.

'தமிழ் இன்ப'த்திற்குப் பரிசு பெற்ற சொல்லின் செல்வருக்குப் பாராட்டு விழா நடத்தி, வெள்ளிப் பேழையொன்றினை அளித்துக் கௌரவித்தார்கள்.

"சேது முதல் இமயம்வரை செழுந்தமிழின்
சுவைநுகர்ந்து திளைக்கும் வண்ணம்
கோதுபதியாத தமிழ் இன்பமெனும்
நூலாக்கிக் கொடுத்திர் நந்தம்
மேதகுபே ரரசியலார் அதற்கையாயிரம்
பசும்பொன் விரும்பி நல்கி
ஓதுநுந்தம் பெரும்புலமை உலகறியச்
செய்தமை கண்டுவக்கின்றேமால்!"

என்ற வாழ்த்துப்பாவில் புகழ் பாடியிருக்கின்றனர்.

திரு ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் ஆக்கிய நூல்களின் வரிசையை இதோ தருகின்றேன்:

'திருவள்ளுவர் நூல் நயம்', 'சிலப்பதிகார விளக்கம்', 'தமிழ்நாட்டு நவமணிகள்', 'தமிழகம்—ஊரும் பேரும்', 'தமிழர் வீரம்', 'தமிழ் இன்பம்', 'தமிழ் விருந்து', 'வழி வழி வள்ளுவர்', 'வீரமாநகர்', 'வேலும் வில்லும்', 'கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர்', 'கடற்கரையிலே', 'கால்டுவெல் ஐயர் சரிதம்', 'கந்த புராணத் திரட்டு', 'வேலின் வெற்றி'.

'நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்' என்ற கம்பன் வரிகளில் பேராசிரியரின் பெயர் பிரதிபலிக்கின்றதல்லவா?

நாவலர் சோமசுந்தர பாரதியார் கூறுகிறார்: "சேதுப்பிள்ளை அவர்கள் இனிய எழுத்தாளர்; இன்சொற் பேச்சாளர். இவர்கள் உரை கேட்டு மகிழாத தமிழர் இரார். இவர்கள் இயற்றும் நூல் எதுவும் தமிழகம் முழுதும் செல்லும் நாணயம். நூல்நோட்ட வண்ணக்கர் மதிப்பும் பாராட்டும் வேண்டாமல் செலாவணியாகும் கலா உண்டியல்."

கல்லூரிகளில் பிரதேச மொழியில் போதனா முறை நடைபெற வேண்டுமென்ற இன்றைத் திட்டத்தைப் பரிசீலிக்க அமைக்கப்பட்டிருக்கும் குழுவில் இவர் பெயரும் சேர்க்கப் பட்டிருக்கிறது. ஆகவே, கல்லூரிகளில் தமிழ் மொழியில் போதனா முறை நடைபெறவும், என்றும் உள தென்மொழி ஆட்சி பீடம் ஏறி அரசோச்சவும் சேதுப்பிள்ளை அவர்கள் ஆவன செய்வார்கள் என்பது உறுதி.

பலபல இன்னல்கட் கிடையே பேராசிரியரின் பேட்டி அடையாறு இல்லத்தில் நடந்தது; நேருஜியும் காந்திஜியும் புன்னகை புரிந்து பேட்டியைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். 'உமா'வின் அன்பும் வணக்கமும் நன்றியும் சொல்லின்

செல்வருக்குக் காணிக்கை செலுத்தப் பட்டன.

திரு. வி. க.வின் நினைவுக்கு:
கவலையால் பெரிதும் பிடிக்கப்பட்ட ஒருவன் மண்ணில் நடந்துகொண்டே மண்ணை மறந்து விடுகிறான். மண்ணுமிருக்கிறது; அதன்மீது நடையும் நிகழ்கிறது. ஆனால் நடப்பவன் நிலையென்ன? அவன் கவலை, அவனைத் தாங்கும் மண்ணையே மறைத்து விட்டது. இந்நிலையை ஞானிகள் மட்டுமே உணர்கிறார்கள். — திரு. வி. க.

பேட்டி :

"கல்லூரிகளில் பிரதேச மொழியில் போதனா முறை நடைபெற வேண்டுமென்ற இன்றையத் திட்டம் பற்றிய தங்கள் கருத்து என்ன? திட்டம் வெற்றி பெற தாங்கள் கூறும் ஆலோசனை என்ன?"

"நாட்டுமொழிகளின் வாயிலாகவே பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் எல்லாப் பாடங்களும் நடைபெறல் வேண்டும் என்ற கருத்து பல்லாண்டுகளாக எனக்கு உண்டு. சென்னையில் 1946-ல் நிகழ்ந்த தமிழாசிரியர் மகாநாட்டில் இதுபற்றி யான் சொல்லியதாவது:

'ஆங்கில ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட கல்விமுறை இந்த நாட்டு முன்னேற்றத்திற்கு ஏற்றதன்று; அதனை மாற்றியே தீர வேண்டும் என்று இப்போது நல்லறிஞர் எல்லோரும் ஒன்றுபட்டுக் கூறுகின்றார்கள். இனி வருகின்ற தமிழரசில் கலைகள் எல்லாம் தமிழ் மொழியின் வாயிலாகவே பயிற்றப்படும் என்பது திண்ணம். அந்த முயற்சியிலே கல்வி அமைச்சர் ஈடுபட்டிருக்கின்றார். இப்பொழுது அவர் வகுத்துள்ள திட்டம் உயர்நிலைப் பள்ளிகளுக்கே யாயினும், அதனோடு நின்றுவிடப் போவதில்லை. கல்லூரியிலும் கலைகளெல்லாம் தாய் மொழியின் மூலமாகவே கற்பித்தல் வேண்டும் என்னும் ஆணையை அவர் ஒல்லையில் பிறப்பிப்பார் என்று நம்புகின்றோம். அதற்குரிய கலைச் சொற்களை ஆக்கும் பணியில் இப்பொழுதே தமிழறிஞர் தலைப்படல் வேண்டும். கலைச் சொல்லாக்கம் வேகமாகச் செய்யக் கூடிய வேலையன்று. பல்லாற்றானும் பதைப்பற ஆராய்ந்து தமிழின் நீர்மைக்கு ஏற்றவாறு கலைச் சொற்காணுதலே தமிழ் மொழிக்கு ஆக்கம் தருவதாகும்.'

இப்பொழுது சென்னைப்பல்கலைக் கழக முதல்வரைத் தலைவராகக் கொண்ட கலையறிஞர் குழு ஒன்று சென்னை அரசாங்கத்தாரால் அமைக்கப் பட்டுள்ளது. அந்தக் குழுவில் நல்ல தமிழார்வம் உள்ள பலர் இருத்தலால் கலைச் சொற்களைத் தமிழாக்கும் முயற்சி வெற்றி பெறும் என்பது என் நம்பிக்கை."

"தமிழின் வளர்ச்சிக்கு மொழி நூல் ஆராய்ச்சி எவ்வகையில் உதவும்?"

"மொழிநூல் ஆராய்ச்சியில் இப்பொழுதுதான் தமிழறிஞர் சிலர் தலைப்பட்டிருக்கின்றார்கள். சென்னை அண்ணாமலை ஆகிய இரு பல்கலைக் கழகங்களிலும் தமிழில் எம். ஏ. பட்டம் பெறுவதற்காகப் பயிலும் மாணவர்களுக்கு மொழிநூல் ஒரு சிறந்த பாடமாக அமைந்துள்ளது. அதனால் பல மாணவர்கள் மொழிநூல் ஆராய்ச்சி செய்ய விரும்புகிறார்கள். தமிழ் மொழியின் தொன்மையும் செம்மையும் மொழி நூல் ஆராய்ச்சியாலேயே இனிது விளங்கும் என்பது என் கொள்கை. மனோன்மணீய ஆசிரியர் கூறியவாறு கன்னடமும் தெலுங்கும், மலையாளமும் துளுவும் தமிழ்த் தாய் ஈன்ற மக்களே என்பது மொழிநூல் ஆராய்ச்சியால் நிலைபெறும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவில் மேற்குறித்த

> இவ்வுலகத்தில் தற்கொலையைக் காட்டிலும் குற்றமில்லை. தனக்குத் தான் மனத்தால் துன்புறுவதைக் காட்டிலும் பெரிய பேதைமை இல்லை.
>
> — அமரகவி பாரதியார்.

திராவிட மொழிகளுக்குப் பொதுவான சொற்களை ஆராய்ந்து சற்றேறக்குறைய 4000 சொற்கள் திரட்டப்பெற்று திராவிடச்சொல் அகராதி என்னும் பெயரால் அச்சாகி வருகின்றது. அந்த அகராதியால் திராவிட மொழி நூலாராய்ச்சி சிறக்கும் என்பதில் ஐயமில்லை.''

''கம்பன் வாழத் தாங்கள் செய்த தொண்டுகளிலே தங்கள் நினைவில் பசுமை பெறும் சம்பவங்கள் யாவை?''

''கம்பர் நல்லவண்ணம் இந்நாட்டில் வாழ்ந்தால், தமிழ்க் கவிதை வாழும், தமிழ்க்கலைகள் வாழும் என்பது என் கருத்து. ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு 'ஆனந்த போதினி' என்னும் வாரப் பத்திரிகையில் 'கம்பர் கவி இன்பம்' என்ற தலைப்பில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதினேன். அவற்றைத் திரட்டி நூல் வடிவத்தில் வெளியிடக் கருதுகின்றேன். சென்னையிலுள்ள ஒய். எம். சி. ஏ மன்றத்தில் வாரந்தோறும் 'கம்பராமாயண'த்தை மூன்று ஆண்டுகள் பாடமாக நடத்தினேன். இன்னும் கம்பருக்குச் சிறந்த தொண்டு செய்ய வேண்டுமென்ற ஆசை எனக்கு உண்டு.''

''சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தமிழ் வளர்ச்சிக் கழகம்—இவை தமிழுக்குச் செய்து வரும் சேவை பற்றிய தங்கள் எண்ணம் என்ன?''

''சென்னைப் பல்கலைக் கழகம் தமிழாராய்ச்சித் துறை வாயிலாகத் தமிழுக்குச் செய்து வரும் சேவையை நாடறியும். ஆதலால் நான் சொல்ல வேண்டுவதில்லை. பல ஆண்டுகளாகத் தமிழறிஞர்க்கும், மாணவர்க்கும் எளிதில் அகப்படாத திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (கால்டுவெல் எழுதியது), திருக்குறள் விரிவுரை (எல்லீஸ் என்பவர் ஆங்கிலத்தில் எழுதியது) ஆகிய இரண்டும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அச்சாகி வருகின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இயற்றமிழோடு இசைத் தமிழையும் பேணி வளர்க்கின்றது. அங்கு பயின்ற மாணவர்களில் சிலர் சிறந்த தமிழ்த் தொண்டு செய்து வருகின்றார்கள். இலங்கைப் பல்கலைக் கழகத்திலும், திருவாங்கூர் பல்கலைக்கழகத்திலும், உஸ்மானியா பல்கலைக் கழகத்திலும் தலைமைப் பேராசிரியர்களாக இப்பொழுது அமர்ந்து தமிழ்த் தொண்டு புரியும் அறிஞர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பழைய மாணவர்களே யாவர். இன்னும் மைசூர் பல்கலைக் கழகத்தோடு தொடர்புடைய மத்திய கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராக உள்ள அறிஞரும் அண்ணாமலை மாணவரே. பழுத்த தமிழ்ப் புலவராகிய சோமசுந்தர பாரதியாருக்கு, 'டாக்டர்' என்னும் உயர்ந்த கலைப் பட்டம் அளித்துப் பாராட்டிய பெருமையும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு உரியதாகும். சென்னையிலுள்ள தமிழ் வளர்ச்சிக் கழகம் 'கலைக் களஞ்சியம்' என்னும் பெயரால் வெளியிட்டு வரும் அரிய பெரிய நூல் தமிழ்த்தாயின் திருமுடியாகத் திகழும் தகுதி வாய்ந்தது. பத்துத் தொகுதிகளில் நிறைவேற இருக்கின்ற அந்நூல் தமிழ் நாட்டார் போற்றி வணங்குதற்குரிய கலைக்கோயிலாக விளங்கும் என்பது திண்ணம்.''

★

ரங்கூன் கமலம்

"எல்லார்வி"

1. சித்திரப்பாவை பத்மா

கீரனூர் என்று சொன்னவுடன் எவரும் சட்டென்று புரிந்து கொள்ளக் கூடிய அளவுக்கு அந்தக் கிராமம் புகழ் பெற்று விளங்கிற்று. இணையற்ற இசைப் புலமையைப் பெற்ற நாதஸ்வர வித்துவான்கள் அந்த ஊரில் வாழ்ந்திருந்ததே அத்தகைய புகழுக்குக் காரணம்.

ஊரின் இரு மருங்கிலும் இரண்டு நதிகள் ஓடின. தெற்கே ஒரு மைல் தூரத்திலும் வடக்கே இரண்டு மைல் எல்லையிலும் இரண்டு ரயில் நிலையங்கள். கிராமத்தின் தலைப்பில் கப்பிச்சாலை. ஊருக்குள் பிரதானமாக அமைந்திருந்தது சிவலோகநாதர் ஆலயம். அது தவிர, பெருமாள் கோயில், ஐயனார் கோயில் முதலிய ஆறு ஆலயங்கள்; ஏழு தடாகங்கள். பெரிய பெரிய வீதிகளும், சின்னச் சின்னத் தெருக்களும் ஊரை அலங்கரித்து, ஊர்ச் சிறப்புக்குத் துதி பாடின.

குளங்களுள், அழகிலும் நீர் வளத்திலும் சிறப்பாகக் கூறக் கூடியது சிவன் கோயிலின் எதிரே விசாலமாகப் பரந்து கிடந்த திருக்குளம். அது கீரனூர்க் கிராமத்திற்கே நடு நாயகமாக விளங்கியது. அதனால் ஊரின் எழில் பல படி உயர்ந்து தோன்றிற்று.

தென் கரையில் ஆடவர்களும் வட கரையில் பெண்மணிகளும் நீராடிக் கொண்டிருந்தனர்.

மேல் புறத்திலே நீராடிக்கொண்டிருந்தவர்கள் இளங் கன்னிகைகள். கவலை அறியாத பிராயம். உலக இன்பங்களை நுகர ஆரம்பிக்கும் பருவம். சம வயதுடைய தோழியர் சங்கமத்தில் எழுந்த உற்சாகம். அமளிக்குக் கேட்பானேன்? பழைய காலத்துக் கதைகளில் விவரிக்கப் பெறும் 'கன்னி மாடம்' போன்ற இடம் அந்தப் படித்துறை. ஆடவர்கள் அங்கே செல்லமாட்டார்கள். அந்த ஊரின் உயர்ந்த பண்புகளில் அந்தக் கட்டுப்பாடும் ஒன்று. அத்தகைய இடத்தில் நீராடும் நங்கையர்கள் மனம் விட்டுப் பேசுவதும், வாய் விட்டுச் சிரிப்பதும் இயல்புதானே?

''பத்மா வருகிறாள்....'' என்ற குரல் எழும்பியது. எல்லோரும் தலை தூக்கிப் பார்த்தார்கள்.

> மகளிருக்குக் கற்பு என்று சொல்லப்படுவது கணவரின் வார்த்தைக்கு மாறுபட்டு நடவாமையாகும்.
>
> — ஔவையார்.

பையப் பைய் நடந்து வந்தாள் பத்மா. தோளிலே அம்பாரம் துணி; இடுப்பிலே குடம்; உடலெங்கும் எழில்; உதட்டிலே முறுவல்; உள்ளத்தில்....?

''என்ன பத்மா? ஏன் இவ்வளவு நாழிகை இன்றைக்கு?''

''மாமாவுக்கு ராத்திரியெல்லாம் சற்றுக் கடுமை. அதனால் காலையில் எல்லாக் காரியமும் தாமசம்.''

''பாருங்களடி, நாமெல்லாம் வேலையற்றவர்கள் என்று அர்த்தமா? நம்மைப் பொருட் படுத்தாமல், முகங்கொடுத்துப் பேசாமல் வேலைகளைக் கவனிக்கிறாள், பார்.''

''அவள் என்றுமே மகா ராங்கிக்காரிதானேடி?''

''அதிலும் கூடிய சிக்கிரம் பெரிய இடத்துக்கு ராணி ஆகப் போகிறாள்!''

''அவள் அதிருஷ்டம் பாரேன், எல்லோரும் விளையாட்டுப் பேச்சு என்று எண்ணியிருந்ததை, முடிவில் உண்மையாக்கி விட்டானே ராஜு? கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லையாம் அவன். முழுச் சொத்தும் கோபுவுக்குத்தானே?''

''அதோ அதோ போகிறானடி, அவன்.''

எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். இளஞ்சூரியனின் கிரணத்தால், பொன்னிற மேனியும் திடமான உடற்கட்டும் வனப்புடன் பிரகாசிக்கத் தோப்பின் பக்கமாகப் போய்க்கொண்டிருந்தான் கோபு. அசைப்பிலே தலை நிமிர்ந்த பத்மாவின் கண்களும் அவனை நோக்கின. உடலெல்லாம் புல்லரிக்கச் சட்டென்று தலை கவிழ்ந்தாள்.

துடுக்கு நிறைந்த சிறுமி விமலா. யாரும் சற்றும் எதிர்பாராத நிலையில், ''கோபு!'' என்று இரைந்து கூவி விட்டாள். கூப்பிட்டது யாரென்று தெரியாமல் அவனும் திரும்பிப் பார்த்து விட்டான்.

வயது வந்த பெண்கள் விமலாவைக் கடிந்தார்கள்.

அவள் அதைச் சிறிதும் லட்சியஞ் செய்யவில்லை. ''எங்கே தேடிக் கொண்டு போகிறாய்? இதோ இருக்கிறாள் பத்மா'' என்று மேலும் கூச்சலிட்டாள்.

கணம் நின்ற கோபு திரும்பித் தன் வழியே போய்விட்டான்.

பத்மாவின் பட்டுக் கன்னங்களில் நாணத்தால் தோன்றிய சிவப்பு மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருந்தது. கவர்ச்சி மிகுந்த அவள் கண்கள் கீழ்நோக்காக அடிக்கடி கோபு சென்ற திசையில் ஓடின.

தொலைவிலிருந்து சிறிது நேரமாக 'ஜல்ஜல்' என்று ஓர் ஒலி கேட்டுக் கொண்டிருந்தது.

வண்டி குளக்கரையைச் சமீபித்துக் கொண்டிருந்தது.

''ஐயோ பாலுவா? அட கஷ்டமே! நமக்கெல்லாம் சங்கடந்தான் இனிமேல். தெருவிலே நடமாட முடியாது. கண்ணாலேயே கொன்று விடுவானே? பட்டணத்திலே நாளுக்கு ஒரு கல்யாணமாம் அவனுக்கு.''

''உஷ்....இரையாதே. வண்டி வந்து விட்டது!''

கலைந்த சுருள் சுருளான கிராப்புத் தலை வண்டிக்குள்ளிருந்து தெரிந்தது. பின்புறத்தில் உள்ள ஏறுகிற படியில் பூட்சுக் கால்

தெரிந்தது. பெண்கள் பார்த்தும் பாராதது போல் இருந்தார்கள். பொசுங்கிக் கொண்டிருந்த சிகரெட் துண்டு வண்டிக்குள்ளிருந்து பறந்து பாதைக்கப்பால் போய் விழுந்தது.

வண்டி படித்துறையைச் சமீபித்து, அதைக் கடந்து கொண்டிருந்தது.

பாலுவின் விஷக் கண்கள் குளிக்கும் பெண்களைக் குறிப்பாக நோக்கின. மஞ்சள் பூசிக்கொண்டிருந்த பத்மா உடனே நீருக்குள் அமிழ்ந்தாள். ஆனாலும் அந்த நொடிப் பொழுதுக்குள், பருவத்தின் செழிப்பு நிறைந்த அவளுடைய அவயவங்கள் அவன் பார்வையிலே நன்கு பதிந்து, அவனுடைய இருதயத்தைத் தாக்கத் தவறவில்லை. தண்ணீரில் தன்னை மறைத்துக்கொண்டவளை நன்றாகப் பார்க்க நிமிர்ந்து உட்கார்ந்தான் பாலு. அதற்குள் வண்டி ஓடிவிட்டது.

"முழியைத்தான் பாரேன், ஆடு திருடின கள்ளன் மாதிரி!"

"அவன் ஆடு திருடுகிற கள்ளன் இல்லையடி; பெண்கள் திருடுகிற குள்ளன்!"

"ஓகோ" என்று சிரித்தார்கள் எல்லாரும்.

"பட்டணத்திலே இவன் என்ன செய்கிறான்?"

"ஏதோ பெரிய உத்தியோகமாம்."

"இருக்கும், இருக்கும். இல்லாவிட்டால் இத்தனை ஆடம்பரச் செலவைத் தாக்குப் பிடிக்க முடியுமா?"

"அதைச் சொல்லாதே, சுந்தரி; பட்டணத்திலே பகட்டாக வாழ எத்தனையோ வழி உண்டாம். இந்தப் போக்கிரி ஏதோ கெட்ட வழியிலேதான் காலத்தை ஓட்டுகிறானாம்."

"அது எப்படியாவது தொலையட்டும். அடிக்கடி இங்கே ஏதுக்கு வந்து கூத்தடிக்கிறான்?"

"இந்த தடவை ரொம்ப நாள் கழித்துத்தானே வந்திருக்கிறான்? முன்பு அவன் வந்தபோது ஏரி மதகுவேலை நடந்து கொண்டிருந்தது. மதகு கட்டி நாலு வருஷம் இராது?"

"அதுதான் ஏதுக்கு வருகிறான் என்கிறேன்?"

"இதேதடா பாவம்; சிந்திப் பாட்டிக்கு அவன் பெண் வயிற்றுப் பேரன் இல்லையா? அத்துடன் அவளுக்குச் சுவீகாரம் வேறே. பாட்டி 'பசை' உள்ளவள். அடிக்கடி வந்து ஏதாவது பிராய்ந்து கொண்டு போவான்?"

"அவன் எப்படியோ தொலைகிறான். நம் வேலையைப் பார்ப்போம். வந்து வெகு நாழிகை ஆயிற்று. போகலாம்."

அனைவரும் கிளம்பினார்கள். குளித்தான பிறகும், மாமன் மகள் கொண்டு வந்து போட்டு விட்டுப் போன துணிகளைத் துவைத்துக் கொண்டிருந்தாள் பத்மா.

"நீ கிளம்பவில்லையா, பத்மா."

"பின்னால் வந்தவள் பிந்தித்தானே கிளம்புவாள்?"

"அவள் வருவதேதடி? கோபு திரும்பி வருவான்; சற்று நேரம் அவனோடு கொஞ்சிக் குலாவிச் சரசம்......"

"இது என்ன பேச்சு, சௌம்யா?" என்றாள் பத்மா, தணிவாக.

"ஐயோ, பாவம்! அவளை ஒன்றும் சொல்லாதேடி. பார், அவளைச்

> சட்டத்துக்குக் கண் இல்லை;
> நீதிக்குக் கால் இல்லை; சமூகத்துக்குக் காது இல்லை!
>
> — காண்டேகர்.



சுற்றி; சலவைத் தொழிலாளி மாதிரி எவ்வளவு துணி!''

'' சரி, நாம் போகலாம்.''

மற்றவர்கள் போய்விட்டார்கள். பத்மா சலிப்பின்றித் துணிகளைத் துவைத்துக் கொண்டிருந்தாள்.

வீட்டு வாசல் முன் வண்டியை விட்டிறங்கின பாலு அவசர அவசரமாகப் பெட்டி, படுக்கை முதலிய சாமான்களை இறக்கி உள்ளே கொண்டுபோய் வைத்துவிட்டு சில்லறை இல்லாததால் முழுரூபாயை வண்டிக்காரனிடம் வீசி எறிந்தான். உடனடியாக உடைமாற்றிக் கொண்டு, '' இதோ வருகிறேன், பாட்டி '' என்று கொல்லைப்புறத்திற்கு ஓடினான். வேகமாக நடந்து சுற்றி வளைத்துக் கொண்டு குளக்கரையை அடைந்தான்.

மேல்க்கரையின் ஒருகோடியிலே கோபு வந்து கொண்டிருக்கையில், மற்றொரு கோடியிலே பாலு வந்து கொண்டிருந்தான்.

துணிகளைத் துவைத்து முடித்த பத்மா அவற்றைப் பிழிந்து தோளில் போட்டுக்கொண்டு, குடத்தில் தண்ணீர்நிரப்பி எடுத்து இடுப்பில் வைத்தவாறு கரை ஏறினாள். கோபுவையோ பாலுவையோ அவள் பார்க்கவில்லை. ஏதேதோ சிந்தனைகளுடன் மெல்ல நடந்து பாதையை அடைந்தாள். அருகே உள்ள சந்தில் கிடை மாடுகளின் கழுத்து மணி ஓசையும், மாடுகளின் 'அம்மா!' என்ற கூப்பாடுகளும் கேட்டன. அவை வருவதற்குள் போய்விட வேண்டும் என்று வேகமாக நடந்தாள் பத்மா. தறிகெட்டு ஓடிவந்த முரட்டுப் பசு ஒன்று அவளை நோக்கிச் சீறிக்கொண்டு வந்தது. பதறிப் பின்னடைந்த அவள் அங்கிருந்த அரச மரத்தின் வேரில் கால் இடறிக் கீழே விழப் போனாள். 'சட்' டென்று லாகவமாகத் தாவி மரத்தைப் பற்றிக்கொண்டாள். அவள் இடுப்பில் இருந்த குடம் விழுந்து உருண்டது; தோளில் இருந்த துணிகளில் சில விழுந்து மண்ணில் புரண்டன.

மாடு பத்மாவை நோக்கி வருவதைத் தொலைவிலிருந்தே பார்த்துவிட்ட கோபு, ஓட்டமாக ஓடி வந்தான். பசுவை விரட்டினான். குடத்தை எடுத்தான். பரபரவென்று படித்துறையில் இறங்கி தண்ணீர் மொண்டு வந்தான். அவளிடம் நீட்டினான்.

அதற்குள் கீழே விழுந்த துணிகளை எடுத்து மண்ணைத் தட்டித் தோளில் போட்டுக்கொண்ட பத்மா, கோபு கொடுத்த குடத்தை வாங்கினாள். வளையல்களும், கடிகாரமும் உறவாடின. அவள் கரம் நடுங்கிற்று. அபிமான உணர்ச்சியோடு தலை கவிழ்ந்திருந்த பத்மா

மேல்வரிசைப் பற்களால் கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டாள்.

"உன் கை நடுங்குவதைப் பார்த்தால் மறுபடியும் குடத்தைக் கீழே போட்டுவிடுவாய் போலிருக்கிறதே! ஏன் இந்த நடுக்கம்? என் கை பட்டுவிட்டதென்ருே? இன்னும் சில தினங்களில் இதே கையைப் பலர் எதிரே அழுத்திப் பிடிக்கப் போகிறேனே, அப்போது....?"

அந்த வார்த்தைகள் அவள் உள்ளத்தில் அமிருத தாரையாக விழுந்தன. மெல்ல நிமிர்ந்து ஆசையோடு அவன் முகத்தைப் பார்த்தாள். 'வரட்டுமா?' என்று கேட்கிற பாவனையில் தலையை அசைத்தாள். அவன் அவசரமாக நாற்புறமும் நோக்கிவிட்டு, அவளது பட்டுக் கன்னத்தைக் கிள்ளினன். திடுக்கிட்ட அவளும் சுற்றி நோக்கியபடி வேகமாக நடந்தாள்.

தொலைவிலிருந்தவாறு, இந்தக் காட்சியை பாலு கண்கொட்டாமல் பார்த்துப் பொருமினன் என்ற செய்தியை இந்தக் காதலர்கள் எங்ஙனம் அறிவார்கள்?

2. பிரபஞ்ச லீலை

"ஊரில் என்ன விசேஷம், பாட்டி?"— கூடத்து ஊஞ்சலில் படுத்து ஆடிக்கொண்டிருந்த பாலு, கிண்ணம் நிறையச் சீடையைக் கொண்டு வந்து கொடுத்த தன் பாட்டியிடம் கேட்டான்.

பாட்டி ஏதேதோ புள்ளிவிவரம் கொடுத்தாள்.

பாலு 'சூள்' கொட்டினன். "அந்த விஷயமெல்லாம் எனக்கு வேண்டாம், பாட்டி. என் போன்றவர்கள் கேட்கிருற் போல ஏதாவது இருந்தால் சொல். பெரிய பண்ணை ராஜு சேதி என்ன? என்னவோ கல்யாணமே பண்ணிக் கொள்ளப் போகிறதில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தானே, என்ன ஆயிற்று?"

"ஆகிறதென்ன? அவன் பிடிவாதந்தான் ஊரறிந்த தாயிற்றே? இன்னமும் பிரம்மசாரியாகவே தான் இருக்கிருன்..." என்ருள் பாட்டி, இயந்திரத்தைச் சுழற்றிக் கொண்டே.

"அப்படியானல் அவன் தம்பி விஷயம்....? அவனும் பிரம்மசாரியாகவே இருக்க வேண்டியது தானு?"

"கிரகச்சாரந்தான்! அவன் ஏண்டா பிரம்மசாரியாக இருக்க



வேணும்? அடுத்த மாசத்திலே அவனுக்கு 'ஜாம் ஜாம்' என்று கல்யாணம் நடக்கப் போகிறது. தமையனுக்கு ஆன பிறகுதான் தம்பிக்கு என்பது அந்தக் காலத்தில்.''

''ஓகோ, பெண் நிச்சயமாகி விட்டதா?''

''நிச்சயம் ஆவதென்ன? ஹாலாஸ்யத்தின் மருமாளை அவனுக்குக் கொடுப்பது என்பது தான் முன்பே தீர்மானமாயிற்றே?''

''அதாவது பத்மா என்ற பெண்ணைத்தானே சொல்லுகிறாய்?''

''ஆமாமாம், ஹாலாஸ்யத்திதுக்கு ஒரே ஒரு மருமாள் தானே?''

''முன்பு நான் வந்திருந்தபோது உன்னிடம் சொல்லிவிட்டுப் போனது வீண்தான் என்று சொல்.''

''நான்தான் அப்போதே சொன்னேனடா, குழந்தை? நம்மவர்களில் வலியப் பெண்ணைக் கேட்பதில்லை. அப்படியும் நீ ஏதோ ஆசைப் படுகிறாயே என்று பிரஸ்தாபித்துப் பார்த்தேன். பிரயோசனம் இல்லை.''

''ஏன், கோபுவுக்கு நான் என்ன குறைந்துபோய் விட்டேனாம்? அவனவ்வளவு சொத்து வேண்டுமானால் எனக்கு இல்லையே தவிர, மற்ற எல்லா அம்சங்களிலும் நான்....''

''அப்படி நீயும் நானும் நினைத்தால் போதுமா? மேலும் பத்மா கோபுவுக்கு என்று முன்பே தீர்மானிக்கப் பட்டது....!''

''முன்பே என்றால்? ஆயிரம் வருஷங்களுக்கு முன்னமேயா?'' என்று ஆத்திரத்துடன் பல்லைக் கடித்துக் கொண்டு கேட்டான் பாலு.

''வீணுக்கெல்லாம் கோபப் படாதேடா, குழந்தை. கோபுவின் அம்மா தர்மி இருக்கிறாள் பார்; அவளுக்கு ஒன்றுவிட்ட உடன் பிறந்தவன் பத்மாவின் அப்பா பரமேசுவரன். பிறந்ததுமே தாயை இழந்த பத்மாவை அவர் மிகவும் செல்வமாக வளர்த்தார். அப்பொழுதே பரமேசுவரனுக்கும் தர்மிக்கும் உடன் படிக்கை. திடீரென்று பரமேசுவரன் காலமான போது கொஞ்சம் பணத்தையும் பத்மாவையும் தன் மைத்துணன் ஹாலாஸ்யத்திடம் ஒப்படைத்தார். பூரணி என்றுமே பொல்லாதவள்தான். அதனால் பரமேசுவரன் காலமானதுமே பத்மாவைத் தன் வீட்டோடு அழைத்து வைத்துக் கொள்ள முயன்றாள் தர்மி. என்றும் சோற்றுக்கு லவா கொட்டும் பூரணி பணத்துக்கு ஆசைப் பட்டு அந்த வேளைக்கு நல்லவள் போல் நடித்துப் பணத்தையும் பத்மாவையும் வசப்படுத்திக் கொண்டாள். தர்மி பணத்தைப் பூரணியிடம் விட்டு விட்டுக் கூடப் பத்மாவைத் தன்னிடம் அழைத்துக் கொள்ள எண்ணினாள். வீட்டில் சிறு பிள்ளைகள் இரண்டு பேர் இருப்பதை உத்தேசித்து, ஊர் வாய்க்குப் பயந்து பேசாமல் இருந்து விட்டாள். பூரணி பணத்தைப் பதுக்கினாளோ, செலவழித்து விட்டாளோ, அந்தப் பெண் பத்மா அவளிடம் வந்த நாள் முதல் இன்றுவரையில் அரை பறக்கத் தலைபறக்க; வசவும் திட்டும், இடியும் புடையுமாய்ச் சிறுமைப் பட்டுக் கொண்டுதான் இருக்கிறது.''

பாட்டி பேச்சை நிறுத்தி மூச்சு வாங்கினாள். உன்னிப்பாய்க் கேட்டுக் கொண்டு வந்த பாலுவும் பெருமூச்சு விட்டான்.

''ஏன் பாட்டி, அப்போதே கோபுவுக்கு பத்மாவை கொடுப்பது என்று தீர்மானம் செய்ததாகச் சொல்கிறாயே? மூத்தவன் ராஜு இருக்க இளையவனுக்கு ஏன் நிச்சயித்தார்கள்? ராஜு அப்போதே தனக்குக் கல்யாணம் வேண்டாமென்று சொல்லி விட்டானா? அப்படியானால் அவ்வளவு சின்ன வயசிலேயே அவனுக்கு

அத்தனை விரக்தி ஏற்படக் காரணம்?''

"யார் கண்டார்கள்? அது அவனுக்கும் அவனைப் படைத்தவனுக்குந்தான் தெரியும். தர்மிக்குக்கூடத் தெரியாதாம்!''

"ஏதாவது வியாதியாக இருக்குமோ, பாட்டி?''

"பார்த்தால் அப்படி ஒன்றும் தெரியவில்லை. இருந்தால் வெளியே வந்திராதா?''

"கோபுவுக்கும் பத்மாவுக்கும் இந்த ஏற்பாட்டில் முழுச் சம்மதந்தானாக்கும்?''

"அதை ஏன் கேட்கிறாய்? அந்தக் குட்டி பத்மா இருக்கிறாளே, அவள் ஏதாவது காரியத்தை முன்னிட்டுக் கொண்டு அடிக்கு ஆயிரந் தடவை தர்மி வீட்டிற்குப் போவாள். அங்கே ஜாடைப் பேச்சும் சிரிப்பும் அமளிப்படும். அது தவிரக் கோயில் குளம், அங்கே இங்கே என்று சந்தித்துக் கொள்வதிலும் குறைவில்லை. சிறிசுகளுக்கு இதெல்லாம் சகஜந்தானே? மற்றச் சிறிசுகள் அதைப் பற்றிக் கேலி செய்வார்கள். ஊரில் முக்கால் வாசிப் போது இதுதான்.''

'உம், பார்க்கலாம் அவர்கள் குதூகலம் நிலைப்பதை!' என்று பாலுவின் உள்ளம் கறுவிற்று.

"ராஜுவைச் சொல்லு, உத்தமனான பிள்ளை என்றால் அவனுக்கே தகும். அத்தனை சிறு வயதில் அவனுக்கு இவ்வளவு மேன்மையான குணங்கள் எப்படித்தான் படிந்தனவோ? அவன் அப்பா இப்படித்

தான் என்ருலும் இவன் அவரை விட! பாரேன்: குடும்பம், பண்ணை, கோவில் பஞ்சாயத்து, ஊர்ப் பஞ்சாயத்து இவ்வளவை யும் எவ்வளவு நேர்த்தியாக நிர்வா கம் பண்ணுகிருன் என்று? தம்பி யின் மேலே உயிர். அந்தப் பிள்ளை கோபுவும் தகப்பனருக்கு உரிய மரியாதையோடுதான் தமையனி டம் நடந்துகொள்கிருன். அண் ணன் தம்பி என்ருலும் அப்படி இருக்க வேண்டும், ஒற்றுமை யாக.''

'அந்த அண்ணன் தம்பி ஒற் றுமையை முதலில் குலைத்துவிட்டு மற்றதைச் செய்கிறேன்' என்று பாலு மனசுக்குள் கூறிக் கொண் டான்.

''அது இருக்கட்டுமடா, பாலு. நீ ஏன் அந்தப் பெண்ணுக்காக இவ்வளவு ஏங்குகிருய்? உன் படிப் புக்கும் உத்தியோகத்துக்கும், அழகுக்கும் அறிவுக்கும் பெண் கிடைப்பதா பிரமாதம்? எத்த னையோ பேர் என்னிடம் வந்து கேட்கிருர்கள், உனக்குப் பெண் தருகிறேன் என்று. நீதானே கல் யாணத்திற்கு இசையவில்லை?''

''சே, சே. பெண்களுக்கு என்ன குறைவு, பாட்டி? பட்டணத்தில் படே படே உத்தியோகஸ்தர் களும் பெரிய பெரிய வியாபாரி களும் போட்டியாக்கும் போடுகி ருர்கள், எனக்காக!''

''பின்னே என்ன, இந்தப் பக் கத்துப் பெண் பிடிக்கவில்லை என் ருல் அங்கேயே ஒரு பெண்ணைப் பார்த்து ....''

பாட்டி வார்த்தையைப் பூர்த்தி செய்யவில்லை.

பாலு அவள் பேச்சைச் செவி யேற்காமல் மனசுக்குள் சொல்லிக் கொண்டான்: 'பட் டணத்துப் பெண்ணே, பட்டிக் காட்டுப் பெண்ணே – பணக்கா ரன் பெண்ணே, பிச்சைக்காரன் பெண்ணே-யாரானுலென்ன? பத் மாவின் செளந்தரியத்தை எவரி டமும் காணமுடியவில்லையே? பணக்காரப் பெண்ணும் பட்டினத் துப் பெண்ணும் அலங்கரித்த பொம்மைகளாக அல்லவா தோன் றுகிருர்கள்? நாலு வருஷத்திற்கு முன்பே பத்மா நளினமாகக் காட்சி அளித்தாள். இன்ருே இணை யற்ற எழில் சித்திரமாக விளங்கி, என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு, உயிர்க் குலையைப் பிடித்து உலுக்குகிருளே! பத்மா - என்ன அழகான பெயர்!... அவள் கண்கள் வண்டுக்கு விருந்திடும் பங்கஜ மலர்கள் தாம்?....'

'பாம் பாம்' என்று தெருவில் மோட்டார்க் குழலின் ஒலி கேட் டது. தொடர்ந்து கிராமத்தின் அமைதியைக் கலைத்தபடி கார் வேகமாக வரும் சந்தடியும் கேட் டது.

''அடாடா! ஊரில் என்ன விசே ஷம் என்று கேட்டாயே? பாலு, சொல்ல மறந்தேபோனேன். 'ரங் கூன் கமலம்' வந்திருக்கிருளடா..'' என்று சொல்லிக்கொண்டே, பரபரப்புடன் வாசலுக்கு ஓடினுள்.

தெருவில் வேகமாகச் சென்ற கார் 'ரிடயர்ட் இன்ஜினியர்' பால கிருஷ்ணன் வீட்டைச் சமீபித்ததும் வேகம் அடங்கி நின்றது. டிரைவர் இறங்கிக் கார்க் கதவுகளைத் திறந்துவிட்டான். சுமார் நாற்பது, நாற்பத்தைந்து வயதுடைய ஸ்திரீ இறங்கினுள். இன்னெரு புறத்தால் சுமார் பதினெட்டு வயதுடைய பெண் ஒருத்தி இறங்கினுள்.

பாட்டி பாலுவை பார்த்துச்சிரித் துக்கொண்டே, ''சற்று முன்பு என்னவோ பத்மா பத்மா என்று மாய்ந்தாயே? பார்த்தாயா இவளை?'' என்ருள்.

''பார்த்தேன், பார்த்தேன். இதே நகை நட்டுக்களையும் துணி மணிகளையும் பத்மாவுக்கு அணி வித்துப் பார்த்தால் அப்போது தெரியும், யார் உண்மையில் அழகு என்று.''

''அது என்ன கூத்தோ, பத்மாப் பைத்தியம் உனக்கு வசமாகப்

பிடித்திருக்கிறது. ம்.... பாலகிருஷ்ணன் வடக்கே வேலை பார்த்த போது நெருங்கிப் பழகினவர்களாம். அந்த அம்மாளுடைய கணவர் பிறகு குடும்பத்தோடு ரங்கூன் போனாராம். அங்கேயே அவர் காலம் ஆகிவிட்டது. தாயும் பெண்ணும் இப்போது பட்டணத்தில் இருக்கிறார்கள். பங்களா, கார் எல்லாம் இருக்கின்றன. இந்தப் பக்கங்களில் பந்துக்கள் இருக்கிறார்களாம். எல்லாரையும் பார்த்துப் போகலாம் என்று வந்திருக்கிறார்கள். தாயின் பெயர் ராஜம்மா. பெண்ணின் பெயர் கமலா. ரங்கூன் வைரம் போல் ஜொலிக்கிறாளே என்று ரங்கூன் கமலம் என்றேன்'' என்றாள் சிந்திப் பாட்டி, புன்னகையோடு.

*

சிவலோகநாதர் ஆலயத்தில் ஜனக்கூட்டம் நெரிந்து கொண்டிருந்தது.

பெண்கள் பகுதியில் நின்றிருந்த பத்மா, எதிர் வரிசையிலிருந்த தன்னுடைய சின்ன அத்தான் கோபுவை ஆர்வம் பொங்க நோக்கினாள்.

இளைஞர் குழாத்தில் கம்பீரமாய் நின்றுகொண்டிருந்த கோபு, பெண் கும்பலில் ஒய்யாரமாக நின்றிருந்த அழகி கமலாவை மயங்கிய நிலையில் பார்த்துக்கொண்டிருந்தான்.

தாயின் அருகே தேவகன்னிகை போல் நின்றிருந்த கமலா, ஆடவர் மத்தியிலே ஆடம்பரமாக நின்று 'மௌன ஆர்ப்பாட்டம்' புரிந்து அந்தக் கிராமத்திற்கே தனியொரு நவநாகரிக இளைஞனாக விளங்கிய – பாலுவையே கண் கொட்டாமல் பார்த்தாள்.

'இங்கிருப்போர் எவரும் எனக் கீடில்லை' என்று மௌன மொழியில் பறை சாற்றுகிற முறையிலே காட்சியளித்துக் கொண்டிருந்த பாலு, பத்மாவை நோக்கிக் கொண்டிருந்தான் - பலநாள் பசித்திருந்த புலி தொலைவில் வந்து நிற்கும் மானைப் பார்ப்பது போல.

மதிற் சுவரோரம் தனித்து நின்ற கோபுவின் உயிர்த்தோழன் ரகு. மனத்திற்குள் நகைத்தவனாய் மேற்குறித்த நபர்களின் செயல்களைக் கண்காணித்துக் கொண்டிருந்தான்.

மண்டபத்தில் எழுந்தருளி தீபாராதனையை ஏற்றுக்கொண்டிருந்த ஸ்ரீராம்பிகையும் – சிவலோகநாதரும் ஊழியர்கள், பக்தகோடிகள், காதல் நட்சத்திரங்கள் அனைவரையும் ஏக காலத்தில் சம திருஷ்டியில் நோக்கிப் பிரபஞ்ச லீலைகளை மனத்தில் நினைந்தவர்கள் போல் அருள் முறுவல் பூத்துக்கொண்டிருந்தனர்.

(தொடரும்)

சிஷ்யன்: திடீர்னு ஏன் படுத்துட்டிங்க?

குரு: என்னமோ தெரியலை, உடம்பெல்லாம் ஒரே வலி.

சிஷ்யன்: அப்போ உடம்பை பிடித்து விடட்டுங்களா?

குரு: ஐயையோ. நீ பிடித்துவிட வேண்டாம். அது தானே போகட்டும்!

குணச்சித்திரம் — சென்ற இதழ்த் தொடர்ச்சி:

அந்தித் தாமரை

'பூவை'

அந்தித் தாமரைக்கு உதய சூரியனின் கருணை கிடைக்கிறது. விந்தையான மனோதத்துவத் திருப்பம்.......!

6. பாவம், கலெக்டர் ஸார்!

சூடாமணியின் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று சரம்வாரியாக உதிர்ந்து கொண்டிருந்தன.

''பாவம், கலெக்டர் ஸார்!'' என்று சொல்லியவாறு, ''ஸார், ரொம்ப வலிக்குதுங்களா?'' என்று கேட்டாள் சூடா.

''ஊஹும், அதெல்லாம் ஒன்றும் இல்லை, சூடா'' என்றார் தண்டபாணி. வார்த்தைகளில் ஒட்டிக் கொள்ளத் துடித்த வேதனைக் குமைச்சலை நெட்டித் தள்ளவிட்டு, புன்னகையை இழையோடச் செய்தார்.

''நிஜமாவா?'' என்று மறுபடியும் துருவித் துருவிக் கேட்டாள் குழந்தை.

''நிஜமாத்தான், மணி!'' என்று சொல்லிச் சிரித்தார் அவர்.

''ஆமாம், சூடா. வலி தோன்றாமலிருக்கத்தானே நான் இத்தனை நாழி மருந்து போட்டேன்'' என்று டாக்டர் சுதர்சனம் வேறு ஆதாரம் காட்டிப் பேசினார்.

''அம்மா, நான் கலெக்டர் ஐயா மேலே மருந்துச் சிசாவை வீசினது என் தப்புத்தான். கோவிச்சுக்க மாட்டியே?'' என்று தன் தாயிடம் அடுத்த கேள்வியைக் கேட்டாள் சூடாமணி.

ருக்மிணிக்குப் பேச நா எழவில்லை. வேதனை அழுகை வடிவெடுத்துத் தொண்டைக் குழிக்குள் வழி மறைத்து நின்றது.

மகள் தாயை அண்டினாள்.

''சி, போ, போ ...'' என்று எட்டிப் பிடித்துத் தள்ளினாள் ருக்மிணி.

கண் பார்வை குறிப்புக் காட்டும் தொலைவில் சூடா போய் விழுந்தாள்.

கலெக்டர் தண்டபாணி ஓடோடிச் சென்று, சூடாவைத் தூக்கித் தன் முகத்தோடு அணைத்துக் கொண்டார். அவருடைய வலது கை சூடாவின் கன்னங்களைத் தடவிக் கொண்டிருந்தது. இடது கை நுனி விரலுக்கு சுரந்தோடி வந்த கண்ணீருக்குப் பதில் சொல்லப் பொழுது சரியாகயிருந்தது.

''மணி, எனக்குத் துளிகூட வலி இல்லையே. பின், நீ ஏன் உன் மனசை வீணா அலட்டிக்கிறே? நான் தானே தப்புச் செஞ்சேன்— நீ இல்லையே?...உன் அம்மா உன்னைக் கோவிச்சுக்க மாட்டாள்.... சரி, முகத்தைத் துடைச்சிட்டு, வேறே டிரஸ் பண்ணிக்கொள். நாம் ரெண்டுபேரும் நம்ப காரிலேயே சினிமாப் பார்க்கப் போவோம்'' என்றார் தண்டபாணி.

''அது சரி, அம்மாவுக்கு என்மேல் ஆத்திரம் இல்லையானா, பின்னே ஏன் அழறாங்க?...''

''....இப்போ உன்னைப் பிடிச்சுத் தள்ளினதை நினைச்சு....''

''ஸார், நான் உங்ககிட்டே ஒரு சத்தியம் வாங்கவேணும்னு இருந்

தேன். எங்க அப்பாவை உங்களுக்குத் தெரியுமா?''

''ஓ, தெரியுமே!''

"அப்படியானா ரொம்ப நல்லதாப் போச்சு. அவரை எங்கு கண்டாலும், எப்போ கண்டாலும் கையோட என்கிட்டக்கொண்டு வந்து சேர்த்துப் பிடுங்க. நீங்க தான் கலெக்டர் ஸாராச்சே. உங்களுக்குத்தான் போலீஸ்காரங்க வேறே கையோடே எப்பவும் இருப்பாங்களாமே....? ஸார், சத்தியமா நீங்க இந்த உதவியைச் செஞ்சுத்தான் ஆகணும். எங்க அம்மா இத்தனை காலமா வடிச்ச கண்ணீருக்கு அப்பத்தான் பலன் கிடைக்கும். அப்பாவாம் - அப்பா. வரட்டும்..!'' என்று வீறுகொண்டு பேசினாள் சூடாமணி. மறுபடியும் எதையோ நினைவு கூர்ந்ததுபோல, ''நிச்சயமாச் செய்வீங்களா?'' என்று கேட்டாள்.

''சாமி பேரிலே ஆணையா உங்க அப்பாவை வெகு சீக்கிரம் உன் கையிலே ஒப்படைக்கிறேன், மணி.''

''சபாஷ். கலெக்டர் ஸார்னா கலெக்டர் ஸார்தான்! என் அப்பாவுக்கு நான் பாடம் கற்பிச்சாத்தான் நான் சிரிப்பேன்; எங்க அம்மா சிரிக்கும்!''

''சரி, சினிமாவுக்கு நேரமாயிருச்சே? வேறேபாவாடை, சட்டை உடுத்திக்கிட்டு ஓடி வா.''

''காரிலேத்தானே நாம் போகணும்?''

''ஆமாம்.''

''நான் திரும்பி எப்படி வருவேணும்?''

''நானே உன்னைக் காரிலே கொண்டுவந்து விடச் சொல்றேன் டிரைவர் கிட்டே.''

''இப்பத்தான் ஞாபகம் வருது; உங்க வீடு எங்கே இருக்குது?''

''மலைக் கோட்டையிலே.''

''ஓ, அங்கேயா? நான் கூட அந்தப் பக்கம் வந்திருக்கேன். எங்க அம்மா அங்கே ஒரு பெண்ணுக்குப் பாட்டுச் சொல்லித் தந்தாங்க. அதுசரி, உங்க பெண் சாதி அங்கேதானே இருக்காங்க? வரப்போ அவங்களையும் கூட்டி வரக் கூடாது?.... அம்மாவுக்கும் பழக்கமாகுமே....? ஊஹும், இப்போ கூட்டி வராதது நல்லதாப் போச்சு. நான் உங்க முகத்திலே சீசாவை வீசினதைக் கண்டா அவங்க எவ்வளவு ஆத்திரப்படுவாங்க எம் பேரிலே. இன்னொரு நாளைக்கு அவங்களைக் கூட்டிவர நானே வர்றேன். உங்களுக்கு என் மாதிரி பாப்பா இருக்குதா?....''

''பாப்பா, என் மனைவிக்கு உடம்பு சரியில்லை. பட்டணத்திலே அவங்க பிறந்த வீட்டிலே இருக்கிறாள். உன் மாதிரி பாப்பாவை எனக்குக் கடவுள் இன்னும் கொடுக்கவில்லை, சூடா. பகவானுக்கு என்னிக்குத்தான் மனசு இரங்கி உன் போல ஒரு கெட்டிக்கார மகளை எனக்குத் தருவாரோ?....''

''நிச்சயம் உங்களுக்கு என் போலவே ஒரு பெண் பிறக்கும், ஸார். நல்லவங்களைச் சோதிக்கிறதிலே ஆண்டவனுக்கு ஒரு சந்தோஷமாமே – சோதனையிலே வெற்றி அடைஞ்சிட்டா அவங்களுக்கு ரொம்ப ரொம்ப

நல்லது செய்வாராமே—அம்மா சொல்லுவாங்க அடிக்கடி.''

தண்டபாணிக்கு வாய் விட்டுச் சிரிக்க மட்டுந்தான் தெரிந்தது—சூடாமணியின் முன்னிலையில்.

குழந்தை கடவுளின் மறுமதிப்பு என்கிறார்களே...!

அன்று பள்ளிக்கூடத்து விழாவில் நடனமாடிய உடையுடன் தோன்றினாள் சூடா. கலங்கிக் கிடந்த அவருடைய விழிவட்டத்தில் அவள் இரட்டை இரட்டையாகத் தோன்றினாள்.

முதலில் அவர் ஏறிக் கொண்டு, அப்புறம் சூடாவின் கைகளைப் பிடித்து ஆசனத்தில் அமர்த்தினார்.

''போய் வருகிறேன், ருக்மணி'' என்று விடை சொல்லிக் கொண்டார் தண்டபாணி.

வாசலில் ருக்மிணி ஒதுங்கி நின்றாள். தலையை அசைத்தாள்.

''அம்மாவும் நம்மோட... ஊஹூம், வேண்டாம். அவங்க வேறே ஆட்களோடே இப்படியெல்லாம் வரமாட்டாங்க. ஆமா, எங்க அம்மா உங்களுக்கு என்ன சொந்தம்....?''

''...தூரத்து உறவு. ஒன்றுவிட்ட மாமா பெண்.''

''ஓ, அப்படிங்களா?.... அம்மா.... அம்மா.... நான் போயிட்டு வர்றேன்... போயிட்டு வர்றேம்மா....''

''போயிட்டுவா, கண்ணே!''

டிரைவரின் தலைக்குமேல் பொருத்தப் பட்டிருந்த பட்டைக் கண்ணாடியில் சூடா தன் உருவத்தை அழகு பார்த்தாள். அவளைத் திரும்பிப் பார்த்த தண்டபாணியின் நெற்றியில் போடப் பட்டிருந்த 'பாண்டேஜ்' தெரிந்தது.

''இப்போது, வலி இல்லையே, ஸார்!'' என்று கேட்டுவிட்டு, அவருடைய நெற்றிமீது தன் பிஞ்சு விரல்களால் இதமுறத் தடவிக் கொடுத்தாள் சூடாமணி.

கலெக்டர் தண்டபாணி ஊர் பேர் தெரியாத ஓர் உலகத்திலே பைத்தியமாக அலைந்து தன் மகளைத் தேடிக் கொண்டிருந்தார்.

7. புதிரே, பதில் சொல்!

தழல் மீது நிற்பது போலிருந்தது ருக்மிணிக்கு. திக்கெட்டும் நோக்கினாள். எங்கும் 'புதிர், புதிர்!' என்று எதிரொலித்தன.

புதிர்!—ருக்மிணியா? இல்லை, தண்டபாணியா? இல்லை, சூடாமணியா?

புதிரே, பதில் சொல்!

வாழ்க்கையே, பதில் சொல்!

விதியே, பதில் சொல்!

இமை வட்டங்களை அடித்தளமாக்கி, இமயமலை அரியாசனம் வகித்திருப்பது போல அத்துணை வலி எடுத்தது. அவள் அழுதாள். மடிமீது தவழ்ந்து கிடந்த அந்தப் புகைப்படத்தை மீண்டும் எடுத்தாள். அந்தப் படத்தில் அவளும் அவள் கணவர் தண்டபாணியும் மாலைகள் மந்தகாசம் புரிய மணக்

கோலத்தில் காணப்பட்டார்கள். 'உயிரும் உடலும் போல நீங்கள் இருவரும் பல்லூழி வாழ்க!' என்று அனுபவ முதிர்ந்த வயோதிகர்கள் நல்லாசி வழங்கின அச்சொற்கள், இப்போது அவள் காதுகளில் எதிரொலித்தன. கனவு கண்டாள். அவள் வரை எல்லாமே பகற் கனவு – உருப்படாத பகற் கனவு.

கடந்த பன்னிரண்டு வருஷங்களை இடைவெளியாக்கி விட்டு, கணவன்-மனைவி என்ற பந்தத்தைமாத்திரம் இணை சேர்த்துக் கொடுத்த அத்தனை கடிதங்களையும் கண்ணோட்டம் விட்டாள்.

இறந்த காலத்துச் சம்பவங்களுக்கு நிகழ்கால உரிமை வழங்கப்பட்டது. ஏன் தெரியுமா? — ருக்மிணிக்கு இன்னும் பைத்தியம் பிடிக்காதிருக்கிறதே யென்றுதான்!

''அம்மா, கலெக்டர் ஸார் ரொம்ப — ஊஹூம் ரொம்ப ரொம்ப நல்லவர். அவர் என் பேரிலே எவ்வளவு பிரியம் வச்சிருக்கார் தெரியுமா? நேற்றைக்கு படம் பார்த்திட்டு வந்ததும், அவர் பங்களாவுக்கு இட்டுக்கிட்டுப் போனார். சமையல்காரன் பெரிய விருந்தே வச்சுப்பிட்டான். என்னை அங்கேயே ராத்திரிக்குத் தங்கச் சொன்னார். நான் இல்லாம அம்மாவுக்குத் தூக்கம் வராதுன்னு சொன்னதும், அவரே என்னைக் காரிலே கொண்டாந்து விட்டார். அவர் என்னை பெரிய படிப்பு வரைக்கூட படிக்க வைக்கப்போறாராம். அம்மா, கடவுள் நம்ப பேரிலே கொஞ்சமாச்சும் கருணை வச்சிருக்கணும். இல்லாப்போனா, இத்தனை நாள் கழித்து, நமக்கு உள்ள இந்த சொந்தக்காரரை யாச்சும் நம்ப கண்ணிலே காட்டியிருப்பாராக்கும்?.... ஆமா, என்னைக்கண்டதும் ஏம்மா அப்படி அவருக்குக் கண்ணெல்லாம் கலங்கிப் போகுது? பாவம், என்னைப் போலே அவருக்கும் ஒரு பாப்பாவைக் கடவுள் கொடுத்துட்டா அவர் மனசு சந்தோஷப்படு

மில்லையா? அவர் மனைவி கூட இன்னும் ரெண்டு மாசத்திலே வந்துடுவாங்களாம். நம்ப ரெண்டு பேரும்போய் அவங்களைக் கூட்டி வந்து ஒரு விருந்து பண்ணிப் போடணும். கலெக்டர் ஸாரை நாம் மறக்கவே முடியாது! பார்த்தியா, மறந்துப்புட்டேன். நான் விற்ற பாவை விளக்கை எப்படியோ துப்புக் கேட்டு அவரே பணம் கொடுத்துத் திருப்பி என்கிட்டேயே தந்து விட்டார். இது கைராசி விளக்கு....'' என்று மூச்சுக்கூட விடாமல் சொல்லி முடித்துவிட்டாள் சூடாமணி — அன்று இரவில்.

விதரணை புரிந்த பெரியவர்கள் மாதிரி ஒவ்வொரு சொல்லுக்கும் அர்த்தம் வைத்துப் பேசிய தன் மகளின் பேச்சு ஒவ்வொன்றும் ரம்பமாக உருக் கொண்டு அவளுடைய உயிர் நாடியைத் துண்டித்துக் கொண்டிருந்தது. சித்திரவதை — நரக வேதனை — அம்மம்ம....!

ருக்மிணி மண்டையில் அடித்துக் கொண்டாள். தலைமயிரைப் பிய்த்துக் கொண்டாள். திருச்சியில் இந்த நிசியில் அவளுக்கு மட்டுந்தான் இப்படிப்பட்ட தலைவிதியா?

சூடா படுக்கையில் புரண்டு படுக்கும் அரவம் கேட்கவே, விசுக்கென்று அந்தப் போட்டோவை முதலில் டிரங்குப் பெட்டிக்கு அடி

யில் திணித்தாள். பிறகு அக்கடி தங்களையும் விசிறிப் போட்டாள்.

அன்றொரு நாள், அவள் தன் 'கதை'யைத் தன் மகளிடம் சொன்னபோது, "அம்மா, அந்த அப்பாவின் — இல்லை, நம் வைரியின் படம் ஏதாச்சும் இருந்தாக் கொடு. ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள் நேரிலே கண்டால் நல்ல பாடம் சொல்லித் தந்திடுவேன்...." என்று சபதம் செய்த நிகழ்ச்சி அவள் மனக் கண்ணில் படம் காட்டிற்று.

ஒரு நாள் ருக்மிணியின் கணவன் கலெக்டர் தண்டபாணியாக ஆவலை அணைத்துக் கொண்டு, கனவுகளுக்கு வாழ்வு கொடுக்கும் ஆதுரத்துடன் அவளைத் தேடி வந்தாரே! "சூடா, நான்தான் உன் அப்பா, கண்ணே! இந்த கலெக்டர் ஸார்தான் உன் சொந்தத் தகப்பன்....!" என்று அவர் உண்மையைச் சொன்ன போது, குழந்தை சூடாமணி வெறி கொண்டு, மருந்துச் சீசாவை அவர்மீது விசிய 'நினைவு நாளை' ருக்மிணி எப்படி மறப்பாள்?

தன் சொந்தக் கணவனின் நெற்றிமேட்டில் ரத்தம் கசிந்ததை கண்டு அவள் நெஞ்சில் ரத்தம் ஊற்றெடுத்ததை யார் அறிவார்கள்? யார் அறிந்தென்ன? சூடாவன்றோ அறியவேண்டும்....? கலெக்டருக்கு குழந்தை மனம் தலைகீழ்ப் பாடமா? "சூடா, நான் உன்கிட்டே சொன்னது பொய். நான் உன் அப்பா இல்லை. உன் அப்பாவுக்குத் தூரத்துச் சொந்தம்" என்று 'தப்பித்துக்கொண்ட' தந்திரத்தில் விதி என்ற சொல் அல்லவா கைகொட்டிச் சிரித்தது....!

தன் கணவன் தன்னினின்றும் வெகுதூரம் பிரிந்துவிட்டதை— பிரிக்கப்பட்டுவிட்டதை நினைத்த ருக்மிணிக்கு 'சாவு' ஒன்றுதான் ஆறுதலாகப் பட்டது. ஆனால் அப்பொழுதும் அவளுக்கு மகள் நினைவு தான் குறுக்கே விழுந்தது.

"ருக்மணி, என் குழந்தை என்னை அப்பா என்று கூப்பிடக் கொடுத்துவைக்காத பாவியாகி விட்டேன். நம் குழந்தையின் முன் உன்னை என் மனைவி என்று அழைக்கும் உரிமையையும் இழந்துவிட்டேன், பாவி...." என்று விம்மியபடி அவர் சொன்ன சொற்கள் 'டேப் ரிகார்ட்' போல இன்னமும் அவள் நெஞ்சில், நினைவில் எதிரொலிக்கின்றனவே!

ருக்மிணி அம்பிகையை நாடி, "தாயே, என் குழந்தை சூடாவின் மனதை மாற்று. என் கணவரை எனக்குத் தந்துவிடு...!" என்று பிரார்த்தித்தாள்.

8. இரண்டாவது 'முதல் இரவு'

தீ நாக்குகள் ரசாயன மாற்றம் செய்து காட்டிய சாம்பர்த்துகள்கள், இமைப் போதிற்குள் தண்டபாணியாக உருவெடுத்தன.

ருக்மிணி செவி மடுத்தாள்:

"அன்பே,

எழுத்துக்கு எழுத்து உரிமையைத் தேய்த்து, அன்பை வார்த்து, ஆசையை மெழுகி உன்னை அழைக்கும் பாக்கியத்தை- உரிமையை இக்கடிதமாவது தருகிறதே-அதுவரை நான் கொடுத்து வைத்தவன்தான்.

நீ என் உரிமை. ஆனாலும் அந்த உரிமையை நம் குழந்தை சூடாவின் முன் திரும்பப் பெற்றால்தானே உன் வாழ்வு-என் வாழ்வு- நம் வாழ்வு சிரடைய முடியும்?

உன் நிலையை நான் அறிவேன். என் நெற்றியில் வடிந்த ரத்தத்தைக் கண்டு நீ அடைந்த வேதனையை உன் முகம் சொல்லிக்காட்டியது. உன் கண்களில் கண்ணீரைக் கண்டேன். எனக்குக் கண்ணீர் பெருகியது. நான் என்ன செய்வேன்? நீதான் என்ன செய்வாய்?

அன்று சூடாவுக்குப் படம் காட்டித் திரும்பும்போது, என் வலது கன்னத்திலிருந்த மருவைக் கண்டு

சூடா கேட்டாள், 'ஏன் ஸார், எனக்கு வலது கன்னத்திலே இருக்கிற மாதிரியே உங்களுக்கும் அதே வலது கன்னத்திலே புள்ளியிருக்குதே!' என்று. நல்லவேளை, தத்துவ ஞானி பிராய்டின் பாரம்பரிய விளக்கத்தை அவள் அறிந்துகொள்ளும் பிராயம் வரவில்லை. ஆம், ருக்மிணி. என் வலது கன்னத்தில் இருக்கும் மரு நம் குழந்தையின் அதே வலது கன்னத்தில் இருப்பது தான் பிறப்பு ரகசியம்–பாரம்பரியத் தத்துவம். இந்த உண்மையைச் சூடா அறியநேர்ந்துவிடுமானல்..? சூடாவின் சபதத்தை நான் அறிவேன். அவள் சொல்வதுபோல, தன் தந்தையின் தவறுக்குக் கொடுக்கும் தண்டனையை நான் தாராளமாக ஏற்கக் காத்திருக்கிறேன். ஆனல் எனக்கு ஒரே ஆசை - என் உயிர் பிரிவதற்குள் ஒரு தரம் - ஒரே தரமாவது என் சூடா என்னை 'அப்பா' என்று அழைக்கக் கேட்டால் போதும். பிறவி புனிதம் பெற்றுவிடும். நான் 'தந்தை' என்ற பதவியை அடைந்து விடுவேன்.

ருக்மிணி, நாம் செய்த தந்திரங்கள் நல்ல வேளை தந்திரங்களாகவே இருந்துவிட்டன. எப்படியோ சூடாவை நாடகத்துக்கு அனுப்பிவிட்டு, திட்டப்படி நீ என்னை அடைந்து விட்டாய். ஆஹா, பன்னிரண்டு வருஷங்கள் கழித்து எனக்கு என் ருக்மிணி கிடைத்தாள். இந்த என்னுடைய 'இரண்டாவது முதல் இரவை' எவ்விதம் நான் மறப்பேன்?

ருக்மிணி, கண் கலங்காதே. சூடா எனக்குக் கிடைத்து விடுவாள். அந்தித்தாமரைக்கு உதய சூரியன் கருணை காட்டாமல் இருக்கவே மாட்டான்!

நம் சூடா இந்தக் கடிதத்தைப் பார்த்துவிடப் போகிருள்-முதலில் இதைத் தீயிட்டுவிடு.

உன் பிரியமுள்ள அத்தான்,

தண்டபாணி''

உலக உருண்டைக்குக் கண் இல்லை; இதயம் இல்லை.

ருக்மிணிக்குத் திடீரென்று வயிற்றைக் குமட்டியது. தலை சுற்றியது. மயங்கிக் கீழே சாய்ந்து விட்டாள்.

9. "அப்பா!...அப்பா!..."

'ஸ்டெத்தஸ்கோப்' முறுவலித்தது: "கலெக்டர் ஸார், உங்கள் மனைவி உங்களுக்கு ஒரு தங்கப் பாப்பாவைப் பரிசு தரப் போகிறார்கள்!"

தண்டபாணிக்கு ஆனந்தம் தலைகால் புரியவில்லை. "என் ருக்குவுக்கு வெட்கத்தைப் பார், வெட்கத்தை!" என்று கேலி பண்ணினார்.

தம்பதிகள் ஊடல் வசப்பட்டனர். நாடிக்குழலுக்கும் பிறை நிலவுக்கும் அப்புறம் அங்கு என்ன வேலையாம்?

"ருக்கு, இன்றைப்பொழுதுக்கு சூடா இங்கு வராதல்லவா?

"ஊஹூம்"

"ருக்கு" என்று கூப்பிட்டுக் கொண்டே, தண்டபாணி மெல்ல அவளை அண்டினார். இதயத் துடிப்பும் இதயத் துடிப்பும் மௌன பாஷை பேசிக்கொண்டன. கண் இணையும் கண் இணையும் நயன பாஷை பேசிக்கொண்டன. அவருடைய விரல்கள் அவளுடைய கன்னங்களுக்குப் போதை ஏற்றின. அவளது கனிஇதழ்களில் என்னவோ புரியாத ரகசியம் எழுதப் பட்டிருந்தது. அது என்ன என்று படிக்க அவர் தலையைத் தாழ்த்தினார். அவள் வெளியேற்றிய பெருமூச்சின் உஷ்ணம் அவர் உடலில் சூடேறியிருந்த வெம்மையில் படிந்தது. "அத்தான் – ருக்கு" என்ற ஒலியின் சிற்றலைகளைத் தவிர அங்கு வேறு சந்தடியே கிடையாது.

இன்பலோகம் சுழல எத்தனித்தது.

அப்போது—

"அம்மா, அம்மா!" என்று கூப்பாடு போட்ட வண்ணம் ஓடோடி வந்தாள் சூடாமணி. அவளுக்கு முன் ஓடோடி முத்தமிட்டது அவள் தன் அன்னைமீது வீசிய அந்தப் பாவை விளக்கு. வலது கன்னத்தில் ரத்தம் பீறிட்டது.

தண்டபாணிக்குத் தலை கிறுகிறுத்தது.

ருக்மிணிக்கு மறுபடியும் மயக்கம் வரும்போலிருந்தது.

"பாவி, எத்தினி நாளா இந்த நாடகம்? ஐயோ, எங்க அம்மாவைக் கெடுக்கப் பார்த்தியே?...." என்று அலறினாள் சிறுமி சூடாமணி.

"சூடா, இவர்தான் கண்ணே உன் அப்பா!" என்றாள் ருக்மிணி உணர்ச்சி வசப்பட்டவளாக.

"ஆமாம், கண்ணே! இந்த கலெக்டர் ஸார்தான் உன் அப்பா. நீ தரும் தண்டனையை ஏற்கச் சித்தமாகயிருக்கிறேன். இதோ, இந்தக் கல்யாணப் படத்தைப் பார். நான்—என் அருகே இதோ உன் அம்மா....! உன் மனம் மாறும் போது, இந்த உண்மையைத் தெரிவிக்கலாமென்றிருந்தோம். கண்ணே, உன் அம்மாவை எனக்கு கொடு. நான் உனக்கு ஒரு அழகுப் பாப்பாவைத் தருகிறேன். ஒரு முறை என்னை 'அப்பா' என்று வாய்குளிரக் கூப்பிடு. இல்லையேல், இனி நீ என்னை உயிருடன் காணவே முடியாது. உன் அம்மாவுக்காகவாவது என்னை மன்னித்து விடு!" என்று அழுதார் கலெக்டர் தண்டபாணி.

ருக்மிணி - தண்டபாணி திருமணப் புகைப் படம் சூடாமணியின் உள்ளங்கையில் சிறைப்பட்டிருந்தது.

"அப்பா!.... அப்பா!...."

★

அன்பும் பாசமும் பொங்க வேண்டிய அந்த இதயத்தில் ஆத்திரமும் பொருமையும் குமுறிக் கொண்டிருந்தது. ஒருநாள் நிலை மாறியது. விசுவநாதன் மனிதரானார். காரணம்: அவர் —

இதயம் திறந்தது

கே. ஆர். கௌசல்யா

நான்காவது 'டோஸ்' காப்பிக்காக உள்புறம் திரும்பி மனைவியிடம் உத்தரவிட்டு விட்டு, அன்றையத் தினசரித் தாளுடன் நாற்காலியில் சாய்ந்து கொண்டார் விசுவநாதன்.

தற்செயலாக அவருடைய பார்வை ரேழிப்பக்கம் சென்றது. வயசு சுமார் பதினெட்டும் பதினைந்தும் மதிக்கத்தக்க இரு பையன்கள் கூடத்தில் பிரவேசித்துத் தயங்கி நின்றனர். வந்தவர்கள் தன் தம்பியின் பிள்ளைகள் என்று அறிந்ததும், அவர்களைப் பார்க்காதது போன்ற பாவனையுடன் தினசரியை முகத்துக்கு நேராக மறைக்கும் வண்ணம் பிரித்து வைத்துக் கொண்டார்.

''பெரியப்பா, எங்கள் துரதிர்ஷ்டம்தான் உங்கள் உறவு இத்தனை நாள் தடைப்பட்டிருந்தது. இப்போது அப்பா போய்விட்டபிறகு, எங்களுக்கு இனி நீங்கள் தான் துணையாயிருக்கவேண்டும்'' என்றான் சந்துரு தழுதழுத்த குரலில்.

அதைக் காதில் வாங்கிக்கொண்டதாகக் காட்டிக் கொள்ளாமலே, ''அலமு, இவர்களுக்குக் காப்பி கொண்டு வா'' என்றார்.

''பெரியப்பா, அப்பாவுடைய காரியங்களுக்கு நாங்கள் எதிர்பார்த்ததைவிட அதிகம் செலவாகி விட்டது. நீங்கள் பார்த்தீர்களே, துக்கம் விசாரிப்பது போன்று எத்தனை உறவினர் கூட்டம் சாப்பிட வந்து உட்கார்ந்து எங்கள் பிராணனை வாங்கிவிட்டார்கள் என்பதை. வெளியிலே கடன் வாங்கின இடத்தில் இப்போது ரொம்பவும் கெடுபிடியாக இருக்கிறது. அது விஷயமாகத் தான் உங்களிடம் உதவி கோரி வந்திருக்கிறேன். நீங்கள் பெரிய மனசு வைத்து இப்போது ஒரு நூறு ரூபாய் கொடுத்து உதவினால், பிறகு தந்து விடுகிறேன். இப்போதுதானே வேலையில் சேர்ந்திருக்கிறேன். கடன் கொடுத்தவனிடம் என்னதான் தவணை கேட்டுக் கொண்டாலும் ரொம்ப நாட்களாகும். எனக்கு வருகிற எண்பது ரூபாய் சம்பளத்தில் குடும்பச் செலவுபோக மீதியைக் கடனுக்கு எத்தனை தத்துவிட முடியும்?... உங்களிடமானால் நிதானமாய்த் தரலாம். என்னவோ, சிறுவயசிலே இப்படித் திக்கற்று நின்று விட்டோம்'' என்றான் மூத்தவன்.

உட்புறமிருந்து மெல்லிய கனைப்புச் சத்தம் கேட்டது. அலமு, ''ஒத்துக் கொள்ள வேண்டாம்'' என்று முகபாவத்தினால் விளக்கியதைப் புரிந்து கொண்டார் அவர்.

''நான் புதுசாக ஒரு வீடு கட்டியிருக்கேன். அதில் செலவு ரொம்ப ஆகிவிட்டது. இன்னும் அதற்குக் கிரகப்பிரவேசம் வேறே செய்தாகணும். அந்தச் செலவுக்கே பணமில்லாமல் நான் திண்டாடுறேன். கொஞ்ச நாள் கழிச்சு முடிஞ்சா ஏதாவது ஒத்தாசை செய்கிறேன். இப்போது ஒன்றும் முடியாது. நான் என்ன செய்வேன்?''

மணியும், சந்துருவும் மனம் வெறுத்து எழுந்து விட்டனர். ''சொந்தத் தம்பி செத்து இத்தனை விரைவில் இவர் புது வீட்டுக்குக்

கிரகப் பிரவேசம் செய்யப் போகிருர்; பார்த்தாயா நெஞ்சை? கற்பாறையை வெட்டினல் நீரூற்று கிடைக்குமா? இந்தப் பெரியப்பாவின் சுபாவமறிந்து நீயும், அம்மாவும் இப்படிக் கேட்கத் திட்டமிட்டீர்களே? நம் சுயகெளரவம் கெட்டதுதான் மிச்சம்.'' என்று ஆத்திரத்துடன் மணி பேசிய போது, சந்துருவின் விழிகளில் கண்ணீர்த் துளிகள் நிறைந்தன.

*

விசுவநாதனும், சதாசிவமும் சகோதரர்கள். சிறுவயதில் எத்தனையோ செளஜன்யமாக இருந்த அவர்களுடைய சுமுகமான உறவில் ஒரு விரிசலை ஏற்படுத்துவதற்காக வேண்டுமென்று செய்த சதிபோல், விதி மூத்தவன் விசுவநாதனின் இல் வாழ்க்கையைச் சோபிக்கச் செய்யவில்லை. விவாகமான பல வருஷங்களுக்குப் பின்பும் ஒரு குழந்தையைக் கூடக் கொடுக்கவில்லை.

சதாசிவத்திற்கோ அடுத்தடுத்து மூன்று குழந்தைகள் பிறந்து விட்டன. ஏற்கனவே எரிந்து கொண்டிருக்கும் அடுப்பில் ஒரு புட்டி மண்ணெண்ணெயை ஊற்றினற்போல் விசுவநாதன் தம்பதிகளின் உள்ளக் குமுறலைப் பின்னும் அதிகமாக்கிக் கொந்தளிக்கச் செய்ய வேறு ஒரு சந்தர்ப்பமும் உருவாக நேர்ந்தது. காரியாலயம் விட்டு பஸ்ஸில் வந்து கொண்டிருந்த சதாசிவமும், அவன் நண்பனும் தமக்குப் பின் ஆசனத்திலிருந்த விசுவநாதனைக் கவனிக்காமல் பேசி விட்டனர்.

''உன்னைவிட உன் அண்ணு நிறைய சம்பாதிக்கிருப்போலிருக்கிறதே? இது அவரவர் பிறந்த வேளையின் மகிமையப்பா.''

''ரகு, அதுபற்றி எனக்குக் கவலையே யில்லை. பணம் காசினுல் பெறமுடியாத மக்கள் செல்வத்தைப் பெறும் பாக்கியத்தை இறைவன் அருளியிருக்கிருர். அது போதும் எனக்கு.''

பஸ்ஸிலிருந்து இறங்கிய போது கூடவே இறங்கிய அண்ணுவைக் கண்டு எந்தவிதத் திகிலோ, கலவரமோ அடைந்து விடவில்லை சதாசிவம். அவன் சகஜமாகப் பேசத் தொடங்கிய போது விசுவநாதன் மிகவும் விறைப்புடன் காணப்பட்டார். பிறகு ஒரு தினம் சதாசிவம் தன் குழந்தைகளுடன் அவர் வீடு தேடிச் சென்ற போது, அவன் குழந்தைகளைத் தம் கண்கள் பார்த்தால் கூட தவறு என்றும், தம்மால் அவர்களுக்குத் திருஷ்டி விழுந்துவிடும் என்றும் மறைமுகமாகப் பேசித் தம் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டனர் அலமுவும், விசுவநாதனும். வயதில் எத்தனையோ பெரியவர்களாக உள்ள தாம் இப்படிப் பெருந்தன்மையின்றி மாறி விட்டதை அவர்கள் கொஞ்சமும் உணரவில்லை. அத்துடன் சதாசிவம் அதைப்பாராட்டாமல் சகோதரன் வீடு தேடிச் சென்ற போதெல்

லாம் அவனை மதிக்காது, அவன் குழந்தைகளையும் வெறுப்பும், பொருமையும் பொங்கப் பார்த்தனர். குடம் பாலிலே ஒரு துளி விஷம் தெறித்தால் போதாதா? பிக்கல் பிடுங்கல் ஏதுமில்லாத காரணத்தால், விசுவநாதன் கை ரொக்கமாகச் சேர்த்திருந்த பணத்தைக் கொண்டு வீடு ஒன்று கட்டத் திட்டமிட்டார்.

''அண்ணா, நீங்கள் கட்டபோகும் வீட்டைப் போலவே மற்றொரு வீட்டை அதன் பக்கத்திலேயே எனக்கும் கட்டிக் கொடுங்கள். கையிலுள்ள கொஞ்சம் தொகையை இப்போது தருகிறேன். மிகுதியை மாசாமாசம் கொடுக்கிறேன். இப்படி ஒரு முக்கிய காரியத்திற்காகவென்று முனைந்தால்தான் மாசம் கொஞ்சம் பணம் மிச்சம் பிடித்தேயாக வேண்டும் என்ற கட்டாயமும், சிரத்தையும் தோன்றி, உருப்படியான ஒரு காரியம் முடியும். இல்லாவிட்டால் சம்சாரியான நான் மிகவும் திண்டாடிப் போய்விடுவேன் எதிர்காலத்தில்....'' என்றான் சதாசிவம் குழைவுடனும், ஆவலுடனும்.

''உன் குறைந்த சம்பளத்தில் மாசம் கொஞ்சம் என்றால், ஒரு வீட்டுக்கான செலவைத் தீர்க்க உன் பேரன் சம்பாதிக்கும் காலம் வந்தால் கூடப் போதாதே? என்னிடம் இந்த ஏற்பாட்டைச் செய்து கொள்ளுவதைவிட சர்க்காரில் வீடு கட்டித் தருகிறார்களே; அந்த ஏற்பாட்டைச் செய்து கொள்ளலாமே? உனக்கும் சேர்த்து முன்பணம் போட என்னிடமில்லையே?'' என்று பாசமோ, பரிவோ சிறிதும் இன்றிச் சொல்லிவிட்டார் விசுவநாதன்.

திடுமென சதாசிவத்தின் உடல் நிலை பாதிக்கப்பட்டது. சாதாரண வீட்டு வைத்தியத்தில் உடம்பு சரியாகாமல் ஆஸ்பத்திரிக்குப் போகும் அளவுக்கு முற்றிவிட்டது. விசுவநாதன் ஒப்பனைக்கு வந்து பார்த்துவிட்டுப் போய்விட்டார்.

கடைசியில் ஒரு நாள் தன் குழந்தைகளையும், மனைவியையும் கதற விட்டுக் கண்ணை மூடிக் கொண்டான் சதாசிவம். சதாசிவத்தின் மனைவி மிகுந்த சிரமப்பட்டுத் தன் பெரிய பிள்ளைகளின் துணையுடன் கணவனின் காரியங்களை நடத்தினாள். வேலையில் அமர்ந்து சிறிது காலமே ஆகியிருந்த மூத்த பிள்ளை சந்துரு பணமுடையினால் தத்தளித்தான். நண்பன் ஒருவனிடம் கெஞ்சிக் கேட்டுப் பணம் கடன் வாங்கினான். அச்சமயத்தில் தான் சதாசிவத்தின் மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் விசுவநாதனிடம் பணம் கடன் கேட்கும் யோசனை தோன்றியது. ஆனால், அவர்கள் நம்பிக்கையை அடியோடு நசித்துப்போக வைத்துவிட்டார் விசுவநாதன்.

*

"நான் உங்கள் தம்பி சதாசிவத்தின் உயிர்த் தோழன். காரியாலயத்தில் தனக்கு வரும் குறைந்த சம்பாத்தியம் போதவில்லை என்று சதாசிவம் ஓய்ந்த நேரத்தில் ரேடியோ சம்பந்தப்பட்ட 'ரிப்பேர்'களைக் கவனித்து வந்தான். அதிலே அவனுக்கு ஓரளவு பணம் கிடைத்து வந்தது. அது விஷயத்தில் என்னாலான ஒத்தாசையை நான் செய்து வந்தேன். ஒரு தடவை நல்ல ரேடியோ ஒன்று விலைக்கு வந்தது. அதை அவனிடம் நான் சொன்னபோது அந்த ரேடியோவைத் தான் வாங்கிக்கொள்ள விரும்புவதாகவும், அதற்கு மாதம் கொஞ்சம் பணம் கொடுத்து வருவதாகவும் சொல்லி, அவ்விதமே என்னிடம் கொடுத்தான்.

''இச்சமயத்தில்தான் அவன் ஆஸ்பத்திரியில் படுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இறந்து போவதற்கு இரண்டு நாட்கள் முன்பு என்னை அழைத்து, 'நான் இனிப் பிழைக்கமாட்டேன் என்று தோன்றுகிறது. நான் வாங்கப்போவதாக இருக்கும் ரேடியோ உன்னிடம் சொல்லியிருக்கிறபடி எனக்கல்ல. அது என் அண்ணா விசுவநாதனுக்கு. அவர் புதிதாக ஒரு வீடு கட்ட ஆரம்பித்து அது முடியும் தறுவாயிலிருக்கிறது. அதில் கிரகப்பிரவேசம் செய்யும்போது நான் அவருக்கு இதை அன்புப் பரிசாக அளிக்கத் திட்டமிட்டுத்தான் இதை வாங்கினேன். நான் பிழைத்து எழுந்துவிட்டால் அதை நானே செய்வேன். அந்த அதிர்ஷ்டம் எனக்குக் கிடைக்காதபடி நான் இறந்துவிட்டால், நீதான் எனக்குப் பதிலாக அதைச் செய்ய வேண்டும்' என்று கண்ணீர் மல்கப் பேசினான். பணத்தை என்னிடம் அவன் கொடுத்து முடிந்ததும் அதைச் சொந்தக்காரரிடம் சேர்ப்பித்து விட்டேன். இதோ, இந்த ரேடியோவையும் இந்தக் கடிதத்தையும் உங்களிடம் சேர்ப்பிக்கச் சொன்னான்'' என்று துயரத்துடன் கண்ணீர் பெருகக் கூறியவாறே வந்திருந்தவன் எழுந்தான்.

*

''அருமை அண்ணாவுக்கு,

அநேக நமஸ்காரம். சிறிய கல்உளி ஒன்றுக்குப் பெரிய கற்பாறையைத் தகர்த்துவிடும் திறன் உண்டு. இது மனிதர்களின் வாழ்க்கையுடன் மிகவும் பொருத்தமாக ஒன்றக்கூடிய ஓர் உவமை. எத்தனையோ காலமாக நெருங்கி வளர்ந்திருக்கும் ஒரு சுமுகமான உறவை மிகச் சிறிய அற்ப விஷயம்—மனத்தாங்கல் தகர்த்துவிடும். அல்லது பழைய விரோதத்தைத் தள்ளி மூடிவிட்டு, புதிதாகப் பிறக்கும் உறவு அந்த நேசத்தையும் பாசத்தையும் மீண்டும் துளிர்க்கச் செய்துவிடுவதும் உண்டு. இரண்டாவதைவிட, முதலில் சொன்ன விஷயம் தான் வாழ்க்கையில் நிச்சயமாக நிறைவேறும்.

ஒருநாள், நான் என் நண்பனிடம் பேசிவந்த பேச்சு உங்கள் இதயத்தை எவ்வளவு புண்படுத்திவிட்டது? உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமாகப் பதிந்துள்ள ஒரு குறையைப் போக்கும் வழி செய்ய இயலாவிடினும், அதைக் குத்திக் கிளறிவிடுவது போன்ற ஒரு பாவத்தை நான் செய்துவிட்டதற்கு மன்னியுங்கள். ரேடியோ விஷயத்தை என் நண்பன் விளக்கமாகச் சொல்லுவான். நீங்கள் கட்டிக் கொண்டிருக்கும் புது வீட்டில் அதை வைக்கவேண்டும் என்பது என் ஆசை. நெஞ்சின் துயர அலைகளை விரட்டிக் கவலையை மறந்து லயிக்கச் செய்யும் ஒரு பொழுதுபோக்குச் சாதனமான என் அன்பளிப்பினால் நிரந்தரமாக உங்கள் மனக்குறையைப் போக்க இயலா விடினும், அவ்வப்போதேனும் உங்கள் குறையை மறக்கச் செய்யாதா?

உங்கள் வீட்டுடன் எனக்கும் கடனில் ஒரு வீடு கட்டித்தரச் சொல்லி உங்களிடம் கேட்டபோது நீங்கள் மறுத்ததும் நன்மைக்கே ஆயிற்று. இப்போது நான் இறந்துவிட்டால், இரட்டிப்புச் செலவை நீங்களல்லவா ஏற்றுச் சிரமப்பட வேண்டியிருக்கும்? வீடு கட்டினால் அதற்காக உங்களிடம் தருவதாகச்

சொன்ன தொகையை எப்படியும் மிச்சம் பிடித்து வைத்து உங்களுக்கு என் அன்பளிப்பை அளிக்கத் திட்டமிட்டேன். இந்த ரகசியம் என் மனைவி, மக்களுக்குக் கூடத் தெரியாது.

உங்கள் சகோதரன்,

சதாசிவம்''

''ஐயோ, சதாசிவம்!'' என்று கத்தியவாறு விசுவநாதன் கரங்களில் முகம் பதித்து விம்மினார். அலைகளால் மோதப்பட்டு ஈர்த்துப் போன அவரது நெஞ்சுச் சுவர்களிலே பச்சாத்தாபமும், நன்றியும் கசிந்தன. செய்தியறிந்த அலமுவும் மனம் துடித்துக் கண்ணீர் வடித்தாள்.

*

அன்று விசுவநாதனின் வீட்டில் கிரகப் பிரவேசம். சதாசிவத்தின் மனைவி, குழந்தைகள் எல்லோரும் அவருடைய இல்லத்தில் வந்து சேர்ந்திருந்தனர். அன்று பணம் கடன் கேட்டபோது அத்தனை விறைப்பாகப் பேசிய பெரியப்பா, இன்று தங்களை நிரந்தரமாகக் காப்பாற்றும் பொறுப்பேற்றுக் கொள்ளப் போவதாக அழைத்து வந்ததனால் ஏற்பட்ட மகிழ்ச்சியும், திகைப்பும் தாளாமல் விழித்தவாறே சகோதரர்கள் திக்பிரமையடைந்திருந்தனர்.

கிரகப்பிரவேசம் முடிந்தது. நடுஹால் சுவரில் தன் அருமைச் சகோதரன் சதாசிவத்தின் புதிய போட்டோவை மிகவும் கருத்துடன் எடுத்து மாட்டினார் விசுவநாதன்.

''அவன் இன்று இல்லை. அவன் அளித்த பரிசு ரேடியோ இதோ இருக்கிறது....'' என்று தழுதழுத்த குரலில் நண்பர்களிடம் சொல்லிக் கண்ணீர் வடித்தார் விசுவநாதன்.

நண்பர்களை மாடியில் உட்கார வைத்துவிட்டுக் கீழே வந்தபோது, அவர்கள் மெல்லிய குரலில் பேசிக் கொண்ட வார்த்தைகள் அவர் நெஞ்சை வாள் கொண்டு அறுத்தன.

"நம்ம பையன் வியாபாரம் எப்படி நடக்குது? என்ன தம்பி, இப்பிடித் துரும்பா இளைச்சுப் போயிட்டே?''

''வியாபாரம் நல்ல லாபமா நடக்குது! நான்கூட உங்கமகன் ஹோட்டல்லேதான் இந்தப் பத்து நாளாச் சாப்பிட்டேன்!''

''மிஸ்டர் பரமசிவம், விசுவநாதனின் இந்தச் செயலைப் பார்த்து ரொம்ப அதிசயித்துவிடாதீர்கள்! உயிரோடு இருக்கும்போது தன் தந்தையை மதிக்காமல் அவரைச் சோற்றுக்கும், ஒரு சொட்டு நெய்க்கும் ஏங்க வைத்த தனயன், அவர் மரணமடைந்ததும், அவருக்குக் கடைசிக் காரியங்கள் செய்யும்போது, தன் பெருமைக்காக ஹோமத்தில் தொன்னை தொன்னையாக நெய் வார்த்தானாம். அந்தக் கதையாக, இருந்தவரை தனக்குக் குழந்தைகளில்லையே என்று தம்பியிடம் மகா துவேஷம் இந்த மனுஷனுக்கு! இப்போது சதாசிவத்தின் போட்டோவை மாட்டுவதாலும் அவனுக்காகக் கண்ணீர் வடிப்பதாலும் என்ன பலன்....?''

அவர்கள் பேசிய பேச்சில் மறைந்திருந்த உண்மையை உணர்ந்தார் விசுவநாதன். அவர் தன் அருமைத் தம்பியின் மானசீக உருவத்தின் முன் மண்டியிட்டுக் கதறிக் கதறி அழுது மன்னிப்புக் கோரிக் கொண்டிருந்தார். ★

ஞானோதயம்

'ஞானோதயம்' புதுமை காட்டுகிறது– போல்ட் நட், இராவணன், ஜானகி, ஸ்ரீராமன், மடிகொடுத்த தாய் முதலிய குணச்சித்திரங்களை அறிமுகப்படுத்தும் அளவில். திரு ராமையா அவர்களின் கதைகளில் சம்பவச் சுவையும் உண்மை நடப்பும் சிறப்பாக இருக்கும். இத் தொகுதி அதற்கு உரைகல்.

[ஆசிரியர்: பி. எஸ். ராமையா, வெளியீடு: அமுத நிலையம், சென்னை-18. விலை ரூ. 1–2–0]

வாழ்வளித்த ஜீவன்

'வாழ்வளித்த ஜீவன்' சித்திரித்துக் காட்டியிருக்கும் கதைகளிலே நடைத் தெளிவும், கட்டுக் கோப்பும் இன்னும் சற்றே கவனத்துடன் கையாளப்பட்டிருந்தால், இத் தொகுதி சிறப்புப் பெற்றிருக்கும்.

[ஆசிரியர்: ஆர். எஸ். மணி. வெளியீடு: மின்னொளிப் பிரசுரம்; சென்னை-1. விலை ரூ. 1–8–0.]

பேசும் பதுமை

துப்பறியும் கதைகள் எழுதும் தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் ஒரு சிலருள் திரு ஆர். எஸ். மணி ஒருவர். 'பேசும் பதுமை'யில் வழக்கமாக நாம் எதிர்பார்க்கும் பயங்கரச் சம்பவங்களே வந்துபோகின்றன. நவீனத்தில் மணக்கும் மேற்குக் காற்றின் வாடையை விமரிசகர்களின் பேனாக்களாவது நுகராவண்ணம் ஆசிரியர் செய்திருக்க வேண்டாமா?

[ஆசிரியர்: ஆர். எஸ். மணி. வெளியீடு: மலர் நிலையம், சென்னை-1. விலை ரூ. 1–8–0.]

சரஸ்வதி

இலக்கியச் சந்தையில் 'சரஸ்வதி' என்றொரு மாத இதழ் கடந்த சில மாதங்களாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. 'சரஸ்வதி'யில் பல்வேறு பிரிவுச் செய்திகள் அடங்கியிருக்கின்றன. தமிழ் மக்களுக்கு உருப்படியான சேவை செய்யவேண்டுமென்ற ஆர்வத்தால் 'சரஸ்வதி'யை வெளியிட ஆரம்பித்ததாக ஆசிரியர் கூறுகிறார். ஆகவே, தமிழர்கள் 'சரஸ்வதி'யை வரவேற்று ஆதரவு நல்க வேண்டுவது அவர்களுடைய கடமை.

[ஆசிரியர்: வ. விஜய பாஸ்கரன். முகவரி: 'சரஸ்வதி'– சென்னை-7. விலை ரூ. 0–2–0.]

பூவைமாநகர்க் குமரன் பிள்ளைத் தமிழ்

ஆண்டவனைப் பிள்ளையாக உருவகப்படுத்திப் பாடப்படும் 'பிள்ளைத் தமிழ்' வரிசையில் இதற்கு முன் சில நூல்கள் வெளியாகியிருக்கின்றன. அவ்வரிசையில் இந்நூல் பெருமையுடன் இடம் பெறுமளவுக்குச் சிறப்புப் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு பருவத்துப் பாடலிலும் அருள் ரசம் ததும்பி நிற்கிறது. 'முத்தப் பருவ'த்தில் செந்தமிழ்ப் பாவலரின் இதயக் குரலுக்கு ஒரு மாதிரி:

'ஆறடைந்த மோலி கொண்ட அழகன்
முத்தம் தருகவே!
ஆகமங்க ளோதுகின்ற அதுலன்
முத்தம் தருகவே!
விறடைந்த ஆரலென்ற விரதன்
முத்தம் தருகவே!
மீமிகுந்த தோமிகந்த விமலன்
முத்தம் தருகவே!
மாறடைந்த சூர்தடிந்த மகிபன்
முத்தம் தருகவே!
மாசகன்ற தேசுகந்த வடிவன்
முத்தம் தருகவே!
கூறடைந்த பேரடர்ந்த குழகன்
முத்தம் தருகவே!
கோவதிந்த பூவை
வந்த குமரன்
முத்தம் தருகவே!

[ஆசிரியர்: செந்தமிழ்ப் பாவலர் சு. வை. மீ. சிவசுப்பிரமணியச் செட்டியார், பூவைமாநகர்]–பிறைசூடி.

புத்தரின் புன்னகை

'ரதி'

'புத்தம் சங்கம் கச்சாமி
தர்மம் சங்கம் கச்சாமி'

மறைந்து சென்ற புத்தமதத் துறவிகள் விட்டுச் சென்ற அந்தப் பாட்டொலி இன்னும் அவள் செவிகளில் இன்பத் தேன் பாய்ச்சிக் கொண்டிருந்தது. அவள் விழிகள் கலங்கின.

''பௌத்த பிக்ஷுக்களின் கூட்டமா வீதியில் சென்றது, சாந்தி?''

''ஆமாம், அப்பா.''

''மகளே, நேற்று உன் திருமணம் பற்றி உன் முடிவைக் கேட்டேனே?... என்னம்மா முடிவு செய்தாய்?''

''முடிவு என்ன, அப்பா. என் நெஞ்சில் புத்தர் பிரான் ஒருவரே நீக்கமற நிறைந்திருக்கிறார். அவர் நினைவு ஒன்றுதான் எனக்கு உயிர். அவர் போதனை ஒன்றே எனக்கு வழிகாட்டி...''

''மகளே, என்னைத் தவறாக எண்ணாதே. அரசன் தேவனம்பிரியனைப் பற்றி நீ அறியாததல்ல. அவன் வாயசைத்தால் குறுநில மன்னர்கள் எத்தனையோ பேர் தம் பெண்களை அவன் கைகளில் ஒப்படைக்கக் காத்திருக்கிறார்கள். அத்தனை புகழ் படைத்த பேரரசன் உன்னை ஒரு நாள் தோட்டத்துப் பூம்பொழிலில் கண்டானாம்; உன் எழில் அவன் நெஞ்சில் பதிந்ததாம்; உன் பெயரைத் தன் இதயப் பேழையில் பத்திரமாகப் பதித்து வைக்க விண்ணப்பம் விடுத்தான். அவன் அன்பு என்னை அடிமையாக்கியது. 'சரி' என்றேன். ஆனால் உன்னிடம் ஒரு வார்த்தை கேட்க வேண்டுமென்று அப்போது தோன்றவில்லை. ஆனால் நான் வாக்குக் கொடுத்துவிட்டேனே...''

''தந்தையே, தேவனம்பிரியன் மன்னனாக இருக்கட்டும்; மன்னாதி மன்னனாகவும் இருக்கட்டும். ஆனால் என் தலைவர் புத்தரின் புன்னகைக்கு முன் எந்த மணிமகுடமும் தலை நிமிர முடியாது. உங்கள் வேந்தனுக்கும் மேம்பட்ட பேரரசன் ஒருவன் மண்ணிலும் விண்ணிலும் உறையும் போது, இவன் எம்மாத்திரம்?... ஆனால், நீங்கள் சொன்ன சொல்லை எண்ணும் போதுதான்...''

சாந்திக்குப் பேச்சைத் தொடர் சேர்க்க வாய் இல்லை. விம்மினாள்.

கங்கைக் கரையிலிருந்த புத்த பிக்ஷுக்களின் ஆசிரமம் அவள் மனத்திரையில் வந்துகொண்டிருந்தது.

2

''சுவாமி'' என்று கதறியவாறு எழுந்த அவளுக்கு அமைதியும் சாந்தமும் செறிந்த அப்பார்வை புத்துணர்ச்சியைத் தந்தது.

''ஏன் அம்மா, இத்தனை சோகம்?''

கணீரென ஒலித்த அச்சொற்களுக்கு விசேஷ ஆகர்ஷண சக்தியிருக்க வேண்டும். பெற்ற மனத்திலே ஊறும் பாசத்தினால் கட்டுண்டு அன்னையின் ஆதரவில் நெஞ்சுருகித் தன் உள்ளக் கிடக்கையை வெளியிடும் மகவுக்கு ஏற்படும் நிறைவு அவளுக்குத் தோன்றியது. கோரைப்பாயின் மேல் புத்தரின் அவதாரமென வீற்றிருந்த அந்தப் பிக்ஷுவுக்கு அளவற்ற பொறுமை இருந்திருக்க வேண்டும். பொங்கியெழும் அவள் புலம்பல் அவரை அயரச் செய்யவில்லை; ஆனால் எவ்வுயிர்க்கும் இரங்கும் பெருந்



பிக்ஷு

சாந்தி

தன்மையில் இவ்வுயிர்க்கும் சிறு பங்கீந்தார் அவர்.

''என்னை இல்லறத்தில் ஈடுபடுத்தத் திட்டமிட்டிருக்கிருர் என் தந்தை, சுவாமி!''

''அது உலக இயற்கைதானே, பெண்ணே? நீ ஏன் கவலைப்பட வேண்டும்?''

''சுவாமி, என் மனநிலையை நீங்கள் அறிவீர்களே!''

''அதோ!'' என்று சுட்டுவிரலால் குறித்து அவர் காண்பித்த பக்கம் பார்த்தாள் சாந்தி.

ராஜ்ய பாரத்தையும், உறங்கும் மனைவியையும், குழந்தையையும் விட்டுச் சென்ற கௌதமரின் திருவுருவம் ஆசிரமத்து மண் சுவரின் மேல் வரைந்திருந்தது.

அவர் கண்ணை மூடிக் கொண்டார். அங்கு மிளிர்ந்த காந்தி சாந்தியின் கண்களைப் பறித்தது. அவர் என்ன சொல்லுகிருர் என்று அவளுக்கு விளங்கவேயில்லை. கொணர்ந்த மலர்களை அவர் காலடியில் சமர்ப்பித்தாள். நடுங்கும் உடலோடு பன்முறை அவரை வணங்கினுள்; எழுந்தாள்.

'தன் கவலை தீர அவர் மார்க்கம் சொல்லவில்லையே?' என்ற குறையுடன் அவள் வெளியே வந்தாள்.

அப்பொழுது பிக்ஷு அசுவகோஷரை நாடி அரசன் தேவனம்பிரியன் பரிவாரங்களுடனும் நண்பன் வசுமித்திரனுடனும் அதே ஆசிரமத்தினுள் செல்ல யத்தனித்தான். வசுமித்திரன், அரசன் தோளை உலுக்கினுன். தெய்வ கன்னிகை போல வந்த அந்த மடந்தையை மன்னன் பார்த்து விட்டான். தங்கப் பதுமைக்கு உயிரூட்டி உலகத்தில் நடமாடச் செய்து விட்டானே பிரமன் என்று அவன் பிரமித்தான். அவளுடைய வனப்பு அவன் கண்களைக் கூசச்செய்தது. தெள்ளிய வானத்திலே சுடர்விட்டு மிளிரும் தண் மதியத்தின் நிலவிலே அகமகிழ்பவன் போல ஆனந்தக் கடலில் அவன் மூழ்கியிருக்கும் போது, அவள் அவ்விடத்தை விட்டுச் சென்று மறைந்துவிட்டாள்.

''வசுமித்திரன், இது உண்மையான நிகழ்ச்சிதானே? அல்லது பிரமையோ?''

''நீ அவளைப் பார்த்ததும் உண்மை; அவள் இந்த ஆசிரமத்தை விட்டு வெளியேயறிதும் உண்மை. உள்ளே போய் அசுவகோஷரைப் பார்த்துவிட்டு வந்து பிறகு பேசிக் கொள்வோமே?''

நண்பன் பேச்சுக்கு உடன்பட்டே பழகின தேவனம்பிரியன்

குழம்பிய மனத்தோடு உள்ளே நுழைந்து அசுவகோஷரை வணங்கி யெழுந்தான். அவர் இன்னும் கண்களைத் திறக்கவில்லை.

வசுமித்திரன் மன்னனிடம் ஏதோ சைகை காண்பித்தான். ஏற்கனவே திகைப்பில் தவிக்கும் தேவனாம்பிரியனுக்கு ஒன்றுமே புரியவில்லை. தரையிலே நறுமணம் மிக்க மலர்கள் இறைந்து கிடந்தன. அந்தச்சிறுகுடிசைக்குள்ளேயே ரம்மியமான வாசனை சூழ்ந்திருந்தது. வசுமித்திரனின் புன்னகையும் எங்கும் வட்டமிட்ட கண் பார்வையும் அரசனுக்குப் புதிராயிருந்தன.

இரண்டு பேரும் வெளியே வந்தனர். வசுமித்திரன் பேச்சைத் தொடங்கலானான்.

''இப்போதாவது நான் சொல்லுவதை நம்புவாயா?''

''எதை நம்ப வேண்டுமென்கிறாய்?''

''சற்றுமுன் நாம் பார்த்த காட்சியை. நீ வந்தது அந்த அசுவகோஷருக்குத் தெரியுமா?''

''எப்படித் தெரியும்? அவர்தான் நிஷ்டையிலிருக்கிறாரே?''

''அது நிஷ்டையில்லை, அப்பனே. கொனஷ்டை. சிறிது நேரம் முன்பு அந்த இளம் பெண்ணோடு பேசிக் குலாவும்போது எங்கே போயிற்று அந்த நிஷ்டை?''

''அடப் பாவி, அசுவகோஷரை அப்படிச் சொல்லாதே. எவ்வளவு தடவை நான் வந்தபோது அவர் நிஷ்டையிருந்ததால், நான் திரும்ப வேண்டியிருந்தது தெரியுமா?''

''இதோ பார். இந்த வசுமித்திரனிடம் இதெல்லாம் பலிக்காது. அன்று அமைச்சர் அமரபாலர் தன் குமாரத்தி உன்னை மணக்கச் சம்மதிக்கவில்லையென்று உன்னிடம் முறையிட்டபோது நான் என்ன கூறினேன்?''

''பௌத்த பிக்ஷுக்களின் ஆசிரமத்திற்கு அருகில் அவளை அடிக்கடி சந்திப்பதாகச் சொன்னாய்.''

''இன்னும் என்ன சந்தேகம் உனக்கு? சந்திப்பது மட்டுமல்ல; வெளிவேஷத்திற்காக சந்நியாசியாக இருக்கும் அசுவகோஷரின் ஆசைநாயகியாகவும் அவள்....''

தேவனாம்பிரியன் காதுகளைப் பொத்திக் கொண்டான். ஆனால் அவன் முகமாறுதலை வசுமித்திரன் கவனிக்கத் தவறவில்லை. வசுமித்

அரசன் தேவனாம்பிரியன்

அமரபாலர்

> அன்பு நெறியை நிறைவேற்றுங்கள். அகிலப் பிரபஞ்சத்துக்கும் வழி உண்டு.
>
> — ஏசுநாதர்.

திரன் பெரிய பேச்சாளன்; சொற்களை அடுக்கித் தொடுத்துப் பொய்யை மெய்யாக்குவதில் சமர்த்தன். சாதுக்களின் சத்துரு.

தேவனும்பிரியனின் மனத்திலேயும் சலனம் ஏற்பட்டது. எந்த புற்றில் எந்த பாம்பு இருக்குமோ?

அசுவகோஷர் கபடம் நிறைந்தவர், வேஷதாரி என்றெல்லாம் அரசன் தவறாக எண்ணமிட முற்பட்டான். காற்றுப் பட்ட பெருங்கடலின் ஆழத்தில் பிரதிபலிக்கும் முழுமதி மோதும் அலைகளுடன் ஊசலாடுவது போன்று, மன்னன் உள்ளத்தில் உருப்பெற்றிருந்த அசுவகோஷரின் உருவகமும் விபரீத மாறுதல்களுடன் அவன் முன் தோன்றியது. அவர் மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று முடிவு பிறந்தது மன்னன் மனத்திலே.

உடனே அசுவகோஷரின் குடிசைக்குள் நுழைந்தான். தன் அரண்மனைக்கு எழுந்தருள வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தான். ''அசோக சக்கரவர்த்தி நினைவுத் திருவிழா'' என்று அன்றைய தினத்திற்கு நாமகரணம் சூட்டினன். மகதநாட்டை நடு நாயகமாய்க் கொண்டு அலைகடல் சூழ் வையகம் முழுதும் அண்ணல் புத்தரின் அருள் நெறியைப் பரப்பிய அசோகனின் திருவிழா அஹிம்சையை நினைவிலிறுத்தும் திருநாளாயிருக்கும் போது அசுவகோஷர் மறுக்க முடியுமா?

கங்கையைக் கடந்துதான் நகரெல்லைக்குப் போக வேண்டும். தன்னை மறந்து தியானத்தில் ஈடுபட்டிருந்த அசுவகோஷர் அமர்ந்திருந்த படகை அரசனும் அவன் ஆருயிர் நண்பனை வசுமித்திரனுமே செலுத்திக் கொண்டு சென்றனர். தங்கு தடையில்லாது பொங்கிச் சென்று கொண்டிருந்தது அந்தப் பெரும்புனல். நடு ஆற்றினை நெருங்கியதும் மன்னன் தேவனும்பிரியனும் அவன் நண்பன் வசுமித்திரனும் ஏதோ சமிக்ஞை செய்து கொண்டார்கள். மறுகணம் அப்படகு கவிழ்ந்தது.

3

கங்கைநதி பாபங்களை நாசம் செய்யும் புனித கைங்கரியத்தைப் பூர்த்தி செய்ய செஞ்சடையில் அப்பெரு நதியைக் கொண்ட பரந்தாமன் முனிந்தான். பிறிதொரு சடைக்கற்றையிலிருந்து அப்போதே விடுபட்டதுபோலப் பேரிரைச்சலுடன் வந்தது ஒரு வெள்ளம். மூச்சு முட்ட நீர் மாந்தி, சளைத்துத் தவித்துத் தன் நினை விழந்த மன்னன் ஒரு பக்கம் - உலர்ந்த சருகென ஊதித்தள்ளப் பட்டு எங்கோ அலைக்கப்பட்ட நய வஞ்சகன் வசுமித்திரன் ஒரு பக்கம் சுழலில் அடித்துச் செல்லப் பட்டனர்.

அப்பொழுது தான் அந்த அதிசயம் நடந்தது.

படகிலிருந்து தண்ணீரில் விழுந்து சுழலில் சிக்கிவிட்ட புத்தத் துறவி அசுவகோஷர் கரை சேர்க்கப் பட்டார். அருகே பெருமூச்சு வாங்க சாந்தி நின்றாள்.

துறவிக்குத் தன் நினைவு வர நீண்ட பொழுதானது.

''சாந்தி, நீயே எனக்கு உயிர்ப் பிச்சை அளித்தாய். நன்றி.''

''சுவாமி, தாங்கள் அல்லவா எனக்கு வாழ்க்கைப் பிச்சை அளித்

திர்கள். நான் கங்கையில் விழுந்து மடிய முயன்றபோது, நீங்கள் சுழலில் தத்தளித்தீர்கள். நான் என் கடமையைச் செய்தேன். எனக்குப் புத்துயிர் அளித்தீர்கள்...''

4

''சுவாமி, என் மகள் சாந்தி பௌத்த சந்நியாசினியாகப் போய்விட்டாள். அவள் தங்களின் தூய உரைகளிலே மனதை லயிக்கச் செய்துவிட்டாள். நான் அவளுக்கு விவாகம் செய்து வைக்க முடிவு கட்டிவிட்டேன் என்று உங்களிடம் அவள் சொன்னபோது, புத்த பெருமானின் உதாரணத்தை அவளிடம் குறித்தீர்களாம். அதன் உண்மைப் பொருள், இப்பொழுதுதான் அவளுக்குப் புரிந்தது. அடுத்த கணமே, தன் ஆடம்பரங்களைத் துறந்து விட்டு புத்தர் உருவத்தின் முன் ஆனந்தத் தியானத்தில் ஆழ்ந்து விட்டாள். தெருக்களிலே பௌத்த சமயப் பிரசாரத்திற்கும் துணிந்து விட்டாள். உங்களிடம் அவள் எவ்வளவு உண்மைகளைக் கற்றிருக்கிருள்! அவளை மகளாகப் பெறப் பாக்கியம் செய்த நான் அதிருஷ்டசாலி. ஆனுல், சாந்தி என் ஒரே பெண்?....''

பிக்ஷு அசுவகோஷர் உரக்கச் சிரித்தார்: ''உம் பெண்ணு? அப்படியென்று பாகுபாடு உண்டா? சாந்தி உலகை உய்விக்க வந்தவள். மகதநாட்டின் செல்வப் புதல்வி. இத்தகைய துணிகரமான துறவு பூணுவது அவள் ஒருத்தியால்தான் முடியும். அசோகசக்கரவர்த்தியின் அருமைச் சகோதரி சங்கமித்திரையின் வழித் தோன்றல் அவள். அவளைத் தடுக்காதீர், அமரபாலரே!''

5

அப்போது—

புத்தத் துறவியின் பாதங்களுக்கு மன்னனின் முடி வணக்கம் சொன்னது.

> கலை என்ருல் உணர்ச்சிகளைக் கவரவேண்டும்; களிப்பூட்டி அறிவைப் போய்க் கவ்வ வேண்டும்.
>
> — நாமக்கல் கவிஞர்.

''வசுமித்திரன் எங்கே?'' என்று அமரபாலர் தேவனும்பிரியனைப் பார்த்துக் கேட்ட கேள்விக்குப் பதில், கூடியிருந்தவர் எழுப்பிய 'அநீதி நிலைக்காது' என்ற புத்த தருமத்தைப் பற்றிய வாக்கியங்களிலே மறைந்து விட்டது.

''அமரபாலரே, நீர் கொடுத்து வைத்தவர். அருமை மகளைப் பெற்றீர்; மகதத்திற்குத் தாரை வார்த்தீர். புத்தர் பெருமான் இனி திக்கெட்டும் பிரதிபலிப்பார். உங்கள் பெண் சாந்தி என் கண்களைத் திறந்துவிட்டாள். என் வினை என்னைச் சுட்டது. எனக்கு துர்ப்போதனை செய்து மனசைக் கெடுத்த வசுமித்திரனின் வினை அவனைச் சுட்டு விட்டது!.... ஒரு முறை சாந்தியைத் தரிசனம் செய்தால்தான் என் மனத்தில் சாந்தி பிறக்கும்....!'' என்று விம்மியவாறு கண்ணீர் பெருக்கினுன் மன்னன் தேவனும்பிரியன்.

6

பொழுது புலர்ந்தது.

புத்தர்பிரானின் அருட் புன்னகையில் இரண்டறக் கலந்துகொண்டிருந்தாள் சாந்தி.

புத்தத் துறவிகள் பாடினர்.

'புத்தம் சங்கம் கச்சாமி
தர்மம் சங்கம் கச்சாமி'

★

பாப்பா உமா — தொடர் கதை:

1. வ. உ. சி - க்கு வணக்கம்

ஹாலிவுட் நட்சத்திரம் ஜிப்பி சென்னைக்கு விஜயம் செய்திருக்கிறதல்லவா? இதைப் பற்றி அன்றையத் தினசரியில் செய்தி வெளியாகியிருந்தது. அந்த மனிதக் குரங்கை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டேயிருந்தான் பூபாலன். அவனுக்கு வாயெல்லாம் பல்லாகி விட்டது.

சிரிப்பு அடங்கியது. அப்பொழுது அவனுடைய சிறு குடலைப் பெரு குடல் கவ்வியது. ஓடினான்.

மாம்பலம், ஜானகிராமப் பிள்ளைத் தெரு, வீட்டு நெம்பர் இரண்டு.

"அம்மா, பசிக்குதே, அம்மா! ஏம்மா, இப்படிப் பசிக்குது?" என்று கேட்டான்.

"உனக்குப் பசிக்குதின்னு அரை நாழிப் பொழுதிலே சோறு சமைச்சுப் போடுறேன். ஏன் பசிக்குதுங்கறதுக்கு உன் வயிற்றைக் கேட்டுத்தான் பதில் தெரிஞ்சுக்கோணும். நாம்ப ஏழைங்க பாரு; நமக்கும் பசிக்கும் மட்டுந்தான் ரொம்பச் சொந்தம்" என்றாள் பூபாலனின் தாய் அஞ்சலை.

"இன்னிக்கு நான் ஸ்கூலுக்கு போகலேம்மா!"

"ஏண்டா?"

"ஏண்டாவா? அம்மாவுக்குக் கோபத்தைப் பாருகோபத்தை. அந்தக் காலத்திலே எல்லாப் பெரிய மனிதர்களும் சின்ன வயசிலே அடிக்கடி பள்ளிக்கூடத்துக்கு டிமிக்கி அடிச்சவங்கதானும். அதுபோல நான் இப்போ ஸ்கூலுக்கு மட்டம் போட்டா, அப்பாலே பெரிய மனிதனுகிப் போடுவேனுக்கும்!" என்றான் சிறுவன்.

"போடா, மண்டு" என்று கடிந்தாள் தாய்.

பூபாலனின் வயிற்றிற்குள் சோற்று உருண்டைகள் இருபது போனதும் தான் தெம்பு வந்தது.

> அன்பின் வழியது உயிர்நிலை
>
> —திருக்குறள்.

அப்பொழுது அவன் தந்தை முருகேசன் வந்தான்.

''அப்பா, என்னை அம்மா மண்டுங்கறுங்களே — நான் முட்டாளாயிருந்தா வருஷத்துக்கு வருஷம் இப்படி பாஸா

வேணா?... என் சுய கௌரவத்தை யார் குறைச்சலா மதிச்சாலும் எனக்கு நெஞ்சு பொறுக்காது'' என்றான் பூபாலன்.

''பலே, மகனே! முதலிலே நீ ஒழுங்காப் பள்ளிக்கூடத்துக்குப் போ. அப்புறம் பெரிய மனிதனாக ஆகலாம். எனக்கு உடம்புக்கு முடியலே. அதாலே எங்க கண்ணாடித் தொழிற் சாலையிலே லீவு சொல்லி வந்திட்டேன்,'' என்று சொன்னான் முருகேசன்.

புத்தகப் பையுடன் பூபாலன் ஸ்கூலுக்குப் புறப்பட்டான். சுவரில் பதிந்திருந்த முக்கால் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டு, கையால் தலையைக் கோதி விட்டுக் கொண்டான். புறப்பட்டு விட்டான்.

பூபாலன் ராஜாவுக்கு பராக்! பராக்!

கோடம்பாக்கம் பெரிய சாலையில் திரும்பினான் பூபாலன். அங்கே வ. உ. சி. யின் சிலை காணப்பட்டது. கப்பல் ஓட்டிய தமிழனுக்குச் சிரம் வணங்கிக் கரங் கூப்பி வணக்கம் தெரிவித்தான். அவன் தலையை நிமிர்த்திய போது ''கா....கூ....க்கூ....'' என்று பயங்கரமான தீனக்குரல் கேட்டது, நாற்புறமும் திரும்பிப் பார்த்தான். பூங்காவின் வடக்குக் கோடியில் காரின் அடியில் நசுங்கப்பட்டு உயிர் விட்ட

10213

ஒரு நாயைக் கண்டான். அவனுக்கு அழுகை பிறிட்டது. அப்பொழுது அங்கு ஓர் அதிசயத்தைக் கண்டான். அழகான தொரு நாய்க்குட்டி அந்த நாயின் அருகில் கிடந்தது. விழிகளை நிமிர்த்திக் கூட்டத்தை நோட்டம் விட்டான். கார் டிரைவர் நாயின் உயிரைக் கொன்றதுமின்றி, அதன் வழி உயிரையும் தட்டிக்கொண்டு போக எண்ணுவதை ஊகித்தது பிஞ்சு நெஞ்சம். அவ்வளவுதான்; பூபாலன் அந்த நாய்க் குட்டியை எடுத்துத் தன் பையில் திணித்துக் கொண்டு பிடித்து விட்டான் ஓட்டம்!

2. அந்த நாய்க்குட்டி எங்கே?

"அம்மா... அம்மா" என்று அலறிக் கொண்டு ஓடிவந்தான் பூபாலன். ரேழியில் இருந்த தண்ணீரை மொண்டு 'மடக் மடக்' கென்று குடித்தான். பெருமூச்சுக்கு அணைகட்ட முடியவில்லை.

அஞ்சலை என்னவோ ஏதோ என்று பதறிப்போனாள்.

"அம்மா, நான் போன வருஷம் பள்ளிக்கூடத்திலே தங்கப் பதக்கம் பரைஸ் வாங்கினேனே, நினைவிருக்குதா?"

"ஆமாடா, தம்பி வாயில்லாப் பிராணிகளிடம் அன்பு காட்டணும்னு நீ பிரசங்கம் செய்ததுக்கு பதக்கம் தந்தாங்க சர்க்காரிலே. என்ன சேதி?...."

"சொன்னபடி நடக்கணும்னு தானே பெரியவங்க அடிக்கடி சொல்லுறாங்க...?"

"என்னென்னமோ கேட்கிறியேடா, கண்ணு. வேளா வேளைக்குச் சாப்பாட்டுக்கு என்ன பண்றதுன்னு திட்டம் போடவே எனக்குப் பொழுது காணலே... சரி, சேதியைச் சொல்லு."

பூபாலன் பதில் எதுவும் சொல்லவில்லை. புத்தகப் பையைக் கீழே வைத்தான். 'வாள்—வாள்' என்று ஒரு கூக்குரல் எழுந்தது. உடனே அந்த நாய்க்குட்டி தரைக்குப் பாய்ந்துவிட்டது. பிறகு அது பூபாலனைப் பார்த்தது.

"பூபாலா, உன்னைப்பார்த்து அப்படி வாலை ஆட்டுதே நாய்க்குட்டி?" என்றாள் அஞ்சலை.

"ஆமா, அம்மா. நான் அது உசிரைக் காப்பாற்றினேன். நன்றி சொல்லுது. நன்றி மறக்கக்கூடாதுன்னு ஔவைப் பாட்டி சொன்னது இதுக்குக் கூடத் தெரியுதே. பாவம், அது தாயைத்தான் என்னாலே காப்பாற்ற முடியவில்லை. அம்மா, இனி இந்த நாய்க்குட்டியும் என்னோடேயே இருக்கட்டும்..." என்று பயந்த குரலில் கெஞ்சினான் அவன்.

"என்ன சொன்னே? இந்த தெரு நாய்க்குட்டிக்கு யார் படி அளக்கிறதாம்?.... உள்ளதுக்கே சாப்பாட்டுக்குத் திண்டாட்டம் போடுறோம். போடா, போய் அதைத் தெருவிலே விட்டுட்டு வந்துப்பிடு" என்று உத்தரவிட்டாள் அவன் அம்மா.

அப்பொழுது பூபாலனின் தந்தை முருகேசன் வந்தான். தன் புதல்வனை அழைத்து, "தம்பி, நீ அழுவாதே. நான் உன் நாய்க்குட்டியைக் காப்பாத்துறேன். நீ ஓடு..." என்று சொன்னான். பிறகு முருகேசன் உள்ளேசென்று "அஞ்சலை, குழந்தையின் மனசை நோகடிக்காதே. நம்ப பையன் என்னவெல்லாமோ பேசறான்; கேட்கிறான். சின்னப் பிள்ளை பேச்சாவே எனக்குத் தோணலை. ஒரு வேளை அவன்கூட பின்னாலே பெரிய மனிதனாகி ஆனாலும் ஆகலாம். கல்லுக்குள்ளே இருக்கும் தேரைக்குக் கூட படியளக்கும் சக்தி படைத்தவன் ஆண்டவன்.

வித்தை விரும்பு

— ஔவையார்.

இந்த நாய்க்குட்டியைப் பகவான் மறந்திடவே மாட்டான். அன்பும் ஆண்டவனும் நமக்குத் துணை இருக்கு; காந்தித் தாத்தா சொல்லித் தந்த உண்மையும் நேர்மையும் நமக்கு நல்ல வாழ்க்கையைத் தரும்.'' என்றான் முருகேசன். அவன் கண்களில் கண்ணீர் இருந்தது.

''அப்பா நல்லவருதான். அம்மாவுக்குதான் ஜீவகாருண்யம்னு என்னன்னு புரிய மாட்டேங்குது...'' என்று கூறிய பூபாலன் வானத்துக்கும் பூமிக்குமாகத் தாவிக் குதித்தான்.

பிறகு, முருகேசன் தன் 'காக்கி' சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துத் தன் மகனிடம் கொடுத்தான்.

அவன் வாசித்தான்:

பூவைமாநகர்.

....

''அன்புள்ள முருகேசன்,

பிறந்த ஊரை மறந்துவிட்டாயா? உனக்கு ஒரு நல்ல செய்தியை எழுதவே இந்த லெட்டர் போடுகிறேன். 'என் பசி என் ஒருவனின் பசியல்ல; கோடிக் கணக்கான ஏழைகளின் பசி' என்று விநோபாவேஜி பூதான இயக்கத்தின் போது சொன்ன சொற்கள் என் இதயத்தைத் தொட்டுவிட்டன. நீ நம் ஊர் நாடி வா. என் நிலத்தை உனக்கும் உன் சகோதரர்களுக்கும் பங்கிட்டுத் தருகிறேன்.

இப்படிக்கு,

மிராசுதார் சுகவனம்''

''அடே, மிராசுதார் ஐயா புது மனுஷராயிட்டாரே!'' என்றாள் அஞ்சலை.

அப்பொழுது வாசலில் ஒரு பிளஷர் கார் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு சிறுமி இறங்கினாள். ''பூபாலா'' என்று சத்தமிட்டுக் கூப்பிட்டுக் கொண்டே உள்ளே துள்ளி ஓடி வந்தாள்.

''வா, பூங்கோதை'' என்று வரவேற்றான் பூபாலன். வாசற்

உமா
சந்தா விவரம்

வருட சந்தா

இந்தியா, இலங்கை	ரூ. 3
வெளி நாடுகள்	ரூ. 4

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

உமா,
4/32, தாதா முத்தியப்பன் தெரு,
சென்னை-1.

திண்ணைமீது ஒரு கிழிந்த பாயை விரித்து, ''உட்கார். இது எங்கள் பங்களாவின் சுழல் நாற்காலி'' என்று உபசரித்தான். பிறகு, ''இதோ பார், என்னுடைய மற்றொரு தோழன்'' என்று சொல்லி அந்த நாய்க்குட்டியைக் காட்டினன். பூங்கோதையிடம் அது அமைதியாக அடங்கியிருந்தது.

''பூபாலன், நான் இன்னிக்கு ராத்திரி சினிமாவிலே நடிக்கப் போறேன். எங்க அம்மாவும் என் கூட நடிக்கிறாங்க. நீ வர்றியா ஷூட்டிங் பார்க்க?'' என்று கேட்டாள் சிறுமி.

''ஓ, பேஷா வர்றேன். எனக்குக் கூட படத்திலே நடிக்க வேணும்னு ரொம்பவும் ஆசை. உன்கூட நடிக்கிறதுக்கு எனக்கு சந்தர்ப்பம் வந்தா, ரொம்பவும் குஷியாயிருக்கும். அத்தோடே என் நாய்க்குட்டியையுங் கூட படத்திலே நடிக்க வச்சு, இதையும் ஒரு பெரிய ஸ்டாராக ஆக்கணும்'' என்றான் பூபாலன்.

அதே சமயம் வாசலில் சினிமா விளம்பரக் கார் ஒன்று போய்க் கொண்டிருந்தது. நாய்க் குட்டியைக் கீழே விட்டுவிட்டு, வெளியே

ஓடினான். சிறுமியும் தொடர்ந்து அவனுடன் ஓடினாள்.

விளம்பரத்தில் சிறுவன் சுதாகரின் படம் இருந்தது. ஒரு கணம் அவன் கண்ணை மூடிக்கொண்டான். சுதாகர் மாதிரி தானும் ஒரு பால நட்சத்திரமாக ஆவது போன்ற இன்பக் காட்சிகள் தோன்றின.

பூங்கோதை அவன் தோளைத் தட்டி அழைத்ததும்தான், பூபாலனுக்குச் சுயநினைவு வந்தது.

"போகலாமா, கார் காத்திருக்குது?" என்று நினைவு படுத்தினாள் பூங்கோதை.

"இதோ, என் நாயக்குட்டியையும் எடுத்துக்கிட்டு நொடியிலே ஓடியாந்துடுறேன்........" என்று சொல்லிவிட்டு நாய்க்குட்டியைத் தேடினான் பூபாலன்.

ஆனால்—

"ஐயோ, நம்ப நாய்க்குட்டியை கார்ப்பரேஷன் நாய் வண்டியிலே தூக்கிப்போட்டுக்கிட்டுப்போயிட்டாங்களே!" என்று அலறினாள் பூபாலனின் தாய்.

"ஐயோ!" என்று கூப்பாடு போட்டவாறு, பூபாலன் வெறி பிடித்தவன் போலத் தெருவில் ஓடிக்கொண்டிருந்தான்.

(வளரும்)

என் முதல் கதை

அகிலன்

பதினெட்டு வருடங்களுக்கு முன்னால் நான் ஒன்பதாவது வகுப்பில் படிக்கும்போது எழுதிய முதல் கதை இது. புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் வெளியான கல்லூரிச் சஞ்சிகையில் எழுதினேன். கதையின் நகல் இப்போது கைவசம் இல்லை. கதைச் சுருக்கம் நினைவில் இருக்கிறது.

இதுதான் கதை:—

பெற்றோரற்ற ஓர் ஏழைச் சிறுவன் நகரத்துப் பள்ளிக்கூடத்தில் படிக்கிறான். பக்கத்துக் கிராமத்தில் வசிக்கும் அவன் தமக்கை அவனை மிகவும் சிரமப்பட்டுப் படிக்க வைக்கிறாள். பணக்காரக் குழந்தைகளின் மத்தியில் படிக்கும்போது, அவனுடைய ஏழ்மை பரிகாசத்துக்குள்ளாகிறது.

தீபாவளி நெருங்குவதால், உள்ளவர்கள் வீட்டுப் பிள்ளைகள் பெருமையடித்துக் கொள்ளுகிறார்கள். பையனின் தமக்கையும் விரைவில் தீபாவளிக்கு உடையும் பணமும் அனுப்புவதாக வாக்களிக்கிறாள். ஏழைச் சிறுவனும் மற்றவர்களின் பெருமையில் பங்கு கொள்ளப் பார்க்கிறான்.

ஆனால், தீபாவளிக்கு முதல் நாள் அவன் தமக்கை திடீரென்று இறக்கிறாள். அவனுக்கு இவ்வுலகத்திலிருந்த ஒரே ஒரு ஊன்றுகோலும் ஒடிகிறது. அவனுடைய தமக்கையின் சாவு கூடப் பணக்காரக் குழந்தைகளின் பரிகாசத்துக்கு இலக்காகிறது. இதைப் பொறுக்க முடியாமல் அவன் ஆற்றில் விழுந்து உயிர் விடுகிறான்.

கதையை எழுதிக் கொடுத்த மறுநாள் தமிழாசிரியர் என்னைத் தனியே கூப்பிட்டார். எடுத்த எடுப்பில், ''இதை எங்கே காப்பி அடித்தாய்?'' என்று கேட்டார். எனக்குக் கண் கலங்கி விட்டது.

''போடுவதானால் போடுங்கள். இல்லாவிட்டால் வேண்டாம். இனி இப்படிப் பேசாதீர்கள்'' என்றேன்.

சிரித்துக்கொண்டே தமிழையா என்னைத் தட்டிக் கொடுத்தார். ''கதை நன்றாக இருக்கிறது. ஆனால் தலைப்பை மாற்ற வேண்டும்'' என்றார்.

நான் கொடுத்திருந்த தலைப்பு— 'அவன் ஏழை'. அதை அவர் 'மிடியால் மடிதல்' என்று மாற்றி அமைத்தார். கதை வெளி வந்த பல நாட்களுக்குப் பின்பு, மேல் வகுப்பு மாணவர்களிடம் கேட்டு அந்தத் தலைப்பின் பொருளை நான் அறிந்து கொண்டேன். ஏழ்மையால் இறத்தல் என்று அர்த்தமாம். எப்படியாவது கதை வந்து விட்டதே என்ற பெருமை எனக்கு.

அடடா! முதல் முதலாக என் எழுத்துக்களை அச்சில் கண்டபோது நான் அடைந்த ஆனந்தம்....!

முழுவதும் கற்பனைக் கதை என்று நான் அதைச் சொல்ல முடியாது. அன்று நான் எழுதிய முதற் கதையும் சரி, இனி நான் எழுதப்போகும் கடைசிக் கதையும்

> காதலுக்கும் வீரத்துக்கும் தொடர்பு உண்டு. காதல் நிகழும் இடத்தில் வீரம் செறியும். வீரம் செறியும் இடத்தில் காதல் நிகழும். அஃதில்லா இடத்தில் இஃது இராது. இஃது இல்லா இடத்தில் அஃது இராது. காதல் அகம்; வீரம் புறம்.
>
> திரு. வி. க.

சரி, உண்மைகளை அடிப்படையாகக் கொண்டவைகளே. கற்பனைப் பூச்சில் என் கலை உணர்ச்சியைக் காணலாம். ஆனால் கருத்தெல்லாம் நான் காணும் உண்மைக்கே.

இருபது வருடங்களுக்கு முன்பு என் பள்ளி வாழ்க்கையில் நடந்த சில நிகழ்ச்சிகளின் தொகுப்பே அந்தச் சிறு கதை. குலமும் பணமும் அங்கே இன்றைய நிலையை விடக் கொடுமையாகக் கூத்தாடின. சமுதாய வாழ்க்கைக்கு மனிதனை உருவாக்கும் கல்விச்சாலைகளிலேயே வேற்றுமையின் வித்துக்கள் ஊன்றப் பட்டன.

புதுக்கோட்டையில் வாழ்ந்த நான் செழிப்பு நிறைந்த பகுதியையே கண்டதில்லை. சின்னஞ் சிறு வயதில் தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள ஒரு கிராமத்திற்குச் சென்றிருந்தேன். கொள்ளிடக் கரையின் நாணற்காடும், தென்னந் தோப்பும், தேக்கு மரக் கூட்டமும் என்னைப் பிரமிக்க வைத்தன. என் மனத்தில் அன்று தொட்டுப் பசுமையாக இருந்த அந்தக் காட்சியையும் என் முதல் கதையில் எழுதினேன்.

ஒரு புறம் வளமும் அழகும் நிறைந்த இயற்கை உலகம். மற்றொரு புறம் வேற்றுமையும் வெறுப்பும் நிறைந்த மனிதர்கள்—இதையே என் கதைக்கருத்தென்று சொல்லலாம்.

பள்ளியில் என் சிறு கதையைப் படித்த பெரிய மாணவர்களும் ஆசிரியர்களும் அதை எப்படி மதித்தார்களோ தெரியாது. ஆனால் நிச்சயம் அதை எழுதிய சிறுவனுக்கு—அப்போது எனக்குப் பதினறு வயது—தீமையை எதிர்க்கத் துடிக்கும் ஒரு நெஞ்சு இருக்கிறது என்பதை மட்டுமாவது உணர்ந்திருப்பார்கள்.

இந்தச் சிறு கதையைத் தவிர, இன்னெரு கதையையும் என்னுடைய முதல் கதை என்று சொல்கிறவர்கள் உண்டு. 'கலைமக'ளில் முதல் முதலில் வெளியான 'காசு மரம்' என்ற கதையே அது.

காவேரி என்ற ஏழைச் சிறுமி தன் தாயாரை வறுமையிலிருந்து காப்பாற்றக் காசு மரம் முளைக்க வைக்கிருள்! வகுப்பில் யாரோ ஒரு குழந்தை ஆரஞ்சு விதையை விழுங்கினதால், மற்றக் குழந்தைகள் அவள் வயிற்றிலிருந்து ஆரஞ்சு மரம் முளைத்து அவள் இறந்து விடுவாள் என்று பயப் படுத்துகிருர்கள். இதைக் கேட்டுக் கொண்டிருக்கிருள் காவேரி.

காசை விழுங்கினல் காசு மரம் முளைக்குமே, பெற்றவளின் வறுமை நீங்குமே என்ற ஆசையால் காசுகளை விழுங்குகிருள். தான் இறக்கப்போவது நிச்சயம் என்று தெரிந்தும் அப்படிச் செய்கிருள். கடைசியில் மரம் முளைக்கிறது! பாசிபிடித்த செப்புக் காசுகளால் வயிறு கெடுகிறது. வாந்தி எடுத்துச் சாகிருள் காவேரி. அவளைப் புதைத்த இடத்தில் ஒரு மாங்கன்று முளைக்கிறது. அதற்குக் காவேரி என்று பெயரிட்டு அதைக் கண்ணீரால் வளர்க்கிருள் தாய்.
—இதுவே 'காசு மரம்'.

'கலைமக'ளில் இந்தக் 'காசு மரம்' வெளியான பிறகுதான் சிறு கதை எழுத்தாளன் என்ற முறையில் நான் தமிழகத்திற்கு அறிமுகம் செய்யப் பெற்றேன். இதையும் என் முதல் சிறு கதை என்று சொல்லலாமல்லவா? ★

புலி வேட்டையில் கதை ஆரம்பிக்கிறது. ஆனால் புலி எங்கே கிடைக்கிறது தெரியுமா? ஆமாம், கதையைக் கவனமாகப் படியுங்கள்- தெரியும்...!

கள்ளனுக்குக் கள்ளன்

வேம்பு

மலையடிவாரத்தில் அமைந்திருந்த மங்கவரம் பூராவும் அன்று அதே பேச்சு. சாலை முனையிலும், அம்மன் கோயில் வாசலிலும், ஏற்றச் சால் பிடிக்கும் இடத்திலும் அதே பேச்சு.

''ரொம்ப ஆச்சரியமாயல்ல இருக்குது!'' என்றார் பெரிய பண்ணை பாபு ரெட்டி. எல்லோரும் பண்ணையார் சொல்வதற்குத் தலையை ஆட்டினார்கள்.

சின்னையனின் நாலு வயதுப் பெண்ணைக் காணோமென்றால் எல்லோரும் ஆச்சரியப்படாமல் என்ன செய்வார்கள்?

சின்னையன் செருமியவாறு நின்று கொண்டிருந்தான்.

''போன மாசம் நாலு ஆட்டைக் காணோம்'' என்றான் கோவிந்தன், துளி சுண்ணும்பை உருட்டிப் போட்ட வண்ணம்.

''போன மாசத்தைச் சொல்லப் போயிட்டியே? முந்தின நாள்தான் சின்னப்பண்ணைப் பசு இருந்த இடத்திலேயே செத்துக் கெடந்தது. விலாப்பக்கம் எலும்பு வெளியே தெரிஞ்சுதே! இப்போ புலி கிலி நடமாட்டம் இந்தப் பக்கம் இருக்கிறதாத்தான் தெரியுது!'' என்றார் மணியக்காரர்.

''புலி''—ஏக காலத்தில் எல்லோரிடமிருந்தும் இந்தக் குரல் வெளிப்பட்டது; கிலி அதில் கலந்திருந்தது.

மணியக்காரர் பதில் சொன்னாரோ இல்லையோ—மங்கவரம் கிராமத்தில் புலி நடமாட்டம் இருக்கிறது என்ற ஏகோபித்த முடிவுக்கு எல்லோரும் வந்தனர். அவரவர்கள் வீட்டை இழுத்துத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு படுத்தனர். மலையடிவாரம் ஓரமாக சிங்காரப்பட்டி நகரத்திலிருந்து வரும் சாலையில் மாலை ஐந்து மணிக்கு மேல் வருவதற்கு யாரும் துணிவதில்லை. அப்படி வர நேரிட்டாலும், எல்லாரும் ஒரு கையில் இதயத்தைப் பிடித்துக் கொண்டே வந்தனர். அவரவர்களுடைய இஷ்டதெய்வ நினைவு அப்பொழுதுதான் அவர்களுக்கு வந்தது.

செல்வக் குழந்தையை இழந்த சின்னையன் மட்டும் ஊராரின் பேச்சு, வம்பு எதிலும் கலக்காமல், பித்துப் பிடித்தவனைப் போல் அலைந்து கொண்டிருந்தான்.

''சின்னையா, இப்படி அலைந்து, திரிந்தால் என்ன பிரயோசனம்? வேளா வேளைக்குச் சாப்பிடாமலும், யாரோடும் பேசாமலும் அலைகிறயே? புலி வாயில் போன குழந்தை வந்துவிடுமா?'' என்று மணியக்காரர் அவனைத் தேடிப் போய்க் கேட்டார்.

சின்னையன் சிரித்தான். ''புலி.... புலி....'' —மறுபடியும் சிரித்தான். அதற்குள் மணியக்காரர் உறுதி கொண்டார், சின்னைய்யனுக்குச் சித்தப்பிரமை என்று. ஆனால், மிகவும் சாந்தமான குரலில் அவன் கூறியதைக் கேட்டவுடன் அவரே திடுக்கிட்டார்; திகைத்தார்.

''மணியக்கார ஐயா, புலி நடமாட்டம் இந்தக் கிராமத்தில் இருக்கிறதோ இல்லையோ, ஆனால் என்



செல்லக் குழந்தையைத் தூக்கிப்போனது புலி இல்லைங்க - புலி நடமாட்டம் இப்போ மட்டும் புதிசில்லை. எங்ப்பாரு சொல்லியிருக்காரு, புலியின் காலடியைக் கண்டு பிடிக்கலாம்னு. நான் எவ்வளவோ தேடித் தேடி, சுத்திச் சுத்திப்பார்த்தேன்-காணும் ஐயா. குழந்தையைப் பக்கத்திலே காண

வில்லை என்றவுடன் விளக்கை எடுத்திட்டுத் தேடினேன்; புலியின் உறுமலிருந்தால், என் மகள் கண்ணை விழித்துப் பயத்தால் அலறியிருக்கும்; அதுவும் இல்லை. அதனால் புலி இல்லை ஐயா; புலி இல்லை. யாரோ முன் யோசனையுடன் என் குழந்தையைத் தூக்கிப் போயிருக்கிறாங்க'' என்று சின்னையன் கண்களில் நீர்மல்கக் கூறினான்.

கிராமம் பூராவும் இச்செய்தி எதிரொலித்தது: ''சின்னையன் குழந்தையைப் புலி தூக்கிப் போகவில்லை; யாரோ கொள்ளைக்காரன் தூக்கிப் போய்விட்டான்!''

ஊர்க் கோடியில் வெகு காலமாகப் பூட்டிக் கிடந்த அவ் வீடு திடீரென்று திறந்திருந்தது. ஜன்னல் கதவுகள் மட்டும் மூடப்பட்டுக் கிடந்தன. காலையில் இரண்டு, மூன்று மணி நேரம் வீடு திறந்திருக்கும். பிறகு வீட்டின் கதவைத் தாழிட்டுக் கொண்டு அந்தப் புது மனிதன் வெளிக் கிளம்புவான்.

கிழிந்த சொக்காய்; அழுக்கு படிந்த கால் சட்டை; ஒரு கால்தான் சுவாதீன நிலையிலிருந்தது. மற்றொரு காலுக்குக் கட்டை யொன்று ஊன்று கோலாயிருந்தது. பட்டணம் போல் பக்கத்து

வீட்டுக்காரர் யாராயிருந்தாலும் கவனிக்காத நிலை கிராமத்தில் இல்லை.

அந்த நொண்டியைப் பற்றிப் பலர் பலவாறு பேசலாயினர். அதற்குக் காரணமும் இல்லாமல் போகவில்லை. நாள் தவருமல் ஊரில் ஆடும், மாடும் களவு போயின. மணியக்காரர் வீட்டுப் பசு ஊருக்குக் கொஞ்ச தூரத்தில் இறந்து கிடந்தது. போதாதா?

அன்று இரவு ஒரு மணி இருக்கும். 'பிசு பிசு'வென மழை தூரிக்கொண்டிருந்தது. பண்ணையார் வீட்டுத் தொழுவத்தில் புலியின் உறுமல் கேட்டது. அதைத் தொடர்ந்து பசுக்களும், காளைகளும் ஏககாலத்தில், 'அம்மா' என்று கூக்குரலிடுவதும் கேட்டது. தெருவிலே இரண்டு நாய்கள் விடாமல் குலைத்துக்கொண்டிருந்தன. பஞ்சாயத்து போர்டு விளக்கு அணைந்து இரண்டு மணி நேரத்துக்கு மேல் இருக்கும்.

திடீரென்று ''பிடி, விடாதே... ஐயோ, புலி...!'' என்ற கூக்குரல்கள் கிளம்பின. ஹரிக்கேன் விளக்கும் கைத்தடியுமாக கிராம மக்கள் ஓடி வந்தனர்.

சின்னையன் விளக்கும் கையுமாக இருவரை அழைத்துக் கொண்டு கிளம்பினன். மாட்டுத் தொழுவத்துக்கருகே புலியின் காலடிகளே இல்லை. ஆனல் அதற்குப் பதிலாக சின்னையன் வேறு காலடிகளைக் காட்டினன். மூன்று காலடிகள் - மூன்றே மூன்றுதான்!

அதைத் தொடர்ந்தே எல்லோரும் போனர்கள். சின்னையன் அடையாளம் காட்டியவாறு தொடர்ந்து வந்தான்.

''இதோ-இதோ-இதோ-அகலமான காலடி; அழுத்தமான காலடி; புலியின் காலடி.'' —எல்லோரும் ஒரு கணம் நின்று விட்டனர்.

''பார்த்தீர்களா? புலி இவ்வளவு தூரம்தான் வந்திருக்கிறது. மாட்டுத் தொழுவம் வரையில் வந்தது புலியல்ல. கள்ளனுக்குக் கள்ளன்!'' என்ருன் சின்னையன்.

மறு நாள் கிராமத்தில் யாரும் வீட்டிலே இருக்கவில்லை. கிராம மணியக்காரர் வீட்டு வாசலில் கூடியிருந்தனர். சின்னையன் ஏதோ விளக்கிக் கூறிக்கொண்டிருந்தான். பெரிய பண்ணையார், மணியக்காரர் எல்லோரும் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தனர். முதல் நாள் இரவு நினைவு தவறி வீழ்ந்த மாட்டுக்காரனும் உடம்பு கொஞ்சம் தெளிந்து கம்பளியைப் போர்த்திய வண்ணம் நிற்க முடியாமல் நின்றுகொண்டிருந்தான்.

''உட்கார்ந்துக்கோ, பரவாயில்லை'' என்று பண்ணையார் திருவாய் மலரவும், அவன் உட்கார்ந்தான். அவன் கண்டவற்றைக் கூறுமாறு எல்லோரும் கேட்டனர்.

அவன் நடுங்கும் குரலில் கூறினன்:

''நேத்தி ராவு நான் மாட்டுக்கு வைக்கோல் போட எழுந்திருச்சேன். எனக்கே என்னவோ மனசு 'பக்கு' 'பக்கு'ன்னு அடிச்சிக்கிட்டுத்தான் இருந்தது. எங்கோ தொலைவிலே நாய் ஊளையிட்டதை நெனைக்க நெனைக்கப் பயமாய் இருந்துச்சு. நான் பெரிய காளைக்கு வைக்கோல் போட்டுட்டு மோழையன் காளைக்குப் போடப் போனேன். யாரோ ரெண்டு பேர் விழுந்தடிச்சிக்கிட்டு அந்த இருட்டிலே ஓடினங்க, 'புடிடா புடிடா'ன்னு. நானும் என்னையறியாம கத்திக்கிட்டு ஓடினேன். எப்படி ஓடினேன்னு எனக்கே தெரியலை. கொஞ்ச தூரம் போனப்பத்தான் என் எதிரே கொள்ளிக் கண்களோடே புலி நின்னது தெரிஞ்சுது. ஒருவினடி என் மேலே பாஞ்சது. இவ்வளவுதான் எனக்குத் தெரியும். தொலைவிலே நீங்க 'ஆய் ஊய்'ன்னு கத்திட்டு ஓடிவார ஓசை கேட்டது. புலி ஓடிட்டுது. எம்மேலே அது நகம் பிராண்டி காயம் கூடப் பட்டுடுச்சி பாருங்க, சாமி!''

''ரொம்பவும் குழப்பமான காரியங்கள் நம்ம ஊரிலே இப்ப நடக்குது. புலி ஒண்ணுமில்லே. புலியைச் சாக்கு வச்சு கள்ளப்பய

எவனோ நம்மைக் கலக்க வைக்கிருன். நாமெல்லாம் முழிச்சிக்கிட்டு இருந்து அவனைக் குளோஸ் பண்ணிப்பிடணும். மணியக்கார ஐயா, போலீஸ் டேசனுக்குப் போய் ஏட்டையாவை ஒரு மாசம் இங்கே காம்ப் போடச் சொல்லணும்'' என்ருன் சின்னையன்.

மணியக்காரர் போலீசுக்கு விவரம் முழுவதையும் கூறிவிட்டார். ஹெட் கான்ஸ்டபிள் உறுதி சொன்னுர்: ''ஆடு, மாடு இழுத்துப் போகும் சின்ன சிறுத்தைப் புலிக்கா நீங்க பயப்படறீங்க? அந்தக் கள்ளக் கழுதையை ஒரே வேட்டிலே தீர்த்துப்பிடலாம். ஆனல் கள்ளனுக்குக் கள்ளனுக இருக்கிற ரௌடியையும் வேஷ்டியைப் போட்டு இழுத்து லேட் கம் பத்துலே கட்டி உதைச்சிடலாம்.''

''எல்லாம் உளவின் பேரில்தான் நடக்கிறது. யாரோ இங்குக்கள்ளனுக்கு கள்ளனுகவும், நல்லவனுக்கு நல்லவனுகவும் நடிக்கிருர்கள்'' என்ருர் மணியக்காரர். நொண்டியின் பக்கம் எல்லோர் கவனமும் திரும்பியது.

''அந்த நொண்டிப்பய செய்யற வேலைதான் எல்லாம். அவனைப் பிடித்து உலுக்கு உலுக்கென்று உலுக்கினல் எல்லாம் கிடைத்துவிடும்'' என்ருன் சின்னையன்.

எல்லோருமாக அந்தப் பாழடைந்த வீட்டை நோக்கிப் போனுர்கள். வீடு பூட்டியிருந்தது. அருகிருந்த கோயில் மடத்தில் வெகுநேரம் அவன் வரவுக்காக உட்கார்ந்திருந்தார்கள். சப் இன்ஸ்பெக்டரும் வந்து சேர்ந்தார். நொண்டியைக் கவனித்து விட்டுப் பிறகு காட்டிற்குப் புலிவேட்டையாடப் போவதென எல்லோரும் முடிவு செய்தனர்.

இரவு அமைதியாகக் கழிந்துகொண்டிருந்தது. ஊரின் நாலு திக்கிலும் கூட்டங் கூட்டமாக மக்கள் இருந்து, ஒருவர் மாற்றி ஒருவர் காவல் காத்தனர். விடிகாலை நாலு மணி சுமாருக்கு எல்லோருக்கும் தூக்கம் கண்ணைச் சுற்றும் வேளையில் பெரும் கூக்குரல் ஒன்று கேட்டது: ''ஓடியாங்க.... ஓடியாங்க.... புலி சிக்கிவிட்டது. புலி அகப்பட்டு விட்டது.... ஓடியாங்க...!''

> மதங்களில் கட்டுப்பாடுகள் அதிகம்; ஆனல் நூல்களில் சீர்திருத்தம் அதிகம்.
>
> —திரு. வி. க.

ஊர்க் கோடியிலுள்ள பாழ் வீட்டை நோக்கி எல்லோரும் ஓடினர். கண்ணயர்ந்திருந்த எஸ். ஐ. யும் போலீஸ் பரிவாரமும் எழுந்து துப்பாக்கியுடன் ஓடினர். வாசலில் நின்றிருந்த அந்த நொண்டி பரபரப்புடன் இங்கும் அங்கும் அலைந்தான். ஒரு வார்த்தை சேர்ந்தாற்போல் கூறுவதற்குள் அவனுக்கு மூச்சு வாங்கியது. உண்மையாகவே புலி வீட்டிற்குள் புகுந்து விட்டது என்றும், தான் கதவைத் தாழ்ப்பாள் போட்டிருப்பதாகவும் அவன் கூறுவதற்குள் மூச்சு திணறியது.

நொண்டியைக் கண்டால் கழுத்தில் கையைக் கொடுத்து எஸ். ஐ. ஐயாவிடம் தள்ளுவது என்று வீராப்புடன் வந்த சின்னையன் கூட இன்னது செய்வது என்று தெரியாமல் நின்ருன்.

வீட்டினுள் புலி நடமாடும் ஓசை நன்ருகக் கேட்டது. போலீஸ்காரன் ஒருவன் துப்பாக்கியுள் தோட்டாவைச் செருகினுன். கதவு இடுக்கு வழியாக ஏதாவது தெரிகிறதா எனப் பார்த்தனர். ஒன்றும் புலப்பட வில்லை. ஆனல் கதவுக்கருகே புலி வந்து பிராண்டிவிட்டுச் செல்வது நன்ருகக் கேட்டது.

எஸ். ஐ. கதவிலே துப்பாக்கி நுழைவதற்கு ஏற்ற அளவுக்குத் துவாரம் செய்தார். துப்பாக்கியை அதில் பொருத்தினர்.

கதவுக்கருகே காலடி ஓசை கேட்டது. எஸ். ஐ. துப்பாக்கியில் கையை வைத்தார்.

டுப்... டுப்... டுப்...

மூன்று வேட்டுக்கள் கிளம்பி அந்த வீட்டினுள் பாய்ந்தன.

புலி மாண்டது என்ற தைரியத்தில் எல்லோரும் நின்றனரே தவிர, அந்த வீட்டிற்குள் நுழைய யாரும் தைரியங் கொள்ள வில்லை.

நொண்டிதான் முதலில் தைரியமாக உள்ளே கிளம்பினன். கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த மறு நிமிஷம் அவன் அலறி அடித்துக்கொண்டு வெளியே ஓடி வந்தான்.

கதவுக்கருகே ஒரு மனிதன் குண்டுக் காயங்களுடன் விழுந்து கிடந்தான். புலியும் இல்லாமம் போக வில்லை. இருட்டான அந்த வீட்டுக் கூடத்தில் புலி ஒன்று இறந்துகிடந்தது. புலியின்மீது குண்டுக் காயங்கள் ஏதும் இல்லை. ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. புலியையும், அந்த அடையாளம் தெரியாத இறந்த நபரையும் வெளியே கொண்டு வந்தார்கள் போலீஸ் ஜவான்கள்.

அந்தப் புது நபரின் கதை இதுதான்:

அந்தக் கிராமத்தில் புலித் தொல்லை இருந்து வந்ததைச் சாக்காகக் கொண்டு மலேயாவிலிருந்து திரும்பி வந்திருந்த மோழையன் அந்த வட்டாரத்திலே திருட்டுத் தொழிலைத் தொடங்கினன். ஆடு, மாடு இவற்றைப் புலி தூக்கிப் போய்விடுவது போல் வெளியார் நம்பச் செய்து, அவன் தூக்கிச் சென்று வெளியூர்களில் விற்று வந்தான். விற்பதற்கு இந்த நொண்டி பல சமயங்களில் உதவியிருக்கிருன். வடக்கேயிருந்து வந்திருந்த 'ஸேட்' ஒருவன், சிறு பெண்குழந்தை வளர்க்க வேண்டும் என்று தெரிவித்ததால் சின்னையனுடைய நாலு வயதுப் பெண் குழந்தையைத் தூங்கும் போது தூக்கிப் போய் விட்டார்கள்.

மோழையனுக்கும், நொண்டிக்கும் தகராறு ஏற்படவே, நொண்டி அவனை விட்டுப் பிரிந்து விட்டான். மோழையன் கொள்ளையடித்தபணத்தை அப் பாழடைந்த வீட்டிற்குள் புதைத்திருப்பதாக அறிந்த நொண்டி, அங்கு வாசம் செய்வதாகப் பகிரங்கமாகக் காட்டிப் புதையலை எடுக்க முயன்ருன். மோழையனுக்கும் நொண்டிக்கும் ஜன்மப் பகை மூண்டது. நொண்டியே மோழையனைப் பிடித்துக் கொடுத்துவிடச் சமயத்தை எதிர்பார்த்திருந்தான்.

அன்று விடிகாலையில் நொண்டி வெளியே போயிருக்கும் சமயம் பார்த்து, மோழையன் அந்தவீட்டிற்குள் புகுந்திருக்கிருன். நொண்டி வந்தபோது வீட்டிற்குள் யாரோ நடமாடும் ஓசையைக் கேட்டான். மோழையன் என்பதைத் தெரிந்து கொண்டவுடன், 'புலி-புலி' என்று கூவி ஊராரைக் கூட்டி விட்டான். பிறகு எஸ். ஐ. வந்தார்; சுட்டார். மோழையன் இறந்து போனுன். ஆனல் புலி ஒன்றும் அங்கே இறந்து கிடந்த அதிசயந்தான் அவனுக்கும் புரியவில்லை. யாரும் அதைப்பற்றி அக்கறை கொள்ளவில்லை. பிடித்த சனியன்கள் தொலைந்தன என்ற சந்தோஷத்தில் நொண்டியைக் கூடத் தண்டிக்கக் கூடாது என்ற நிலைக்கு வந்து விட்டனர் ஊரார்.

சப்-இன்ஸ்பெக்டர் அந்த நொண்டியைத் தட்டிக் கொடுத்தார். "உன்னை மன்னித்து விட்டோம். கள்ளனுக்குக் கள்ளனுக இருந்து ஒரே கல்லில் இரண்டு மாங்காய், அடித்ததற்கு உனக்கு விடுதலைதான் பரிசு!" என்ருர். ☆

மனைப்புயல்

யோகி சுத்தானந்த பாரதியார்

12. அதிர்ச்சியோ அதிர்ச்சி!

மனிதனுள்ளே மூன்று நரகங்கள் உள்ளன. ஒன்று காமம்; மற்ருென்று கோபம்; இன்னென்று பொருமை. பொருமைத் தீ-நரகம்; அது பற்றிஞல் ஆளே எரித்துவிடும். இந்தப் பொருமை இல்லையெனில், உலகிலே போட்டி ஏது? கொலே ஏது? வழக்குத்தான் ஏது?

லீலா கொடுத்த சாட்டையில் ஜிந்தாலாலின் மனம் திருந்திவிட்டது. அவனது காம இச்சை நிறைவேறவில்லே. மறுநாள் தான் வாக்களித்தபடியே அவன் ரம்பாவை மறந்தான். பழைய கிருஷ்ண பக்தி அவன் உள்ளத்திற் புகுந்தது.

செல்லம் எவ்வளவு முயன்றும் ரம்பாவின் இடத்தைக் கைப்பற்ற முடியவில்லே. செல்லம் நயவஞ்சக் கள்ளி என்பதை ஸ்டுடியோ முழுதும் அறியும். ஜிந்தாலால் கூட அதை நாளடைவில் அறிந்தான்.

'புன்னகை'யின் படப்பிடிப்பு கொஞ்ச நாள் நின்றுவிட்டது. லீலா காமிராவை மூடிவிட்டு, நடிக நடிகையரையும் சேர்த்துக் கொண்டு பஜனேயில் ஈடுபட்டாள். பகலில் பாகவதம் படிக்கக் கேட்டாள். இரவெல்லாம் பஜனே, தீபப் பிரதட்சிணம், மஹாமந்த்ர ஜபம்– இவற்றில் எல்லாரையும் ஈடுபடுத்திஞள். அவளுடைய நான்கு வயதுப் பையன் கிருஷ்ணலால் கூட மஹாமந்திரம் சொல்லிக் கூத்தாடிஞன் — 'ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே, ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண, க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே' என்று பிரகலாதன்போலப் பக்தி செய்தான்.

செல்லத்தின் நயவஞ்சகச் சூழ்ச்சியும் சப்-இன்ஸ்பெக்டர் சாமுண்டியின் பயங்கர நாடகமும் சேர்ந்து தன் பெயரை அந்தக் கொலேவழக்கில் இணேத்துவிடச் செய்யலாகாதே என்று ஆண்டவனிடம் உளம் விட்டு மன்ருடிஞன் ஜிந்தாலால். ஆஞல் அவன் பயந்தபடியே இந்தச் செய்தியும் 'அரட்டை' பத்திரிகையில் வெளியாகிவிட்டது.

'லீலா ஸ்டுடியோ கொலே வழக்கு'

'புகழ்பெற்ற லீலா ஸ்டுடியோவின் தலேவர் ஜிந்தாலாலே விஷம் வைத்துக் கொல்ல ரம்பா என்ற பிரபல நடிகை செய்த சூழ்ச்சி அம்பலத்திற்கு வந்துவிட்டது. ஜிந்தாலால் ரம்பையைக் காதலித்ததாகத் தெரிகிறது. காதல் மயக்கத்தில் பதிவு மண ஒப்பந்தம் செய்துகொண்டாள் ரம்பா. அவள் உள்ளத்தில் பேராசை பிறந்தது. ஜிந்தாலாலுக்குப் பாலில் விஷங் கலந்து வைத்தாள். நல்ல வேளேயாக அதை நாய் குடித்து இறந்தது. ஜிந்தாலாலின் உயிர் தப்பியது. சப்-இன்ஸ்பெக்டர் சாமுண்டி இந்தக் கொலே வழக்கை உளவு பார்க்கிருர். தீவிரமான சோதனே நடக்கிறது. ஜிந்தாலாவின் பள்ளியறையில் கொட்டிக் கிடந்த பால் நஞ்சு கலந்தது என்று டாக்டர் அத்தாட்சியளித்திருக்கிருர். சென்னே மாவட்டத்

தலைவராகப் புதிதாக வந்திருக்கும் மார்கன் துரையவர்கள் வழக்கை ஆராய்கிறார். ரம்பாவின் கணவர் ராஜம் சிறையில் இருக்கிறார். ரம்பாவைப் போலீஸார் தேடுகின்றனர். வெகு விரைவில் வழக்கு விசாரணைக்கு வரும்...'

கண்ணால் காணும் காட்சிகளையும், கருத்தில் தோன்றும் கற்பனைகளையும் கலக்கும்போதுதான் காவியம் உருவாகின்றது. ஆனால், கற்பனைத் திறம் அற்ற எழுத்தாளர்களுக்குக் காட்சிகள் பயன் படா. காட்சிகளில் கருத்தூன்றாதவர்கட்கு கற்பனைகள் தோன்றுவது இல்லை.

—ம. பொ. சி.

''ஹே கிருஷ்ணா, கிருஷ்ணா, நீதான் என் மானத்தைக் காக்க வேண்டும். இதை யார் எழுதினது? இது யார் சூது?'' என்று சேட் கண் கலங்கிப் பிரார்த்தித்தான். அப்போது செல்லம் வந்து, ''சேட்ஜீ, நானே தங்கள் மானம் காப்பேன். செல்லத்தை நம்பும். 'அரட்டை' ஆசிரியர் எனது நண்பர்'' என்றாள்.

''செல்லம், இந்த வழக்கு முதிரக் கூடாதம்மா. இதை எப்படியாவது மறைத்துவிட வேண்டும். செல்லம், உனக்கு வேண்டியதைத் தருகிறேன்.''

''அப்படிச் சொல்லுங்கள், சேட்ஜீ. எனக்கும் தங்கள் பெயரால் கொலை வழக்கு நடப்பது பிடிக்கவில்லை. எனக்கு இரண்டு காரியம் செய்தால் இந்த வழக்கை மறைக்க நாளாயிற்று. ஒன்று, ரம்பாவை இனி ஸ்டுடியோவிற்குள் விடக்கூடாது. அடுத்தது, சாமுண்டிக்கு நீர் இரண்டாயிரம் ரூபாய் லஞ்சம் தரவேண்டும்.''

அப்பொழுது சப் - இன்ஸ்பெக்டர் சாமுண்டியும் வந்து சேர்ந்தான்.

ஜிந்தா: மிஸ்டர் சாமுண்டி, என் மனம் பதறுகிறது. 'அரட்டை'யில் வந்த செய்தி என்னைத் திடுக்கிடச் செய்தது.

சாமு: 'அரட்டை'க்குப் புளுகுவதே வேலை. பயப்படவேண்டாம், சேட்ஜீ. நானும்பிசகு செய்தேன். நீங்கள் தான் என் வேலையையும் காப்பாற்ற வேண்டும்.

ஜிந்தா: என்ன நடந்தது? ரம்பா எங்கே?

சாமு: கேளும் உளவை: அன்று நானும் செல்லமும் மெரீனாவில் பேசிக்கொண்டிருந்தோம். யாரோ ஒருவன் எங்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தான்; அவன் எப்படியோ எங்களைப் போட்டோ பிடித்து விட்டிருக்கிறான். அவன் மேல் எனக்குச் சந்தேகம் ஏற்படவே, அவனைக் குறித்து விரைந்தேன். அவன் ஒரு மோட்டாரில் ஏறினான். அந்த மோட்டார் எண் 2500; ரம்பாவின் கார் எண்ணே! நான் சட்டென்று மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு அதைத் தொடர்ந்தேன். சுற்றி வளைத்து மோட்டார் ஸாந்தோம் பங்களா ஒன்றில் நின்றது. அந்த நபர் ஒரு வாலிபன். அவன் இறங்கி வாசலில் மின் மணி அடித்தான்; உள்ளிருந்து ஒரு டவாலி வந்தான்; வாலிபன் டவாலியுடன் உள்ளே சென்றான். பிறகு எல்லாம் மௌனம். நான் புலன் விசாரித்தேன். அந்த வீட்டில் இருந்தவர் தான் மிஸ்டர் மார்கன் ஐ. ஸி. எஸ். அவர் உலகைச் சுற்றினவராம்; சிறுவயது முதல் சீமையிலேயே படித்தவராம். பம்பாயில் கலெக்டர் வேலை பார்த்தவராம். சென்னை குற்ற வழக்குகளை விரைவாகப் பைசல் செய்ய இங்கே அவரை சர்க்கார் அனுப்பி யிருக்கிறதாம். இன்னும் ஓராண்டு சென்னையில் அவருக்கு அலுவலாம்.

ஜிந்தா: நானும் கேள்விப் பட்டேன். அவர் அசல் ஐரோப்பியப் பண்புடையவர். தமிழும் தெரியுமாம்.

சாமு: அவர் கண்டியில் பிறந்தவராம்; அவர் தமக்கை சென்னையில் கலைத்தொண்டு செய்தவளாம். இப்போது அவருடனே இருக்கிறாளாம். பெற்றோரும் உடனிருக்கின்றனராம். ஏதோ மர்மமிருக்கிறது – அவர் வீட்டுக்குள் யாரையும் விடுவதில்லை. நான் கூடப் புக முடியவில்லை.

ஜிந்தா: ரம்பாகூடக் கண்டியில் பிறந்தவளே. எனக்குச் சந்தேகமாயிருக்கிறது. நான் அவரைப் பேட்டி காண்பேன்; அப்போது உண்மை துலங்கும். அவர் மிகவும் நேர்மையான கனவானாம். லஞ்சமும் வஞ்சமும் அவரிடம் செல்லாவாம். நமது வழக்கைக்கூட அவரே கவனிப்பதாகக் கேள்வி. இந்த வழக்கு எனக்குத் தலையிடியாக வந்தது. இதைக் கொலை வழக்கென்று குறித்தது பிசகு. இது கலை வழக்கு—வலை வழக்கு— இதன் மர்மத்தை அந்த வாலிபனே கண்டுபிடித்துவிட்டானாம். எப்படியாவது இந்த வழக்கை அமுக்கிவிட வேண்டும். செல்லத்திடம் நீர் சொன்னபடி இதோ ரூபாய் இரண்டாயிரம், பெற்றுக்கொள்ளுங்கள்.

"ஜிந்தாலால், இந்த விஷயம் வெளியே வரக்கூடாது, கவனம்!"

என்று எச்சரித்து எஸ். ஐ. சாமுண்டி எழுந்து தெருவில் காலை வைத்தான். இரண்டு போலீஸ் சேவகர்கள் 'கலெக்டர் உத்தரவு' என்று அவனைக் கைது செய்து, அப்படியே மோட்டாரில் ஏற்றி அழைத்துச் சென்றனர்.

ஜன்னல்வழியே இதைப்பார்த்த செல்லம் பதறிப்போய் ஜிந்தாலாலிடம் சொன்னாள். ஜிந்தாலால் லீலாவிடம் ஓடினான். செல்லம் அமைதியிழந்தாள். அவள் மனத்தில் விசனப் புயல் வீசியது. ஒன்றுந் தோன்றாமல் அவள் உடனே சைக்கிளில் ஏறித் தான்குடியிருந்த வீட்டிற்குச் சென்றாள். வாசலில் ஒரு போலீஸ்காரன் காத்திருந்தான். அவனைக் கண்டதும் செல்லம் அஞ்சித் தளர்ந்தாள். போலீஸ்காரன் அவள் கையிலும் "உடனே ஆஜராக வேண்டும்; கலெக்டர் உத்தரவு" என்ற சர்க்கார் உத்தரவை நீட்டினான்.

13. யார் இந்த மார்கன் துரை?

ஸாந்தோம் டவர் மாளிகை பற்றி பட்டணத்தில் எல்லாருக்

கும் தெரியும். இதுதான் கலெக்டர் மார்கன் துரையின் பங்களா. மூன்ருவது மாடியில்தான் மார்கன் குடும்பம் உள்ளது. அவர் மனைவி மாதவி, மகன் ஜயசிலன், முதிய தாய் தந்தையர் உள்ளனர். சமீபத்தில் அவர் அக்காளும் வந்திருக்கிருள். இவர்கள் யார்? கேட்டால் வியப்பீர்கள். இதோ, கலெக்டரும் அவர் அக்காளும் பேசிக் கொள்கிருர்கள்:

மார்கன்: அக்கா, தெய்வம் தான் நம்மைக் கூட்டி வைத்தது. என் கதையை நினைத்தாலே வியப்பாயிருக்கிறது.

ரம்பா: சொல்லு, தம்பி விவரமாக. மெர்ரீ எஸ்டேட்டிலிருந்து நீ ஸிம்ஸன் துரைமகனுடன் சீமைக்குச் சென்று கேம்பிரிட்ஜில் படித்தாய். உனக்குத் தங்கப்பா முதலில் பணம் அனுப்பினுர்; பிறகு அவர் மாயத்திற் சிக்கி எல்லாம் இழந்து எங்கோ போய் விட்டார்.

மார்கன்: எங்கும் போகவில்லை. எல்லாரும் திருப்பதியிலிருந்து வருவார்கள். அந்தக் கதை பிறகு. என் கதையை முதலில் கேள்.

"சொல்லுடா, மகனே" என்று முதிய பெற்ருேர்களான நாகப்பனும், வீராயியும் வந்து உட்கார்ந்தார்கள்.

மார்கன்: நான் முதலில் மெட்ரிகுலேஷன் தேறினேன். எனக்கு பிரெஞ்சிலும் ஆங்கிலத்திலும் நல்ல மார்க்கு. சிம்சன் துரையே எனக்கு உதவிச் சம்பளம் தந்தார். அத்துடன் எனது விஞ்ஞான அறிவிற்காக ரூதர் போர்டு ஏற்படுத்திய சன்மானமும் கிடைத்தது. ஆதலால் நான் தங்கப்பாவின் பணத்தை எதிர்பார்க்கவில்லை. அவரிடமிருந்து ஒரு பரிதாபக் கடிதம் மட்டும் வந்தது. நம்மை வளர்த்த அன்னை இறந்ததும், தங்கம் மாய வலையில் சிக்கி மெலிந்ததை அறிந்தேன். லண்டனுக்குச் சென்றது முதல் நான் ஆங்கிலமே பேசினேன்; ஆங்கிலப் பண்பிலேயே தோய்ந்தேன். ஆனுல் என் உள்ளத்தில் தமிழ்ப் பண்பும், தமிழ்ப் பெரியார் வளர்த்த அரிய கலைப் பண்பும் துடிக்கின்றன. எனக்குக் கடவுளிடம் நம்பிக்கையுண்டு. நான் உள்ளமட்டும் யாருக்கும் தீங்கு செய்யாமல், என் மனச்சாட்சியை மீருமல், எல்லாருக்கும் நலஞ்செய்து வாழ வேண்டும்.

வாய்மை தூய்மை, நன்மை— இம் மூன்றும் என் சுருதி வாக்கியங்கள்— இந்த மூன்றும் எனக்கு வழி காட்டின. நான் தனிமையை விரும்பினேன். தனிச் சிந்தனையில் ஆழ்ந்து உலகை நோக்கினேன்; மனிதர் இயல்பை நோக்கினேன். சொல்லும் செயலும் நினைவும் உணர்வும் தூய்மையான மனிதனைத் தேடினேன், தேடினேன். நான் கேம்பிரிட்ஜ் பி.ஏ. பட்டம் ஏற்றதும் ஐ. ஸி. எஸ் வகுப்பில் சேர்ந்து படித்தேன். அப்போது தான் ஒரு மனிதனைக் கண்டேன் – சத்யார்க்கா— இவர் தென்னுட்டு மகான்; பல மத ஆராய்ச்சியாளர்; பன்மொழிப் புலவர்; உள்ளம் உருகும் கவி பாடி உலகின் மதிப்பைப் பெற்றவர். அவர் உலக யாத்திரை செய்து கொண்டு லண்டனுக்கு வந்தார்; லண்டன் அத்யாத்ம சங்கம் அவரை வரவேற்றது. அவர் லண்டனில் பத்துப் பிரசங்கம் செய்தார். எல்லாம் கேட்டேன்; என் மனம் மாறியது. அதுகாறும் புற மனிதனுயிருந்த நான் உள் மனிதனுனேன். தியானம் நிலைத்தது; மனிதனுள் மனிதன் இருக்கிருன்-அவனே மனத்தில் நினைக்கிருன். அவனே அந்தந்த மனிதனுக்கு இசைந்த பண்ணும் பயனும் வகுத்து எல்லாம் நடத்துகிருன். மனிதனைச் சரியாக அறிந்தால் தெய்வத்தை அறியலாம், மனித வாழ்வைச் சரியாக வாழ்ந்தால் தெய்வ வாழ்வு கிடைக்கும் என்பதை அவரால் உணர்ந்தேன்.

ஐ. ஸி. எஸ். பரீட்சைக்குக் குதிரைச் சவாரி பழகினேன். ஒரு நாள் குதிரை இடக்குச் செய்

தது; நான் கீழே விழுந்தேன். கேம்பிரிட்ஜ் கல்லூரியில் பயின்ற ஒரு மாணவி என்னை வைத்தியசாலைக்கு எடுத்து வந்து பரிவுடன் போற்றிப் புண் ஆற்றி அன்புகாட்டினாள். அவள் அழகு மட்டும் அன்று, அந்த அழகான மேனியில் அருள் உள்ளம் துடித்தது. என் அன்பினால் அந்த அருளை அணைந்தேன். நாங்கள் இருவரும் மனச்சாட்சியே சாட்சியாகத் திருமணம் புரிந்து கொண்டு இன்றும் இன்புற வாழ்கிறோம். அதோ, என் மாதவி உங்களுக்கு விருந்து தயாரிக்கிறாள்.

ரம்பா: தம்பி, உன் கதை இனிமையாயிருக்கிறதே....! என் கதையைப் போல அதில் சோகச் சித்திரமே இல்லையா? உன் வாழ்வு நூற்றுக்கு நூறு இன்பமா? நீ இந்தியாவுக்கு எப்படி வந்தாய்? அப்பா அம்மாவை எங்கே கண்டாய்? முருகனை நீ எப்படி மார்கன் ஆனாய்?

மார்கன்: அக்கா, உலக வாழ்வு கால வெள்ளத்தில் மிதந்தோடுகிறது. அந்த வெள்ளம் மேடு பள்ளங்களில் தாவித்தாவி, இன்ப துன்பக் கரைகளூடே செல்லுகிறது. நான் மாணவனாயிருக்கும் போது எத்தனையோ போட்டி, பொறுமை, வஞ்சத்திமிர்களை எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. வறுமையுடன் வாதாடவேண்டி யிருந்தது. எனக்கு மாதச் செலவு இருநூறு ரூபாய் ஆனது; ஸிம்ஸன் ஐம்பதே உதவினார். சர்க்கார் உதவி ஐம்பது; மீதி நூறு ரூபாயை என் உழைப்பினால் ஈட்டிப்பிழைத்தேன். அப்போது நான் பட்ட சிறுமைகள் பலவாம். நான் குதிரை ஏறி விழுந்தபோதே மானிட வாழ்வின் அநித்தியம் புலப்பட்டது. ஆதலால் எனக்கியன்ற நன்மைகளைச் செய்வதெனத் தீர்மானித்தேன். என் பெயர் முருகன். என்னை மார்கன் என்று ஸிம்ஸன் அழைத்தார். தங்கவேலுவும் அதையே விரும்பினார். எனக்கு மகத்தான உதவி செய்த அவர்களுக்காகவே மார்கன் ஆனேன்- மார்கன் என்றால் சன்மார்க்கன் என்பது பொருள்.

ரம்பா: நல்லது, உன் மாதவியின் கதை சொல்லவில்லையே? நீ இந்தியாவுக்கு எப்படி வந்தாய்?

மார்கன்: மாதவி ஒரு மேதாவி. கேம்பிரிட்ஜில் பி. ஏ. தேறினாள். அவள் தாவர ரசாயன சாத்திரங்களிலும் வைத்திய சாத்திரத்திலும் புலமை பெற்றவள். இந்தப் பங்களாவில் அவள் புலமையே பூ நகை புரிகிறது. அவள் ஊர் ஜ்வாலாப்பூர்.

மாதவி: அது முன்னே. இப்போது இவர் உள்ளமே என் வீடு, நாடு, ஊர் எல்லாம்- அவர் அன்பே என் அன்னை; அவர் அறிவே என் அப்பா; அவரே என் உயிர்.

ரம்பா: இந்த இருபதாம் நூற்றாண்டில் இப்படிக் கணவனுடன் இணைந்த மனைவிக்கு வணக்கம். மாதவி, நீயே எங்கள் குடும்பத்திற்குச் சீதேவி. முருகா, நீங்கள் சீமையிலிருந்து வந்தபோது சண்டை நடந்ததே?

மார்கன்: உலகப்போர் நடந்தது; கண்ணியும் குண்டும் இங்கிலாந்தையும் பிரான்ஸையும் நாசப்படுத்தின. நான் வந்த கப்பலில் குண்டு விழுந்தது; பாதிப் பேர் இறந்தனர். ஏதோ ஒரு சக்தி எங்களை எதற்கோ காப்பாற்றியது. நாங்கள் அதிவிரைவாக ஒரு படகில் ஏறினோம்; மார்சேல் வந்தோம். எங்களிடம் ஒரு தம்படியில்லை. இருவரும் ஒரு கப்பலில் வேலைக்கு அமர்ந்தோம். அந்தக் கப்பல் கெய்ரோ வரையில் வந்தது. அங்கே எனது நண்பர் ஒருவரைக் கண்டேன். அவர் என்னுடன் கேம்பிரிட்ஜில் படித்தவர். அவர் உதவியால் விமானத்தில் சென்னை வந்தேன். அப்போதே ரம்பாவின் நடன விளம்பரங்களைப் பார்த்தேன். என் தங்கை லக்ஷ்மியின் முக சாடையிருந்தது. நீதான் ரம்பா என்பதை அப்போது அறியேன். இப்போதே அறிந்துமகிழ்ந்தேன். நான் முன்பே டில்லிச் சர்க்காருக்கு மனுச் செய்திருந்தேன். மந்திரிகளையும் பார்த்தேன். அப்போதுதான் இடைக்கால மந்

திரி சபை ஏற்பட்டது. அப்போது இந்தியா உரிமைப் போர் புரிந்தது. லார்ட் வேவல் என்னைத் திரிகோணமலைக்கு ஓர் அலுவலாக அனுப்பினர். நான் சென்னையிலிருந்து உத்தியோக உடையுடன் இலங்கைக்குப் பறந்தேன். ஓராண்டு இலங்கையில் வேலை செய்தேன். இலங்கை இந்தியப் பிரச்னைகளில் ஈடுபட்டுழைத்தேன். இந்தக் காலமே, கண்டியில் மாவலிக்கங்கையில் விழ்ந்து மறைந்த நமது பெற்றோரைத் தேடிக் கண்டுபிடித்தேன்.

ரம்பா: அம்மா, நீங்கள் எப்படி உயிர் தப்பினீர்கள்? உங்களைக் காலவெள்ளம் விழுங்கிவிட்டதென்றேயிருந்தோம்.

வீராயி: அதை ஏன் கேட்கிருய், மகளே! என் வாழ்க்கையெல்லாம் கண்ணீர் வெள்ளமே. நானும் நாகப்பனும் வெள்ளத்திலே விழுந்து அலைமோதிப் பாறையில் அடிப்பட்டு எப்படியோ குண்டசாலைக் கரையில் விழுந்தோம். குண்டசாலைத் தொழிற் கல்லூரி மாணவிகள் அப்போது அங்கே வந்திருந்தார்கள். அவர்கள் எங்களைக் காப்பாற்றினுர்கள். மயக்கம் தெளிந்து புண் ஆறி எழுந்து நடக்க ஒரு மாதமானது. எங்களுக்கு வாழ்க்கை வெறுத்துப் போனது. நாங்கள் நாவலப்பட்டிக்குப் போனேம். நாகப்பன் நல்லவனுன்.

நாகப்பன்: முருகன் என் கண்ணைத் திறந்தான். கள் மயக்கத்தை ஒழித்தான்.

மார்கன்: ஆத்ம ஜோதியில் இவர்கள் படத்தைப் பார்த்துத்தான் அங்கே சென்றேன்- கண்டேன், என்னைப் பெற்று வளர்த்த தெய்வங்களை. என்னுடன் வைத்து வழிபடுகிறேன்.

ரம்பா: ஆச்சரியம். நீ பெரிய புண்ணியவானப்பா. கடவுள் நம்மை எப்படிக் காத்தார்....! ஓம் சிவம்....! பிறகு நீ எப்படிச் சென்னைக்கு மீண்டாய்?

மார்கன்: இலங்கையிலிருந்து நான் டில்லிக்கு வந்தேன். அங்கிருந்து வங்காளம், உத்தரப் பிரதேசம், பீஹார், ஆந்திரா மாகாணங்களில் அலுவல் பார்த்த பிறகு, இப்பொழுதுதான் என்னைச் சென்னைக்கு மாற்றினுர்கள். இங்கே வந்ததுமே என் ஒற்றரை அனுப்பி ரம்பாவைப் பற்றி விசாரிக்கச் செய்தேன். ஏனெனில் உன் படத்தைப் பார்த்ததும் நீயே என் அக்காள் என்பதை அறிந்தேன். மிச்சக் கதையை அதோ அந்த வாலிபன் சொல்லி முடிப்பான். வா, ராமேஷ்!

ராமேஷ்: நான் யார் தெரியுமா? ரம்பாதேவிக்கு இன்னல் இழைத்த செல்லம்மாளின் மகனே நான்—அனைவரும் அதிசயப்படுவீர்கள். என் தந்தை பம்பாயில் எஞ்சினீயராயிருக்கிருர். இதோ வருவார்; கலையரசி ரம்பா, ரம்பா விலாசம் சென்று ராஜனைப் பார்த்தாள்; ராஜன் சந்தேகப் பேர்வழி; அவன் அவளை அலட்சியம் செய்யவே, ரம்பா தனது மோட்டாரை விரைவாகச் செலுத்திக் கடற்கரைக்கு வந்து குமுறும் அலைகளில் இறங்கிஞள். அப்போதுதான் நானும் ஜவானும் அங்கே உலாவினேம். நாங்கள் ரம்பாவை அலைகடலினின்றும் காத்து, மோட்டாரில் கலெக்டர் வீட்டுக்கு அழைத்து வந்தோம்.

மார்கன்: அக்கா, என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? கடலுக்குத் தமிழை விழுங்குவதே வேலை. சங்கத் தமிழை விழுங்கிய கடல் உன் கலைச் செல்வத்தை விழுங்கி விடவில்லை. நல்ல வேளையாக விதி உன்னைக் காத்தது. வாழ்வில் எத்தனையோ இடர்களும் அபாயங்களும் வரும். அவற்றையெல்லாம் சமாளித்துச் செல்வதே வீரம். அபாயத்துடன் போர் புரிந்து வெல்வதே ஆண்மை. அன்பினல் அதர்மத்தை வெல்வதே பெண்மை!

ராமேஷ்: இனியென்ன, எல்லாம் இன்பமே. இனி எல்லாரும் கூடி வாழ்வோம்.

ரம்பா: இன்பம் எங்கே, ராமேஷ்? உன் அம்மாவின் மனம் திருந்த வேண்டும்; இந்த வழக்கு ஒழிய வேண்டும்.

மார்கன்: திருந்தி விட்டது, அக்கா. இதோ இந்த வழக்கு கோர்ட்டுக்குப் போகாமலே சுகமாக முடிகிறது. உனக்கே வெற்றி. இதோ பார்!

உடனே மார்கன் துரை 'போனை' எடுத்து, "யாரங்கே? இன்ஸ்பெக்டர், ராஜனை விடுதலை செய்து மோட்டாரில் அழைத்து வாரும். லீலா ஸ்டுடியோவிலிருந்து ஜிந்தாலால், லீலாதேவி, செல்லம்மாள், எல்லோரையும் அழைத்து வாரும் ஜல்தி!" என்று உத்தரவு பிறப்பித்தார்.

ரம்பா: தம்பி, இன்னோர் உதவி செய்ய வேண்டுமே. உனக்கு நாடெல்லாம் தெரியுமே — என்னை மகள்போல வளர்த்த மாயாதேவி எங்கே? எனது ரம்பா விலாசின் மூல புருஷரான ரங்காச்சாரி எங்கே? ஆனந்தா எங்கே? என்னையும் உன்னையும் அன்புடன் போஷித்த தங்கவேலு எங்கே? அவர்களையெல்லாம் பார்க்க வேண்டும்.

ராமேஷ்: அம்மா, எல்லாரும் திருப்பதியில் யோக சமாசத்தில் இருக்கிறார்கள். பிரம்மானந்த யோகி அவர்களுக்கு வழிகாட்டி, தியான நிஷ்டை காட்டி நடத்துகிறார். இதோ தந்தி பறக்கிறது. அவர்களும் வருவார்கள். உங்களை யாரோ சிவப்பி–கறுப்பி என்றாளாமே, அவளே முத்தம்மா. அந்தக் கிழவனே தேனிக் கங்காணி. இருவரும் ஏழைகளாகிப் பிச்சை எடுத்துச் சென்ற மாதமே இறந்தனர்.

14. பிரிந்தவர் கூடினால்...

சுழல் நாற்காலியில் கலெக்டர் மார்கன் வீற்றிருந்தார். அவர் முன் கைதிக் கோலத்தில் நின்

றனர் சப் இன்ஸ்பெக்டர் சாமுண்டியும் திருமதி செல்லமும். சாமுண்டி பெற்ற லஞ்ச வழக்குகள் அம்பலப்படுத்தப் பட்டன. செல்லம் பாலில் விஷம் கலந்த ரகசியமும், பொய்க் கடிதம் டைப் செய்து அவள் ராஜனுக்கு எழுதிய குற்றமும் அவிழ்க்கப் பட்டது. இருவரையும் பெரிய மனசு கொண்டு துரை மன்னித்தார். செல்லம் கண்ணீர் பொங்க ரம்பாவிடம் மன்னிப்பு வேண்டினுள்.

மார்கன் செல்லத்திடம் அவள் மகன் ராமேஷை ஒப்படைத்தார்; அத்தோடு அவளுடைய முதல் கணவனுன எஞ்சினீயருடன் அவள் மறுபடியும் கூடி வாழப் பணித்தார். பிறகு ரம்பா-ராஜன் இருவரையும் ஒன்று சேர்த்து வைத்தார்.

ஜிந்தாலால் – லீலா ஜோடியின் முகங்களில் அப்பொழுதுதான் அமைதி ஊர்ந்தது.

மாயாதேவி, சங்கரன், ரங்காச்சாரி, ஆனந்தா, தங்கவேலு ஆகியோரும் முடிவுக் கட்டத்தில் வந்து சேர்ந்து விட்டார்கள்! ஆஹா, பிரிந்தவர்களை ஒன்று கூட்டிவிட்ட இந்த அற்புத நிகழ்ச்சிக்கு ஈடேது, இணையேது?

15. ஆனந்த நடனம்

ஆம்; உண்மை வெல்லும்; தூய்மை துலங்கும்; அன்புக்கு அழிவில்லை.

பிரிந்தவர்கள் அனைவரும் ஒன்று கூடினர். அனைவரின் மனப்புயலும் ஓய்ந்து தென்றல் பண்பாடுவதற்கு மூலகாரணமான மார்கனைப் புகழ்ந்தது ஊரும் உலகமும். அவருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், அன்றைக்கு லீலா ஸ்டுடியோவில் விருந்து நடந்தது. அப்பொழுது இந்தப் பாட்டு ஒலி பெருக்கியின் மூலம் கான மழை பொழிந்து கொண்டிருந்தது.

(இராகமாலிகை) (ஆதிதாளம்)

கண்ணா கருணை முகில் வண்ணா— எம்மைக்
காக்கும் மனமோகன ரமணா
பண்ணார் குழலிசைத்து வருவாய்— உன்
பரம சுகநிதியைத் தருவாய்— (கண்ணா)

வஞ்சப் பூதகியை வதைத்தாய்— மாய
வண்டிப் பேயை எட்டி உதைத்தாய்
நஞ்சப் படமெடுக்கும் பாம்பின் —மீது
நர்த்தனம் செய் நந்தபாலா (கண்ணா)

ஆயச் சிறுவருடன் கூடி —விளை
யாடிப்பாடி வரும் அழகா —உன்னைத்
தாயன்புடனே கட்டித்தழுவ —மனத்
தாகந்துடிக்கு தடா குழகா (கண்ணா)

கொல்லக் கொடுமை செய்த மாமா —மாயக்
குத்திக் குமைத்த பரந்தாமா—
செல்வ ருக்மிணி சத்தியபாமா —உடன்
செங்கை கோத்துலவும் சியாமா (கண்ணா)

வீர விசயனுக்குக் கீதை—சொல்லி
வெற்றியளித்த பரஞ்சோதி
பாரத தேசத்தின் குருவே —நல்ல
பக்தர் நெஞ்சில் வளர்திருவே! (கண்ணா)

(முடிந்தது.)

விமர்சனம்:

மங்கையர் திலகம்

'டைரக்ஷன் - பிரசாத்' என்ற அந்த ஒருவரிக் குறிப்புப்போதும், 'மங்கையர் திலகம்' திரைப்படத்திற்குச் சிபாரிசு சொல்ல. 'மங்கையர் திலகம்' ஒரு சிறந்த படம்.

அண்ணியின் மகிமை, சகோதர வாஞ்சை, பிள்ளைப் பாசம் ஆகியவற்றைச் சித்திரித்துக் காட்டும் படங்கள் பல தமிழிலேயே இதற்கு முன் வந்திருக்கின்றன. அப்படியிருக்க, 'மங்கையர் திலக'த்தின் கதைக்கு ஏன் இப் படத் தயாரிப்பாளர்கள் மராத்தி மொழியைச் சரணடைந்தனரோ? மொழிப் பிரச்சினை இங்கு முக்கியமல்ல—அதற்காகக் கதையில் புதுமை இருக்க வேண்டாமென்று சொல்ல முடியுமா?

'மங்கையர் திலக'த்தின் வரலாற்றிலே சோகக் கட்டங்கள் அதிகம். கதைக்கு முக்கிய பாத்திரம் அண்ணி. அந்தப் பாகம் திருமதி பத்மினிக்கு அளிக்கப்பட்டுள்ளது. அற்புதம்! அற்புதம்!! அற்புதம்!!! அண்ணன் பாகம் திரு எஸ். வி. சுப்பையாவுக்கு. 'வள்ளியின் செல்வ'னில் சந்தித்த சுப்பையாவை இதிலும் கண்டிருக்கலாம் - ஏனோ ஏமாற்றப் பட்டிருக்கிறோம். தம்பியாக வரும் பையன் அமர்க்களப்படுத்துகிறான்.

பெரிய தம்பியாக வருபவர்தான் 'சிவாஜி.' வசனங்கள் விஷயத்தில் வழக்கம்போல் அவருக்கு முதல் மார்க்குத் தர வேண்டியதுதான். அவர் மனையாட்டியாக திருமதி எம். என். ராஜத்தைச் சந்திக்கிறோம். திருப்தி நிலவுகிறது.

பிழைத்தோம்— 'செல்லப் பிள்ளை'யில் கண்ட தங்கவேலுவை நாம் இங்கு காணவில்லை. அவருடைய கூத்துக்கு டைரக்டர் 'ஹால்டான்' போட்டு விட்டாரோ? ராகினியும், சாரங்கபாணியும் வந்து போகிறார்கள், படத்தில்.

பெண் குலத்திற்குப் படிப்பினை சொல்லும்வகையில் அமைந்திருக்கும் 'மங்கையர் திலகம்' பிரசாத், பத்மினி இருவருக்கும் மற்றுமொரு வெற்றி!

—பி. எஸ். ஏ.

ஐயோ பாவம், கிளிஸரைனுக்கு அதிக வேலை போலும், இந்தக் கட்டத்திலே!
— நான் பெற்ற செல்வம்

குலேபகாவலி

அந்தக் குலேப்பூவுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும். குலேப்பூ இல்லையென்றால், திருமதி டி. ஆர். ராஜகுமாரியின் நடிப்பையோ, அல்லது அமர்க்களமாகத் தமுக்கடிக்கப்பட்ட அந்தப் புலிச் சண்டையையோ நாம் படத்தில் கண்டிருப்போமா? வாழ்க அந்தப் பூவும் புலியும்! (பதட்டப்பட்டு விடாதீர்கள்-படத்தில் மட்டுந்தான் மேற்படி புலி சாகடிக்கப் பட்டது.)

'ஊரெங்கும் ஒரே பேச்சு' என்ற கொட்டு முழக்கோடு 'குலேபகாவலி' திரைப்படச் சுவரொட்டிகள் புன்னகை புரிகின்றன. படத்தில் எம். ஜி. ராமச்சந்திரன் என்ற பெயர் காட்டப்பட்டவுடன், ரசிக மகாஜனங்கள் கைதட்டி ஆர்ப்பரிக்கின்றனர். படத் தயாரிப்பாளர்கள் எதிர்பார்த்தது, எதிர்பார்ப்பதெல்லாம் இத்தகைய விளைவைத்தானே?

டி. ஆர். ராஜகுமாரியைப் புது உருவில் இப்படத்தில் நாம் சந்திக்கிறோம். அவருடைய 'மேக்கப்' வெகு நேர்த்தி. அவருக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் கட்டங்கள் அதிகம். ஆமாம், அதனால்தான் படம் ஓடுகிறது–ஓட்டமாக ஓடுகிறது.

எம். ஜி. ராமச்சந்திரனிடம் ரசிகர்களுக்கு நல்ல மதிப்பு உண்டு. அதற்குச் சோதனை இந்தப் படம். 'சிவாஜி' போல ஏன்தான் இப்படிக் கூத்தடித்துத் தொலைக்கிறாரோ?

சந்திரபாபுவுக்கு நல்ல பெயர் கிடைக்கிறது. இ. வி. சரோஜாவுக்குப் பிரகாசமான எதிர் காலம் காத்திருக்கிறது. தங்கவேலு சுகமில்லை. ராஜசுலோசனாவைப் பார்க்க அச்சமாகயிருக்கிறது. ஸ்நான கட்டத்தில்கூட ஜி. வரலட்சுமியின் பாகம் எடுப்பாக

மதுரை டி. வி எஸ். கம்பெனி சேர்மன் திரு. டி. எஸ். ராஜம் அவர்களின் மருமாள் சௌபாக்கியவதி வத்ஸலாவுக்கும், சென்னை பி. டபிள்யூ. டி. ஓய்வு பெற்ற தலைமை எஞ்சினியர் திரு. ஏ. ஆர். வெங்கடாச்சாரி அவர்களின் புதல்வர் சிரஞ்சீவி வி. ராமன் பீ. இ. க்கும். சென்னையில் 11-7-55ல் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. மணமக்களுக்கு நம் வாழ்த்துகள்.

அமையவில்லை — அவரது உண்மை வயசு, 'மேக்கப்'பையும் மீறிக் கொண்டு எட்டிப் பார்ப்பதன் காரணத்தினால்.

காட்சி சோடனைகள் அதி அற்புதம். ஒளிப்பதிவின் சிறப்பை ஒலிப்பதிவு சாப்பிட்டு விடுகிறது. தஞ்சை ராமையாதாஸ் சிரத்தையுடன் வசனங்களைத் தயாரித்திருக்கிறார். வசனத்தில் ஏற்பட்டுள்ள வரவேற்கப்பட வேண்டிய இத் திருப்பம் அவரது கவிதைகளில் ஏற்படும் நாள் என்றோ?

திரு ராமண்ணா அவர்களுக்கு 'குலேபகாவலி' ஒரு நல்ல வெற்றி—பண வசூலில்!

*

ஆசை அண்ணா - அருமைத் தம்பி

என்ன அதிசயம் பார்த்தீர்களா?—'அருமை அண்ணா-ஆசைத் தம்பி' கடைசியில் 'ஆசை அண்ணா - அருமைத் தம்பி'யாக மாறி விட்டது! ஒரு தோழரின் பெயர் 'அடிபட்டு' இருக்கும்—பாவம், அதிருஷ்டம் திசை தப்பிப் போய் விட்டது. தணிக்கைக் குழுவினருக்கு நன்றி.

கதை சேரியில் ஆரம்பிக்கிறது. 'சேரி'யின் பொருளுக்குப் படத்தில் காட்டப்படும் சூழல் தக்கபடி அமையவில்லை. உடன் பிறந்த அண்ணனுக்கெனச் சகல வகையிலும் தன்னைத் தியாகம் செய்து கொள்ளும் அன்புத் தம்பியின் கதை இது. உருக்கமான கதைப் போக்குக்கு உயிர்ப்புத் தரும் நடிக நடிகையர் இவர்கள்தாம்: கலைஞர் ஏ. பி. நாகராஜன், டி. ஆர். ராமச்சந்திரன், மாதுரி தேவி, ராஜ சுலோசனா. இந்நால்வரில் ராமச்சந்திரனுக்குத்தான் முதற் பரிசு தர வேண்டும் - ஏற்றிருக்கும் பாகம் அப்படி. திரு. நாகராஜனின் நடிப்பு கடைசியில் சிறந்து விளங்குகிறது. மாதுரியின் சொந்தப் படம் இது. சிரத்தையுடன் நடித்திருக்கிறார். குமாரி வேஷம் சகிக்கவில்லை— பாவம், மாதுரிக்கு

நடன ஆசிரியர் திரு. எம். கே. தேவராஜன் அவர்களின் சிஷ்யை பேபி சாந்தியின் நடன அரங்கேற்றம் சமீபத்தில் சென்னையில் நடந்தது. பேபிக்கு நல்ல எதிர்காலம் உண்டென்பதற்கு அடையாளமாக அமைந்திருந்தன நடனங்கள்.

சூலமங்கலம் ஆர். சரஸ்வதி, நாட்டிய கலாகேசரி திரு வழுவூர் ராமையா பிள்ளை அவர்களின் சிஷ்யை. திருமதி சரஸ்வதியின் பரதநாட்டியமும், ஒரியண்டல் நடனமும் பிரசித்தமானவை. அவற்றுள் குறிப்பிடத்தக்கது 'அனார்கலி' நடனங்கள்.

வயதும் அதிகம் ஆகிவிட்டதல்லவா? ராஜசுலோசனவுக்கு 'மேக்கப்'பில் மாத்திரமே கவனம் செலுத்தப் பட்டிருக்கிறது.

தெருவில் நடக்கும் சம்பவங்கள் கோமாளிக் கூத்தாக இருக்கின்றன. ஜமீந்தார் கதை ஒரே குழப்பம். வசனமும் பாடல்களும் சிறப்பாக இருக்கின்றன. ஜி. ஆர். ராவ் அவர்களின் டைரக்ஷனின் சிறப்புக்கு 'இல்லற ஜோதி'க்குப் பின் இந்தப் படம் எல்லை கடக்கிறது.

'பைரவி'

197213

*

செய்திகள் :

கல்பனு பிக்சர்ஸார் தங்கள் தயாரிப்புக்கு "மாங்கனி" என்று பெயர் வைத்திருந்ததை, "நானே ராஜா" என்று மாற்றி வைத்திருக்கிறார்கள். இதில் சிவாஜி கணேசன், சஹஸ்ரநாமம், பாலையா, ஸ்ரீரஞ்சனி, எம். என். ராஜம் முதலியோர் நடித்து வருகிறார்கள். கதை, வசனம் : கண்ணதாசன்.

*

செப்டம்பர் வெளியீடுகளில் டி. ஆர். ஆர். புரொடக்ஷன்ஸ் "கோமதியின் காதல"னும் ஒன்ருகும். ஆனந்த விகடன் 'தேவன்' எழுதிய இக்கதையில் சாவித்திரியும், டி. ஆர். ராமச்சந்திரனும் நடித்து வருகிருர்கள். டைக்ஷன் ப. நீலகண்டன்.

வரப்பெற்ருேம் :

'சாட்டை'

கலைஞர் திரு ஏ. பி. நாகராஜன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 'சாட்டை' என்ருெரு வார இதழ் 21–8–55 லிருந்து வெளிவர ஆரம்பித்திருக்கிறது. சுவை சொட்டும் தலையங்கம், ஆணித்தரமான அரசியல் கருத்துக்கள், தமிழரசுக் கழகச் செய்திகள் முதலியன இவ்விதழில் சிறப்புற அமைந்துள்ளன.

[முகவரி: 'சாட்டை', சென்னை-14 விலை அணு 2.]



ரௌடியாக திரு கருணுநிதி எப்போது மாறினர் என்று யோசிக்கிறீர்களா?

— டவுன் பஸ்

பாப்பா உமா

போட்டி அரங்கம்

இந்த இதழில் 'பாலா' எழுதியுள்ள 'கோஹினூர்' சிறுவர் தொடர் கதையின் கடைசியில் கூறப்பட்டிருக்கும் அந்த நாய்க்குட்டி எங்கே என்று சொல்லுங்கள். பார்க்கலாம் !

பரிசு : வழக்கம்போல்.

முடிவு தேதி : 22-9-'55

*

நேருஜியின் ரஷ்யப் பயணத்தில் நிகழ்ந்த அதிசயம் இதுவேதான் :

அன்பு வென்றது !

சரியான விடைகள் அனுப்பிய கீழ்க்கண்ட அன்புத் தம்பி தங்கைகளுக்கு 'உமா' இதழ் ஆறுமாதங்களுக்குத் தொடர்ந்து அனுப்பப்படும்.

எஸ். குமுதவல்லி, மாபுடையூர்.
சி. ரா. கணேசன், சேலம்.
எஸ். தங்கம், கிளியனூர்.
கே. அனந்தநாராயணன், ஒரத்தூர்.
ஆர். சுப்பிரமணியம், நெம்மேலி.

அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர் : ஜி. உமாபதி, எம். சி., உமா பிரிண்டர்ஸ், 4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1.

எல்லா வலி, நோவுகளையும்
மாயமாய்ப் போக்கடிக்கும்
ORIENTAL BALM
இதில் மாயாஜாலம் ஒன்றும் கிடையாது. 70 ஆண்டுகளின் அனுபவ அடிப்படையில் அமைந்த சரியான செய்முறைதான் தடவியதும் வலி, நோவுகளை போக்கடித்து இதமளிக்கச் செய்கிறது. தலைவலி, சீதளம், முடக்கு வாதம் மற்றும் எல்லா தசை வலிகளுக்கும் இன்றியமையாத நிவாரணி.
லிட்டில்ஸ்
ஓரியண்டல் பாம்